# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 27-05-1994

அன்பளிப்பு 40P


## குழந்தையிலிருந்து வயோதிபர்வரை செப்டிசீமியாவால் இறப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களில் 92 பேர் 'செப்டிசீமியா' நோயினால் மரணமடைந்துள்ளதாக யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளன. இச் செப்டிசீமியா நோயானது 4 மாதக் குழந்தையிலிருந்து 84 வயது வயோதிபர் வரையில் இம் மூன்று மாதத்தில் ஏற்பட்டுள்ளது. இதனால் இறந்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# யுத்த சூழலுக்கு மத்தியிலும் சிறப்புடன் தேசநிர்மாணப் பணிகள்

யாழ் குடாநாட்டைச் சுற்றிலும், சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் ஆளணிகளைக் குவிப்பதிலும் ஆயுதக் கிடங்குகளை நிறைப்பதிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன . அத்துடன் கடைசியாகக் கிடைத்த தகவலின்படி, வேவு விமானங்களை தாழப்பறக்க வைத்து வேவு பார்க்கும் பணிகளையும் சிறீலங்காப் படையினர் ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிகிறது. மக்களை அச்சுறுத்தும் வகையில் குடியிருப்புக்கள், சனஅடர்த்தி கூடிய இடங்கள் மீது எறிகணைத் தாக்குதல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு யுத்த சூழல் ஒன்றுக்கான அறிகுறிகள் பலம் அடைந்துவந்தபோதிலும், தமிழீழத்தில் தேசநிர்மாணப் பணிகள் எவ்வித தங்குதடங்கலுமின்றி உற்சாகத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழர்களின் சமூகச் சாபக்கேடுகளான சாதியம், சீதன முறைமை என்பவற்றிற்கு எதிரான சட்டமூலங்கள் தமிழீழ அரசு நோக்கிய அரசால் இயற்றப்பட்டு அமுலாக்கப்பட்டுள்ளன. இச்சட்டங்கள் அமுலாவதை அறிவிக்கும் சுவரொட்டிகள் தமிழீழமெங்கும் காட்சி அளிப்பதாக செய்திகள் கூறுகின்றன.

மக்கள் நலன்பேணும் பணிகளும் தமிழீழமெங்கும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தென்தமிழீழத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு வலிகாமத்தில் குடியிருப்பு ஒன்று திறக்கப்பட்டுள்ளது. மக்கள் நலன்காக்கும் அமைப்பின் பொதுச் செயலாளர் கணேசலிங்கத்தால் இக்குடியிருப்பு . திறந்துவைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்குடியிருப்பில் இரண்டு அறிவாலயங்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

மேலும், உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஊக்கமளிக்கும் முகமாக வேளாண்மை மன்னர்களுக்கான விருது வழங்கும்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மான முன்னறிவிப்பு தமிழ் அகதிகள் திருப்பியனுப்பக்கூடிய அபாயம்

- இல்லாத அமைப்பின் இட்டுக் கட்டிய கதைகளின் விளைவு
- ஐரோப்பிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கண்டனம்

1988 ஆம் ஆண்டில் ஐரோப்பிய பாராளுமன்றம் சீபெல்ட் (SEEFELD) அறிக்கையை 'சிறீலங்காவின் நிலைமைகள்' என்ற தலைப்பில் வெளியிட்டது. இந்த அறிக்கையின்வழி தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. இதனை அடிப்படையாக வைத்தே ஐரோப்பாவில் தமிழ் அகதிகளுக்குப் புகலிடம் அளிக்கும் மரபு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த சீபெல்ட் அறிக்கையை மாற்றியமைக்கக் கூடிய வகையில், ஜாஸ்கவுரோன்ஸ்கி (Jas Cawronski)அறிக்கையில் 'சிறீலங்காவின் நிலைமைகள்' பற்றி புதிய தீர்மான முன்னறிவிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

சீபெல்ட் அறிக்கையில் காணப்

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

# கிழக்கிலங்கையில் 42 வீதக் காணிகள் அபகரிப்பு சிங்களவர் குடியேற்றம் 50 வீதமாக அதிகரிப்பு

■ வட - கிழக்கு பிரிப்புக்கு முஸ்லீம் பிரமுகர் கண்டனம்

"சுதந்திரத்தின் பின்னர் மாறி மாறி வந்த சிங்கள அரசாங்கங்களின் திட்டமிட்ட குடியேற்றத்தாலும் ஆட்சியாளர்களின் அனுசரணையோடு நடைபெற்ற கள்ளக் குடியேற்றத்தாலும் கிழக்கிலங்கையில் 1921ம் ஆண்டில் 4 சதவீதமாக இருந்த சிங்களவர் 1981 இல் 24 சதவீதமாக ஏறக்குறைய 2, 50, 000க்கும் அதிகமான எண்ணிக்கையில் அதிகரித்தனர். 1981 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் 40, 000 சிங்களவர் புதிதாக குடியேறியிருப்பதாக கூறப்படுவதையும் ஏற்றுக்கொண்டால், கிழக்கு மாகாணத்தின் இனவிகிதாசாரம் சிங்களவர் 50%, தமிழர் 30%, முஸ்லீம் 20% என மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன."

இவ்வாறு கிழக்கு மாகாண முஸ்லீம் பிரமுகரான எம். ஐ. எம். முகியதீன், 'கிழக்கு மாகாணத்துக்கு தனியான மாகாணசபை உகந்த தீர்வாகுமா?' எனும் தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:

"கிழக்கு மாகாண அரசியற் பிரதிநிதித்துவத்திற்கான தொகுதி எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட போதும், அன்று அதிகாரத்தில் இருந்த தமிழ், முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களால் தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பிறப்புரிமையால் சொந்தமான பெரும்பகுதிக் காணி, நிலம் சிங்களவர் தொகுதிகளாக மாற்றப்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....




தமிழீழ மேன் முறையீட்டு நீதிமன்ற திறப்புவிழாவில்

வெள்ளைமாளிகை முன்

# இந்தியப்பிரதமர் - அமெரிக்க ஜனாதிபதி சந்திப்பின்போது தமிழர் ஆர்ப்பாட்டம்

இந்திய மத்திய அரசு தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை, ஜெனிவா அகதிகள் சாசனத்துக்கு முரணான வகையில் பலவந்தமாகத் திருப்பி அனுப்புவதற்கு ஆட்சேபனை தெரிவித்து உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் அமெரிக்கக் கிளையும், கனடிய தமிழர் சம்மேளனங்களின் கூட்டுப் பேரவையும் அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெள்ளை மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தின.

வைகாசி 19ம் திகதி இந்தியப் பிரதமர் நரசிம்மராவும், அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டனும் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே, இவ்வார்ப்பாட்டம் தமிழர்களால் வெள்ளை மாளிகை முன்பாக நடாத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

"இந்தியாவே, அமைதிக்கு சந்தர்ப்பம் கொடு" என்ற தலைப்பில் ஒரு மகஜர் ஒன்றையும் இந் நிகழ்வில் கையளித்தனர். (இம் மகஜர் இப்பத்திரிகையின் வேறொரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. )■

# நீண்ட கால யுத்தத்தையும் இனஅழிப்பையும் அனுமதிக்க முடியாது

- ஜெரால்ட் கொவ்மன் தொழிற்கட்சி முன்னாள் வெளிவிவகார நிழல் பேச்சாளர்

"சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான நீண்டகால யுத்தத்தையும், இனஅழிப்பையும் தொடர்ந்து நடத்தி வருகின்றது. இதனை உள்நாட்டுப் பிரச்சினை என்று தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. தமிழ்ப்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அரசுநோக்கிய அரசுப் பிரதேசம் ஒன்று காணப்படுகிறது. இந்நிலையில் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஒன்றுக்கு சிறீலங்கா முயல்வதே நல்லது. அதனை விடுத்து குண்டுவீச்சு, இராணுவத் தாக்குதல்கள், சுற்றிவளைப்புக் கைதுகள் காணாமல் போகின்றவர்களின் தொகையை அதிகரித்தல் போன்றவற்றை அனுமதிப்பதால் மனித உரிமை மீறல்களே அதிகரிக்க வாய்ப்பு உண்டாக்குமே தவிர, பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது."

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# சிறீலங்காவில் அரசியல் நெருக்கடி

இலங்கைத் தீவில் 17 வருடங்களாக மக்களிடை அமைதியின்மை ஏற்படவும், யுத்த விளைவுகளால் சீரழிவுகள் ஏற்படவும் காரணமாக இருந்துவரும் சிறீலங்காவின் ஆளும் கட்சியான ஐ. தே. கட்சியின் முடிவின் ஆரம்பங்கள் தொடங்கிவிட்டன என்பதை சிறீலங்காவின் அரசியல்போக்குகள் தெளிவாக்கி வருகின்றன. பௌத்த சிங்கள பேரினவாதத்தை வளர்ப்பதன்மூலம் தனது உறுதியற்ற ஆட்சியைத் தொடரலாம் என எண்ணிய சிறீலங்காவின் ஜனாதிபதி விஜேதுங்கா, "இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை என்பதே இல்லை. பயங்கரவாதமே காணப்படுகிறது" என்ற தனது கருத்துப் பெட்டகத்தைத் திறந்துவைத்தார். முற்றிலும் வெறுக்கத்தக்க விதத்தில் இனவாதத்தையே தனது அரசியல் ஆக்கினார். ஆயினும் தென்மாகாணசபைத் தேர்தலில் அவரது போக்குக்கு கிடைத்த மரண அடி, யுத்த பீதி சிங்கள மக்களையும் எவ்வாறு ஆட்டிப்படைக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியது. இதனைத் திசை திருப்புவதற்குப் போர் வெறி ஒன்றை மூட்டிவிடலாம் எனும் எண்ணத்தோடு குடாநாடு மீது பாரிய தாக்குதல் ஒன்றுக்குத் தனது பாதுகாப்புப் படைகளை ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கும் விஜேதுங்காவிற்கு "பிரேமதாசா"-வின் ஆதரவாளர்களிடை எழுந்த எதிர்ப்பு பெரும் சவாலாக மாறிவருகிறது.

பிரேமதாசாவின் சிலை திறப்பு விழாவிற்கு வராத பிரேமதாசாவின் குடும்பத்தினர் அதற்கு செலவு செய்யப்பட்ட இரண்டரைக் கோடி ரூபாவும் ஏழை மக்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம், விஜேதுங்கா பிரேமதாசாவை வைத்து அரசியல் ஆதாயம் தேட அநியாயமாகச் செலவழிக்கப்பட்ட பணம் இது என்றும் கூறிவிட்டனர். இதனால் பிரேமதாசாவின் ஆதரவாளர்களை ஒழித்துக் கட்டும் பணியில் இறங்கினார் விஜேதுங்கா. சிறிசேனகூரே முதல் லேக் கவுஸ் இயக்குனர் வரை பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் களை எடுக்கப்பட்டனர்.

இங்குதான் பிரச்சினை புதுவடிவம் பெற்றது. பிரேமதாசாவின் சண்டியன் ஆதரவாளர்களை என்ன செய்வது எனத் தவித்த விஜேதுங்கா பொலிஸ் படையைக் கொண்டு மடக்க முனைந்தார். ஆனால் சொத்தி உபாலி எனும் உபாலி ரஞ்சித் கைதானதும், ஐக்கிய தேசியக் கட்சியில் 47 பேரைக் கொலை செய்த ஒருவரும் உள்ளார் என்ற உண்மை முதல், பல ஐக்கிய தேசியக் கட்சியின் பயங்கரவாத லீலைகளை வெளியே சொல்லி வருகிறார்.

அதேவேளை சிறிசேனகூரே சொத்தி உபாலியை நிறைவேற்று அதிகாரம் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவே நியமித்தார் எனப் பகிரங்கப்படுத்தி, சொத்தி உபாலியை பிரேமதாசா உருவாக்கியவர் எனக் கூறிநிற்கிறார்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் எத்தகைய பயங்கரவாதிகளாகத் திகழ்ந்து தங்கள் பதவிகளைக் காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர் என்ற உண்மை வெளியாகிவருகின்றது.

இது ஒருபுறம் இருக்க, பிரேமதாசா ஆதரவாளர்களைக் களையெடுக்கும் விஜேதுங்கா மக்களிடம் வாக்குப் பிச்சை எடுப்பதற்குப் பிரேமதாசாவின் கொள்கைகளையே கையில் தூக்க வேண்டிய பரிதாப நிலையில் உள்ளார். 1800 கோடி ரூபாவைச் செலவழித்து சம்பள உயர்வு, வரிகள் குறைப்பு, விலைகள் குறைப்பு என ஒரு குட்டி 'பட்ஜெட்'டையே மே தினத்தன்று சிறீலங்கா ஜனாதிபதி பிரகடனப்படுத்தினார். இதனால் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை அதிருப்தி அடைந்திருப்பதாகவும் விமர்சகர்கள் கூறுகின்றனர். ஆயினும் பிரேமதாசாவின் ஆதரவாளர்களினால் தனக்கு கட்சிக்குள் பதவி இறக்கம் வராமல் தடுப்பதற்காக பிரேமதாசாவைத் தூற்றித் திரிந்த காமினி திசாநாயக்கா, றொனி டீமெல் போன்றோர்க்கு கட்சிக்குள்ளும், சிறீலங்கா அமைச்சரவையிலும் முக்கிய பதவிகளை விஜேதுங்கா வழங்க முற்பட்டு பதவியைக் காப்பாற்றுவதே தனது அரசியல் என்று உறுதிப்படுத்தி வருகிறார் விஜேதுங்கா. இவைகளின் மூலம் விஜேதுங்காவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அரசியல் நெருக்கடிக்குள் சிக்கித் திணறுவது தெளிவாகின்றது. ஆயினும் சிங்கள மக்கள் இனியும் ஐக்கிய தேசியக் கட்சியை நம்புவார்களா என்பது கேள்விக்குறியாக உள்ளது. இதனால் இந்த அரசியல் நெருக்கடி நடுவே குடாநாடு மீதான யுத்தத்தை நடாத்தி விசப்பரீட்சை செய்வதா? இல்லையா? எனத் தவிக்கும் விஜேதுங்கா தனது பிடியில் சற்றும் தளர்ச்சி இல்லை எனக் காட்டுவதற்காக விமானத் தாக்குதல்களை விரைவுபடுத்தி வருகிறார். எந்த வழியை விஜேதுங்கா கையாண்டாலும், ஐக்கிய தேசியக் கட்சியின் முடிவின் ஆரம்பம் தெளிவாகத் தெரிவதாகவே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ■

# தமிழ்க் குழுக்களின் ஏமாற்றம்

வரலாற்றை பலர் அறிந்து வைத்துள்ளார்கள்; ஆனால், அதிலிருந்து அவர்கள் பாடம் கற்கத் தவறிவிடுகிறார்கள். ஆனால், வரலாற்றுப் பாடமொன்றை மீண்டும் அனுபவத்தினூடாகப் பெற்றுக்கொள்ளும் போது அங்கலாய்க்கின்றனர். இந்நிலையில் இன்று கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களும் உள்ளனர்.

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அரசாங்கம் தயாராகிவருவதாக வெளிவரும் தகவல்கள் குறித்து, தமிழ்க்குழுக்கள் தற்பொழுது அங்கலாய்க்கத் தொடங்கியுள்ளன. இதுகுறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஈ. பி. ஆர். எல். எவ். "கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சியானது ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு திரும்பிய தமிழ்க்குழுக்களை ஏமாற்றி வஞ்சிப்பதற்குச் சமமான செயல்" எனக் குற்றம் சாட்டியுள்ளது.

அத்தோடு, 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது, இந்த வாக்கெடுப்பு ஒருபோதும் நடத்தப்பட மாட்டாது; சிங்கள மக்களை திருப்திப்படுத்தவே இந்தச் சரத்து சேர்க்கப்பட்டுள்ளது என இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தமக்கு உறுதியளித்ததாகவும் தெரிவித்துள்ளது.

சிறீலங்காவின் அரசியல் வரலாறு தமிழர்களை ஏமாற்றும் வரலாறு என்பதை இன்று சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதல்ல. சிறீலங்காவில் ஆட்சியில் இருந்த எந்த அரசாங்கமுமே தமிழர்களை ஏமாற்றாமலில்லை. தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொண்டதாகவும் இல்லை. இதில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்ற வேறுபாடே இல்லை. அன்றி ஆட்சியில் அமர்ந்த கட்சிகளுக்கு உறுதுணையாக இருந்த இடதுசாரிகள் கூட, தமிழர் பிரச்சினையில் சரியாகவோ நேர்மையாகவோ நடந்துகொள்ளவும் இல்லை.

இந்நிலையில், விஜேதுங்க அரசாங்கம் மட்டும் தமிழர் விடயத்தில் நேர்மையாக நடந்துகொள்ளும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அதுவும் முன்னைய சிங்களத் தலைவர்கள் போல் அல்லாமல் நேரடியாகவே பௌத்த பேரினவாதத்திற்குத் தலைமை தாங்க முற்படும் டி. பி. விஜேதுங்கா தமிழரின் தாயகக் கோட்பாட்டை எவ்வாறு ஏற்றுக்கொள்வார்? ஜனநாயக வழிமுறைக்கு மதிப்பளிப்பார் என இத்தமிழ்க்குழுக்களால் எதனடிப்படையில் எதிர்பார்க்க முடிந்தது?

மேலும் ராஜீவ் காந்தி, வடக்கு கிழக்கு பிரிக்கப்படாது என உறுதியளித்திருப்பினும் ராஜீவ் காந்தியுடன் உடன்பாடு செய்துகொண்ட ஜே. ஆர். ஜெயவர்த்தனா கையொப்பம் இட்ட 'மை' காயும் முன்னரே தான், வடக்கு கிழக்கு தொடர்பான சர்வசன வாக்கெடுப்பின்போது பிரிவினைக்கு ஆதரவாக பிரசாரம் செய்யப் போவதாக தெளிவாகவே அறிவித்துவிட்டார்.

அத்தோடு, எழுத்து மூலமான உடன்பாடுகளையே துச்சமென கிழித்தெறியும் சிங்கள ஆட்சியாளர்களின் வாய்மொழி உறுதியை நம்பி ராஜீவ் காந்தி உறுதி கூறினார் என்றால், அதனை நம்பிச் செயற்பட்ட தமிழ்க்குழுக்களின் அரசியல் அறிவினை எப்படி மதிப்பிடுவது?

அரசியற் சூழ்நிலை என்பது நிமிடத்துக்கு நிமிடம் மாறக்கூடியது. இன்று நெருங்கியிருப்பவர்கள் நாளை போரிடவும் கூடும். அத்தோடு அடிக்கடி மாறும் அரசியல் தலைமைத்துவம் என்பன இருக்கையில் வாய்மொழிகளை மட்டும் எவ்வாறு நம்பி ஒருபெரும் அரசியல் தீர்மானத்தை எடுக்க முடியும்? எடுத்துக்காட்டாக 1987 இல் இலங்கை -இந்திய உடன்பாட்டைச் செய்த ராஜீவ் காந்தி இன்று உயிருடன் இல்லை. ஜே. ஆர். அதிகாரத்தில் இல்லை. இந்நிலையில் ராஜீவ் வழங்கிய வாக்குறுதிகளை, ஜே. ஆர். ஒப்புக்கொண்ட விடயங்களை நிறைவேற்றுவது யார்? கேட்பவர் யார்?

இவற்றைப் புரிந்துகொள்ளாது அரசியலில் ஈடுபடுவதும், பின்னர் தமது தவறான முடிவுகளை மூடிமறைக்க ஏமாற்றிவிட்டனர்; வஞ்சித்துவிட்டனர் எனக்கூறுவதும் சிறுபிள்ளைத்தனமானதாகும். சிங்கள ஆட்சியாளர்கள் எப்பொழுதுமே நேர்மையைக் கடைப்பிடிக்கவில்லை. ஜனநாயகம் பற்றி அவர்கள் சிந்திக்கவேயில்லை. ஆகையினால் அவர்கள் தற்பொழுது மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பார்த்துவிட்டு ஏதோ புதிதாக நடந்ததுபோல் 'வஞ்சித்துவிட்டார்கள்' எனக்கூறுவது தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டதற்கும், மக்களை ஏமாற்றுவதற்கும் கூறும் விளக்கமே ஒழிய, அவர்கள் ஏதோ புதிதாகச் செய்துவிட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. ■

நன்றி: ஈழநாதம்

# வெளிநாட்டுக்கு தப்பிப் போய் 'பாதாள உலகம்' பற்றிக் கூறவிருந்தேன்

## - சொத்தி உப்பாலி தெரிவித்த திடுக்கிடும் தகவல்கள்

சிறீலங்காவின் ஐ. தே. க. அரசாங்கத்தின் ஆதரவாளர்களினால் நடத்தப்பட்டுவந்த 'பாதாள உலகம்' எனும் மனித வதைக்கூடம் பற்றிய விபரங்கள் மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கியுள்ளன.

'சொத்தி உபாலி', 'தம்மிசு' எனும் நபர்களின் துணையுடன் இரு கோஸ்டிகளாக அரசியல் கொலைகளும் குற்றங்களும் சிறீலங்காவில் நடத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதில் சொத்தி உபாலி, சிறிசேன கூரேயினதும் சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினதும் ஆதரவாளர் எனவும், இதனால் அவர்களை ஒடுக்கும் முயற்சியில் சிறீலங்காவின் இன்றைய விஜேதுங்கவின் அரசாங்கம் இறங்கியுள்ளதாகவும் தெரிகிறது. கட்டுகஸ் தோட்டையில் வைத்து சொத்தி உபாலி என்ற உபாலி ரஞ்சித்தும் அவரது சகபாடி ஒருவரும் பத்திரிகை வாங்க வந்தபோது, அதிகாலை 5. 30 மணியளவில் சிறீலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். ஆயினும் இவர்கள் எதிர்ப்பு எதனையும் காட்டாது சரணடைந்ததாக செய்திகள் கூறுகின்றன.

"என்மீது வீண்பழி சுமத்தவும், அமைச்சர் ஒருவருக்கு கெட்ட பெயர் உண்டாக்கவும் சிலர் முயற்சிக்கின்றனர். என்னை கொலை செய்ய முயற்சிக்கும் ஒருவர் இதுவரை 47 கொலைகளைச் செய்துள்ளார். ஆனால் வெளியாகி இருப்பது எத்தனை? உண்மை ஒருநாள் வெளிவரும். உண்மையே வெல்லும் அதுவரை பொறுத்திருப்போம். பொலிசார் விசாரணை செய்தால் எல்லா உண்மைகளையும் வெளியிடுவேன். கைது செய்யப்படாமல் இருந்திருந்தால் வெளிநாட்டுக்குத் தப்பிப் போய் பாதாள உலகம் பற்றித் தெரிந்த எல்லா உண்மைகளையும் வெளியிட்டிருப்பேன். நான் குற்றவாளி என்பதற்காக தலைமறைவாகியிருக்கவில்லை. எனது பாதுகாப்புக்காகவே மறைந்திருந்தேன். எந்தக் கொலையையும் நான் செய்யவில்லை. கொள்ளையடிக்கவும் இல்லை. என்மீது வீணாகப் பழி சுமத்தப்பட்டுள்ளது. நான் அநியாயக்காரனாக இருந்தால் என் கையை வெட்டியவனுக்கு மன்னிப்பு அளித்திருக்க முடியாது. அவரை வேறு யாரையோ வைத்துக் கொலை செய்துவிட்டு யாரோ கொலை செய்ததாகக் கூறியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. அவருக்கு மன்னிப்பு அளித்தேன். அவர் இன்னும் வாழுகின்றார்.

"இவ்வாறு சொத்தி உபாலி தெரிவித்துள்ளார். இவரது இவ்வாக்குமூலத்தின் மூலம் ஐ. - தே. க. அரசாங்கம் நடத்தி வந்த சட்டவிரோத படுகொலை முகாம் என வர்ணிக்கப்படும் மனித வதைக்கூடமான பாதாள உலகம் பற்றி வெளியுலகிற்கு அம்பலமாகியுள்ளது.

அரசியல் சுயநலத்திற்காக தமிழீழ மக்களை மனித வதை செய்யும் சிறீலங்கா அரசாங்கம், சிங்கள மக்களையும் அதே நோக்கத்திற்காக உயிர்வதை செய்யத் தயங்கமாட்டாது என்பதற்கு இப் பாதாள உலக விவகாரம் மற்றொரு சான்றாக உள்ளது.

சர்வதேச உலகிற்கு மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக வேடம்போடும் சிறீலங்காவின் முகத்திரை, கிழிந்து அதனுடைய சுயநலக் கோரப்பற்களின் கொடூரம் மீண்டும் வெளிப்பட்டுள்ளது. ■

# சீமேந்துக் கப்பலில் தமிழ் மாலுமிகள் கைது

சீமெந்து எடுத்துச் செல்லும் கப்பல் ஒன்று காலித் துறைமுகத்தை வந்தடைந்தபோது, அதில் பிரயாணம் செய்த இரு தொழிலாளர்களை சிறீலங்காவின் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது பொலிஸ் காவலில் உள்ள இவர்களை, கப்பல் மீளவும் திரும்பிச் செல்லும் பொழுதுதான் வெளியே விட முடியும் என துறைமுகப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் யூ. எல். எஸ். முகைதீன் தெரிவித்துள்ளதாக அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது. ■

## அன்னை பூபதி நினைவு பொதுஅறிவுத் தேர்வு

# கோகுலனுக்கு இரண்டாவது தடவை தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசு

தமிழீழத்தில், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடத்திய அன்னை பூபதி பொதுஅறிவுத் தேர்வில், குறைந்த வயதில் தோற்றி கூடுதலான புள்ளியைப் பெற்றுக் கொண்ட மாணவன் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். தமிழீழக் கல்விக் கழக நடுவப்பணியகத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வின்போதே தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசினை தமிழீழக் கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் திரு. பாலகுமாரன், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய மாணவனான செல்வன் விவேகானந்தன் கோகுலனுக்கு வழங்கினார். இவர் ஆண்டு ஐந்தில் கல்வி கற்றுக்கொண்டே ஆண்டு ஆறிற்கு நடாத்தப்பட்ட மேற்படி பரீட்சையில் தோற்றி தென்மராட்சிக் கோட்டத்திலேயே முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவர் கடந்த வருடமும் ஆண்டு நான்கில் கற்ற வேளையில் ஆண்டு ஏழுக்கான பொதுஅறிவுத் தேர்வில் தோற்றி தலைவரின் சிறப்புப் பரிசினைத் தட்டிக் கொண்டதுடன், இவ்வருடமும் தேசியத் தலைவரின் சிறப்பு பரிசினை இரண்டாவது தடவையாகவும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழீழக் கல்விப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விசேட நிகழ்வில், யாழ். கல்வி வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி, தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு. -பிரான்சிஸ் யோசேப் அடிகளார், யாழ் இந்துக்கல்லூரி அதிபர் திரு. பஞ்சலிங்கம் மற்றும் சிறப்புப் பரிசில் பெற்ற மாணவர்களின் தாயார் ஆகியோர் உரை நிகழ்த்தினர். ■

## 200 கோடி ரூபா செலவில்

# வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு ஆடம்பர வீடுகள்

கோட்டே சிறீஜயவர்த்தன புரத்திலுள்ள சிறீலங்காப் பாராளுமன்றப் பகுதியில், 200 கோடி ரூபா வெளிநாட்டு மூலதனத்துடன் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான குடியிருப்பு வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

இந்தக் குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை இலங்கை முதலீட்டுச்சபை, அமன்டாரி டெவலப்பர்ஸ் பிறைவேட் லிமிட்டட் நிறுவனத்திடம் செய்துகொண்டது. வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான ஆடம்பர வீடுகள் 4 கோடி அமெரிக்க டாலர் செலவில் கட்டப்படவுள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உள்ளதைப் போன்று, வெளிநாடுகளின் தூதுவர்களுக்கான ஆடம்பர வீடுகள் கட்டப்படவுள்ளன.

இந்த வீடுகளை வடிவமைப்பதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்களின் உதவிகள் பெறப்படவுள்ளதாகவும் 30 ஏக்கர் நிலத்தில் இந்த ஆடம்பர வீடுகள் கட்டப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்த நவீன ஆடம்பர வீடமைப்புத் தொகுதியில் நீச்சல்தடாகங்கள், நீர்விளையாட்டுக்கள், தேகப்பயிற்சி நிலையம், சுப்பர் மாக்கற்றுக்கள் போன்ற வசதிகள் அமைக்கப்படவுள்ளன. ■

# ஒப்பரேசன் யாழ்தேவியால் பாதிக்கப்பட்ட அல்லிப்பளை - புலோப்பளை மக்களுக்கு புதிய குடியேற்றம்

புலோப்பளை - அல்லிப்பளை பகுதியில் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் 44 குடிசைகள் கொண்ட குடியேற்றத்திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். அரசன் குடியேற்றத்திட்டம் என பெயர் சூட்டப்பட்ட இக்குடியேற்றத் திட்டத்தை தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் அண்மையில் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வினை தென்மராட்சி புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் திரு. கிளியன் மற்றும் கிளிநொச்சி -பளை உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயாத்துரை ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்து தொடக்கி வைத்தனர். தென்மராட்சி உதவி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கலைவாணன் தேசியக்கொடியை ஏற்றினார். அதைத் தொடர்ந்து தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. வீமன் மாவீரர் அரசனின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்தார். அதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு திரு. கரிகாலன், தென்மராட்சி சிறப்புத்தளபதி திரு. கந்தண்ணா, தென்மராட்சி உதவித் தளபதி திரு. தக்காளி ஆகியோர் குடிசைகளைக் கையளித்தனர். ■

## புளொட் குழுவினால் கடத்தப்பட்டவர்

# சுயநினைவற்ற நிலையில் அநுராதபுரத்தில் அனுமதி

மன்னார் தீவு பகுதியில் வர்த்தகர் ஒருவரிடம் பணத்தைக் கொள்ளையடித்து, அவ்வர்த்தகரை கடத்திச் சென்ற புளொட் உறுப்பினர் 22 பேர் சிறீலங்காப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடத்திச் செல்லப்பட்ட மேற்படி வர்த்தகர் மறைத்து வைக்கப்பட்ட நிலையில், சிறீலங்கா இராணுவத்தினரின் வற்புறுத்தலின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றும் இவர் சுயநினைவற்ற நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரியவருகிறது.

மன்னார் வைத்தியசாலை வீதி தேனீர்சாலை வர்த்தகரான ராமலிங்கம் பாலச்சந்திரன் என்பவர் மீது இத்தாக்குதல் நடைபெற்றதாகவும், இவரது வர்த்தக நிலையத்திற்கு சென்ற புளொட் குழுவினர் அக்கடையை உடைத்து அதில் இருந்த ஒரு இலட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்து சென்றதாகவும் இது தொடர்பாக பொலிசாரிடம் புகார் செய்த மறுதினம் இவர் கடத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது. ■

# ஜனாதிபதித் தேர்தலுக்கு 280 மில்லியன் செலவாகும்

நவம்பரில் நடைபெறவுள்ள சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கு சுமார் 280 மில்லியன் ரூபா செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவதற்கு மேலதிகப் பாதுகாப்பு மற்றும் தேர்தல் உத்தியோகத்தர் அதிகமாகத் தேவைப்படும். ஆகவே இரு தேர்தல்களையும் ஒன்றாக நடத்துவது சாத்தியப்படாது என்றும் கூறப்படுகிறது. இரு தேர்தல்களையும் வெவ்வேறு திகதிகளில் நடத்துவதற்கு 560 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம், மற்றும் வவுனியாவில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கும் தெற்கில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலுக்கும் மொத்தம் 60 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டதாக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ■

# நல்லின ஆடுகள் வழங்கப்பட்டன

வன்னி மாவட்டம் கிளிநொச்சிக் கோட்டத்தில் வறுமைக் கோட்டத்தின் கீழ் வாழும் இருபத்துநான்கு குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழு மூலம் வழங்கப்பட்டுள்ளது. ■

# பாப்பரசர் கொழும்பு விஜயத்துக்கு பௌத்த மதபீடங்கள் எதிர்ப்பு

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் விஜயத்திற்கு பௌத்த பீடாதிபதிகளின் மறைமுகமான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. இவரின் வருகை பௌத்த சிங்கள நாட்டுக்கு அவ்வளவு உசிதமானதாக இல்லையென்றும் இவரின் வருகையைத் தொடர்ந்து பல பௌத்தர்கள் மதமாற்றம் அடையலாம் என்றும் ஜனாதிபதிக்கும் பௌத்த கலாசார அமைச்சுக்கும் பௌத்த பீடங்களான அஸ்கிரிய மல்வத்தை பீடங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே அரசாங்க செய்தி தொடர்பு சாதனங்கள் இது தொடர்பாக செய்திகளை வெளியிடும்போது, மிக அவதானமாக வெளியீடு செய்யுமாறு அரசாங்கம் அவற்றை நிர்ப்பந்திக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளன.

இப்பௌத்த பீடாதிபதிகளின் எதிர்ப்பைச் சமாளிக்கும் வகையில், இப்பீடங்களைச் சேர்ந்த பீடாதிபதிகளுக்கு முதல் அழைப்பு அனுப்புவதற்கும் இவ்விஜயம் தொடர்பாக ஆலோசனை பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. ■

# ஆளும் இனமாக தமிழினம் விரைவில் மாறும் என நம்புகிறேன்

*■ பிரிவுபசார விழாவில் துணைவேந்தர் துரைராஜா*

"எமது தமிழினம் இனிமேலும் ஆளப்படும் இனமாக இல்லாமல் ஆளும் இனமாக விரைவில் வருமென நான் நம்புகிறேன். எம்மை சிங்கள பேரினவாதம் பலவழிகளில் தாக்கினாலும் நாம் எமது முயற்சியில் தொடர்ந்து செயற்பட வேண்டும்" என, கல்வி சாரா ஊழியர்களால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் பேசிய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆ. துரைராஜா அவர்கள் குறிப்பிட்டார்.

எமது யாழ் பல்கலைக்கழகம் வெறும் ஆராய்ச்சியில் மட்டும் ஈடுபடாது, அவை மக்களுக்குக் கிடைக்கத்தக்க வகையில் உழைக்க வேண்டும். எமது மண்ணில் இயற்கையாகக் காணப்படும் வளங்களைக் கொண்டு அதற்கேற்ப மனித வளங்களை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். இதற்கு பின்வரும் மூன்று காரணிகளில் அக்கறை உடையதாக இருக்க வேண்டும் என்று தனது உரையில் தெரிவித்தார்.

முதலாவதாக விவசாயம் தொடர்பான அபிவிருத்தியில் அக்கறை உடையவர்களாக இருக்க வேண்டும். இதற்கு விவசாய பீடம் அக்கறை கொண்டு செயற்பட வேண்டும் என்றும், இரண்டாவதாக பொறியியற் பீடம் இங்கு அமைக்கப்படல் வேண்டும். இதன் மூலம் இங்கு காணப்படும் வளங்களை தொழில்நுட்ப முறையில் அபிவிருத்தி செய்து கொள்ள முடியும் என்றும், இப்பீடம் எம்மத்தியில் இல்லாதவிடினும் இதை அமைப்பதற்கு தொடர்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபடல் வேண்டும் என்றும், மூன்றாவதாக கடல் வளம் பற்றிய துறையில் முக்கிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் பல தொழில் முன்னேற்றங்களை செய்யக்கூடியதாக மனித வளங்கள் உருவாக்கப்படல் வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் பல நன்மைகளை இச்சமூகம் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக கடல்வளம் பற்றிய துறையினை விருத்தி செய்வதற்காக முல்லைத்தீவில் கடல்வளம் பற்றிய பீடம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது என்று அவர் தெரிவித்தார்.

ஊழியர் சங்கங்களைப் பொறுத்தவரையில் தங்களிடையே ஒற்றுமையுடையவர்களாக இருத்தல் வேண்டும். இதன் மூலமே அவர்களது கோரிக்கைகளை வெற்றிகரமாகச் செயற்படவைக்க முடியும். மேலும் இங்குள்ள ஊழியர்கள் தொடர்ந்தும் தமக்கான பதவிகளில் தொடர்ந்து இராமல் வகுப்புகளிலும், திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றிலும் கற்று முன்னிலைக்குவர அவர்கள் பாடுபட வேண்டும் என அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தார். ■

# தேர்தலில் ஆர்வம்காட்டிய அரசு வசதிசெய்வதில் அக்கறையில்லை

## - மட்டு. மாநகர் உறுப்பினர் கவலை

"உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஆர்வம் காட்டிய சிறீலங்கா அரசு, அவை வசதியாக இயங்குவதில் ஆர்வம் காட்டுவதாக இல்லை" இவ்வாறு மட்டக்களப்பு மாநகர சபைக்குத் தெரிவான முக்கிய உறுப்பினர் கவலை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினரால் உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டு, கிழக்கு மாகாண இராணுவத் தளபதி அலுவலகம், . மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தலைமை அலுவலகம் என்பன செயற்படும் பகுதியினுள்ளே மாநகர சபைக் கட்டடமும் இருக்கிறது. இம்மாநகர சபைக் கட்டடத்தைப் புதிய இடத்திற்கு கையளிப்பதற்கான முயற்சிகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை. மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் சிறிய அறையொன்றிலேயே மாநகர சபைக் கூட்டம் நடைபெறுகிறது. அச்சிறிய அறையில் கூடுவதைவிட, வெபர் விளையாட்டரங்கில் கூடாரம் அடித்துக் கூட்டம் நடத்தியிருக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். ■

# புலிகள் ஒலிக்கும் புதுயுகத்தின் குரல்

பாலகுமாரன்

தென்னாசியப் பிராந்தியத்தின் ஒரு மூலையில் இருந்து எழும் விடுதலைக் குரல் இன்று உலகெங்கும் எதிரொலிக்கின்றது. தமிழீழத் தேசியத்தின் விடிவுக்கான போராட்டம், வரலாற்றின் இயங்கு விதிகளுக்கேற்ப வளர்ந்து இன்று ஒரு உன்னதமான கட்டத்தினை அடைந்து விட்டது என்பதை உலகமே ஏற்கவேண்டிய நிலை தோன்றிவிட்டது. **"இந்த மண் இன்னும் சுமக்கும் -விடுதலை வந்திடும் நாள்வரை விதைக்கும்"** என்கிற செய்தி காற்றொலியாக எங்கும் பரவுகின்றது. **"உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கிவந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்று சக்தியாக மற்றவர்களைப் பற்றிக் கொள்கிறது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டிவிடுகின்றது"** என்று வரலாற்றின் அடிநாதமான -உயிர்மூச்சான இயங்கும் விதி புலிகள் தலைவரின் போர்க்குரலாகிவிட்டது. வெறும் சடப்பொருள்களான தாங்கிகள், விமானங்கள், பீரங்கிகள் முன்னே தமது உயிர்ப் பொருட்களை கவசமாக, ஏவுகணையாக உவந்தளிக்கும் போராளிகளின் தார்மீக பலம் இன்று ஒரு புதுத் தத்துவத்தை -புதுயுகமொன்றின் குரலை எங்கும் ஓங்கி ஒலிக்கச் செய்கின்றது.

> ஒரு நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு என்பன தட்டிக் கேட்க முடியாத சங்கதியாக இல்லை. ஒரு நாடு தனது குடிமக்கள் என்று கூறிக்கொள்வோரின் அடிப்படை மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கின்றது என்பதைப் பொறுத்தே இது அமையும்.

புதுயுகத்தின் பிறப்புக்கு கட்டியம் கூறும் இத் தார்மீக பலம் ஒரு வரலாற்று நுட்பம் மட்டுமல்ல உளரீதியான ஒரு பரிமாணமும் கூட. இதனை புரிந்து உள்வாங்குவோர் உள்ளமும் விரிவடைந்து -துயர்கள் தாங்கும் பக்குவம் பெற்று -விட்டு விடுதலையாகி நிற்கும் நிலையை அடைந்துவிடும். ஆயினும் இதனைப் புரிதல் என்பது சாதாரண கிரகிப்பிற்கு அப்பாற்பட்டு இருப்பதால், இத்தனை இழப்புக்களா? என மக்கள் சிலர் ஏங்க நேரிடுகிறது. ஏனென்றால் சமகாலத்தில் வரலாறு படைக்கப்படும்போது - அதுவும் சிந்தப்படும் குருதியால் வரலாறு எழுதப்படும்போது -அதுவும் புதிய உலகின் விதிகளால் இப்புதிய வரலாறு பிறக்கும்போது அதனைப் புரிதல் இன்னும் கடினமாகின்றது.

வரலாற்றினை பின்னோக்கிப் பார்க்கும்போது அதன் ஒவ்வொரு காலகட்டத்திலும் வரலாற்றின் உந்துசக்திகளாக பல்வேறு காரணிகள் அமைவதைப் பார்க்கலாம். இந்நூற்றாண்டின் தொடக்கத்திலே குடியேற்றவாதத்திற்கு எதிரான போராட்டங்கள். பின்னர் பொருண்மிய ஏற்றத்தாழ்வுகளை, சுரண்டல்களை நீக்க முயன்ற பொதுவுடமை வழிவந்த போராட்டங்கள் என வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு காரணிகள் முதன்மைப்படுத்தப்படுவதை பார்க்கிறோம். ஆனால் மனித வரலாறு எழுதப்பட்ட காலம் தொட்டு இன்றுவரை வரலாற்றின் என்றும் மாறாத அடிப்படை நியதியாக, மனிதன் தன்னை அடிமைத் தளைகளில் இருந்து விடுவிக்க, தனது இருப்பை தனது அடையாளத்தை உறுதிப்படுத்த நடாத்தும் போராட்டங்களே அமைகின்றன. இவ் அடிப்படை விதி இன்று விடுதலைப் புலிகளின் போராட்டம் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்படுவதோடு மேலும் புதுயுகத்திற்கான புதுவிதியாக செழுமைப்படுத்தப்பட்டும் வருகின்றது.

இவ்விதியினை பூரணமாக புரியாத நிலையில் இலக்கு மாறியதால் இன்று பல போராட்ட முனைப்புக்கள் தடம்புரள வேண்டியேற்பட்டது. இடைநடுவில் போராட்டத்தினை கைவிட வேண்டிய அவலமும் தோன்றியது. இது உள்நாட்டிலும் சரி உலக அளவிலும் சரி இன்று புலப்படும் ஒரு பேருண்மையாகும். இன்று சமூக மாற்றத்திற்காகப் போராட முற்பட்ட லத்தீன் அமெரிக்க போராட்ட அமைப்புக்கள் என்றாலும் சரி, ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன மண்ணை விடுவிக்கப் புறப்பட்ட பாலத்தீனிய விடுதலை இயக்கங்கள் என்றாலும்சரி -எதிர்ப்புரட்சிக் குழுக்களாக பரிணமித்த யுனிற்றா, கொன்ராஸ் அமைப்புக்கள் ஆயினும் சரி -கம்போடிய கைமர்ருச், பிலிப்பைன்சின் புதிய மக்கள் இராணுவமாயினும் சரி (NPA) மாறும் சருவதேசச் சூழல் காரணமாக நட்டாற்றில் கைவிடப்பட்டோர் போல் திகைத்து அவதிப்பட்டு அல்லலுறுகின்றன. இப்போது என்ன நடக்கிறது? எல்சல்வடோர் போராளி இயக்கம் அமைதி உடன்பாட்டினை ஏற்று ஆயுதங்கள் கையளித்த நிலையில் மீண்டும் இரகசிய வலதுசாரிக் கொலைக் குழுவினர்கையில் சிக்கி, கொல்லப்படும் ஒரு பாதுகாப்பற்ற சூழல் இன்று எல்சல்வடோரில் நிலவுகிறது. பாலத்தீனத்திலோ அரபாத்தும், இசுரேலியரும் பேசுகிறார்கள் - பேசிக்கொண்டே இருக்கிறார்கள். பல பத்துப் பக்கங்களில் கையெழுத்துப் போடுகின்றனர். ஆனால் பாலத்தீன மக்களுக்கோ விட்ட இடத்திலிருந்து போராட்டத்தினை தொடங்க வேண்டிய நிலை. இது சருவதேச நடப்பு. எனவே சொந்தக் காலில் நிற்றல் என்பது இப்போது புலிகளின் போராட்டம் பிறப்பிக்கும் இன்னொரு விதி.

இது போலவே எமது வரலாற்றினைப் பாருங்கள். தொடக்கத்திலே போராட்டம் குறித்தும் அது செல்லவேண்டிய பாதை குறித்தும் பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. இருதேசத்து தொழிலாளர் இணைந்து செயற்பட வேண்டிய முழுப்புரட்சி என்று புகன்றனர் சிலர்; மலையகத் தொழிலாளரை முன்நிறுத்தி செய்ய வேண்டிய ஈழப்புரட்சி என்று இயம்பினர் சிலர்; படைவீரர்களை தயாரித்து கொடுப்பதே நம் பணி என விளம்பினர் சிலர்; இல்லை, இவை எதுவுமில்லை. ஒட்டுமொத்தமான தயாரிப்பின் பின் ஒரே இராணுவ நடவடிக்கையால் பெறப்படும் விடுதலை என பறைசாற்றினர் சிலர். இவை மட்டுமா? போராட்டத்தின் உள் முரண்பாடுகளாக வட , தென் தமிழீழப்பிளவுகள் தூக்கிப் பிடிக்கப்பட்டன; தென் தமிழீழத்திற்கே முன்னுரிமை என்றும் அரசியல் பிரிவா, இராணுவப் பிரிவா பெரியது என்ற முடிவற்ற விவாதங்களிலும் போராட்டம் சிக்க விடப்பட்டது. இவையெல்லாம் இங்குள்ள பிரதான முரண்பாடுகளாக தோற்றப்படுத்தப்பட்டன. அதனால் பல கவிஞர்களுக்கு கவிதை எழுத அவை கருப்பொருளாகவும் ஆகின.

ஆனால் இன்று? தொடக்கத்தில் எல்லாவற்றையும் உள்வாங்கிய தமிழீழத் தேசியப் போராட்டம் சரியெது? தவறெது? பொருந்துவது எது? பொருந்தாதது எது? என உரைத்துப் பார்த்தது. ஏற்பன ஏற்று இன்று தள்ளுவனவற்றை புறம் தள்ளிவிட்டது. **எனவே இன்று வட தமிழீழம் என்றோ தென் தமிழீழம் என்றோ எவரும் கூறும்போது, அவை வெறும் புவியியல் சார் பிரயோகங்களாகவே இருக்கும்.** வேறெந்த வேறுபாடும் எவரும் இப்போது கற்பிக்க முடியாது. தமிழீழம் என்கிற தேசத்தில் அன்னியன் ஆக்கிரமிப்புச் செய்திருக்கும் பகுதி, அவை எங்கிருந்தாலும் மீட்கப்பட வேண்டும்; விடுவிக்கப்பட வேண்டும் என்பதே இலக்கு. புலிகளின் தலைமை நெறிப்படுத்தும் போராட்ட உத்திகட்கேட்ப அவை படிப்படியாக மீட்கப்படும். ஆகவே எங்கிருந்து தொடங்குவது என்பதல்ல இன்றைய சிக்கல். எங்கிருந்தாவது தொடங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதே வரலாற்று நிபந்தனை. இந்நிபந்தனை இப்போது புலிகளால் பூரணப்படுத்தப்பட்டு விட்டது. எனவே இப்போது தமிழீழத்தின் எங்காவது ஓரிடத்தில் ஆக்கிரமிப்பு இராணுவம் தாக்கப்பட்டால் தமிழீழத்தின் ஒவ்வொரு அங்குல மண்ணும் அதிர்கின்றது. தன்மானத் தமிழன் அவன் எங்கிருந்தாலும் அவன் உடல் சிலிர்க்கின்றது.

இவற்றினை ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து இன்னொரு பேருண்மையும் புலனாகின்றது. வரலாறு தனது நீண்ட காலவோட்டத்தில் பற்பல தெரிவுகளை, வழிகளை, வாய்ப்புக்களை சிங்கள தேசம் முன்னும் வைத்து வரும் ஒரு பரிசோதனை முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றது. தொடக்கத்தில் தமிழ்த் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் உயர் மட்டத்தில் தமக்கிடையில் செய்து கொண்ட ஒப்பந்தத் தெரிவு; இந்தியத் தலையீட்டால் ஏற்பட்ட உடன்பாடு தொடர்பான தெரிவு; பின்னர் சருவகட்சி மகாநாடு என்கிற தெரிவு; இறுதியில் தெரிவுக்குழு என்கிற தெரிவு; இப்போது எல்லாத் தெரிவுகளும் பயனற்றுப் போவதை வரலாறு பார்க்கின்றது. **தமிழீழ மக்களின் இறுதி விருப்பத் தெரிவை அவர்கட்கு வழங்க முன், சிங்களவர்களுக்கு வழங்க வேண்டிய சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்படுவதை வரலாறு உறுதி செய்கின்றது.**

இத்தகைய நிலையில் வெறும் இராணுவ செயற்பாடுகள் என்றும் 'நாலுவார்த்தை பேச, எழுத வழியில்லையே' என்றும் கண்டனக் கணைகள் வீசியோர் வாய்கள் இப்போது அடைத்து நிற்கின்றன. இப்போது கொழும்பு அரசியலில் **"பூநகரித் தாக்குதலின் பின்னான காலகட்டம்"** என்று ஒரு புதிய சூழல் உருவானது பற்றி விலாவாரியாக விதந்துரைக்கும் இவர்கள், பூநகரித் தாக்குதல் என்பது எவ்வளவு ஈகங்களுக்கு மத்தியில் நடந்தது என்பதை அறிவாரா? அரசியல் என்றால் பல்வேறு தத்துவங்களை கரைத்துக் குடித்தோர் கையாளும் துறை போலவும், இராணுவம் என்றால் வெறுமனே கையிலே கருவியை எடுத்தல் என்று தோற்றப்படுத்தும் இவர்கள் உறுதியான அரசியல் இலக்கினை அடைவதற்கு இரத்தம் சிந்தும் அரசியலே ஆயுதப் போரட்டம் என்பதை அறிவாரா? இராணுவத்துறை என்பது கையிலே கருவியை எடுத்தல். மட்டுமல்ல, உயர் தொழில் நுட்பத்திறன்சார் அறிவியல்துறை என்பதும் அதில் தேர்ச்சிபெற மிகுதியான உழைப்பும், ஆற்றலும் வேண்டும் என்பதும் மிகநுட்பமாக துணிவின் எல்லையில் நின்று திரட்டப்படும் உளவுத் தகவல்களை செவ்வனே ஆய்ந்து திட்டமிடப்படுவதே ஓர் இராணுவ நடவடிக்கை என்று இவர்கள் புரிவார்களா? இப்போது புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் என்பது சமகாலத்திலே அரசியல் நடவடிக்கையாக உருமாறும் விந்தை எம்மக்கள் புரிந்த செய்தி. இப்போது **எம்மக்கட்கு எமது போராளியின் கையிலிருக்கும் ஆயுதத்தின் உண்மையான பெறுமதி மட்டுமல்ல, அதன் அரசியல் பெறுமதியும் புரியும்.**

தமிழ்த் தேசிய இனம் பல்வேறு சிக்கல்கள், குழப்பங்கள் மத்தியிலிருந்து புதிதாக விடுதலை இயக்கமொன்றை தொடக்கத்திலிருந்து கட்டி எழுப்பும்போது தோன்றும் சிக்கல்களை மனித உரிமை மீறல்களாக வகைப்படுத்துவோர் ஓர் புதிய இன்னொரு பேருண்மையை மறந்துவிட்டனர். இப்போது மாறிவரும் புதிய உலகச் சூழலில், போட்டியணிகள் இல்லாத நிலையில் **ஒரு நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு என்பன தட்டிக் கேட்க முடியாத சங்கதியாக இல்லை. ஒரு நாடு தனது குடிமக்கள் என்று கூறிக்கொள்வோரின் அடிப்படை மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கின்றது என்பதைப் பொறுத்தே இது அமையும்.** சிறீலங்காவைப் பொறுத்தவரையில் சருவதேச சட்டங்கட்கு முன் தலைகுனியும் காலம் நெருங்குகின்றது.

இங்கே இன்னொரு செய்தியும் சேர்க்கப்படல் வேண்டும். அண்மைக் காலமாக சனாதிபதி டி. - பி. விஜேதுங்கா தமிழ் மக்கட்கு தான் ஒய்வூதியம் வழங்குவது பற்றி, மக்கட்கு உணவு அனுப்புவது பற்றி, கல்வி வழங்குவது பற்றி அதிகம் அலட்டிக் கொண்டு வருகிறார். உண்மையிலேயே அவர் சருவதேச விதிகளைத் தனது நாடு கையெழுத்துப் போட்டு ஏற்றுக் கொண்ட ஜெனிவா சட்டங்களின் பொதுப் பிரிவு மூன்றினை அறியார் போலும். (General Convention -Common Article -3) மோதல் தொடர்பான இவ்விதிகள் சருவதேச மோதல் களங்களுக்கு மட்டுமல்ல. உள்நாட்டு மோதல் சூழ்நிலைகளுக்கும் பொருந்தும் என்பதே அது. மேலும் இம்மூன்றாம் பிரிவு 1977 ஆம் ஆண்டின் (Additional Protocol -II) மேலதிக இணைப்பு ஒன்றின் மூலம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இங்கேதான் முக்கியமான செய்தி ஒன்று வருகின்றது. இவ்விதிகளின்படி மோதல்கள் நடக்கும் பகுதியில் இளம் சிறார்களின் முழுப்பாதுகாப்பு, அவர்கட்கான கல்வி வசதிகள் போன்றவை பேணப்படல் வேண்டும்; பொதுமக்களின் வாழ்விற்கு உத்தரவாதமளிக்கத்தக்க வகையில் அவர்களது உயிர்வாழ்வுக்கு அவசியமான பயிர்ச்செய்கை, தானியக் களஞ்சியங்கள், கால்நடைகள், குடிநீர், வழிபாட்டுத் தலங்கள், நீர்ப்பாசன அமைப்புக்கள் போன்றவை பாதுகாக்கப்படல் வேண்டும்; அது போலவே நிர்ப்பந்தமாக மக்கள் வெளியேற்றப்படல் தவிர்க்கப்படல் வேண்டும்; அவ்வாறு வெளியேற்றப்பட்டால் அம்மக்களுக்கு சகல அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

சுருக்கின், ஓர் அரசு எவ்வாறு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நெறிப்படுத்துவதோடு குடிமக்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்ட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதே இவ்விதிகளின் நோக்கம். ஆனால் பலவித அழுத்தங்கள் சருவதேச அமைப்புக்களால் கொடுக்கப்பட்டபோதும் சிங்கள அரசு இவ்விதிகளை ஏற்றுக் கைச்சாத்திட இன்றும் முன்வரவில்லை. இது தொடர்பாக சிறீலங்காவில் இயங்கும் (CRM) எனப்படும் சனநாயக உரிமைகளை காப்பதற்கான இயக்கம், சிங்கள அரசின் மீது கடுமையான கண்டனத்தை தொடுத்துள்ளது. எனவேதான் உணவு அனுப்பாவிட்டால் தமிழீழ மக்கள் மண்ணைத் தின்ன நேரிடும் என்று டி. பி. கூறுவதன் பின்னணி புரிகின்றது. மண்ணை நம்பி தற்சார்பாக வாழக்கூடியவர்கள் எமது மக்கள் என்பதை அவருக்கும் காலம் உணர்த்தும்.

எனவே ஒரு தேசிய இன ஆன்மாவின் எழுச்சி எத்தகையது, அது ஒலிக்கும் குரலின் ஆற்றல் எவ்வளவு என்பதை எமது விடுதலைப் போராட்டம் தெளிவுபடுத்தும். எமது விடுதலைப் போராட்டம் புதுயுகத்தின் புதுமைக் குரலாக இன்று ஒலிப்பதே எவரும் மனம்கொள்ள வேண்டிய உன்னதமான உண்மையாகும். ■

**நன்றி: 'ஈழநாதம்'**

## நாடு திரும்பும் அகதிகளுக்கு விசேட சலுகை இல்லை

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்படும் இலங்கை அகதிகள், ஏற்கனவே இங்கு இருக்கும் அகதிகள் பராமரிக்கப்படுவதைப் போலவே பராமரிக்கப்படுவர் என்று சிறீலங்கா அரசு கூறியுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா இது தொடர்பாக மேலும் கூறுகையில், வெளிநாட்டிலிருந்து வரும் அகதிகளுக்கு எந்தவிதமான மேலதிக சலுகைகளோ விசேட வசதிகளோ வழங்கப்படமாட்டாது என்றும் இலங்கையர்கள் அனைவரையும் ஒரே மாதிரியாகவே அரசு கருதுகிறது என்றும் தெரிவித்தார். ■

# ஒரு தனிநாட்டின் அங்கமாக அமையும் தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றம்

## நீதிமன்றத் திறப்பு விழாவில் கரிகாலன்

"நாம் தனிப்பட்ட ஒரு நாட்டை உருவாக்க வேண்டும். எமக்கொரு நாட்டை விஸ்தரிக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் அபிலாசையைப் பூர்த்தி செய்யும் நோக்கில், தமிழீழ நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு, மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. அந்த தீர்ப்புக்களில் திருப்தியற்ற மக்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்கேற்ப திருப்தியான ஒரு தீர்ப்பினைப் பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காக, இந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களுடைய அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படும்". இவ்வாறு யாழ். மாவட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "எங்களுடைய தமிழ்த் தேசியத் தலைவரால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்தப் போராட்டத்தை நிருவகித்துக் கொண்டிருக்கின்ற அந்த நேரத்திலே, மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்திக் கொண்டுதான் வந்துள்ளார்.

விடுதலை வெற்றி பெறுகின்ற நேரத்திலே, எங்களுடைய நிருவாகக் கட்டமைப்பையும் எமது மக்களுடைய பிரச்சினைகளையும் பூரணமாகத் தீர்க்கக்கூடிய ஒரு நிலையில் நாங்கள் வளர்ந்து நிற்கின்றோம் என்பதையே அந்த வளர்ச்சிகள் காட்டுகின்றன.

மாவட்ட நீதிமன்றங்களை உருவாக்கி அந்த நீதிமன்றங்களிலே ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேபோன்றுதான் ஒவ்வொரு துறையும் வளர்ச்சிகண்டு வருகின்றது. எங்களது விடுதலைப் போராட்டமும் எமது அனுபவத்தின் வாயிலாக ஒரு மிகப்பெரிய வளர்ச்சி அடைந்து கொண்டு வருகின்றது. இன்று ஒரு நாட்டை நிருவகிக்கக்கூடிய பூரண ஆற்றல் உள்ளவர்களாக எங்களுடைய போராளிகள் மாற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில் ஒரு நாட்டை மீட்கவேண்டும் என்ற உணர்வோடும் தங்கள் இன்னுயிரை தற்கொடை செய்யத் தயாராக இருக்கும் இப்போராளிகள், இந்த மக்களுடைய நிருவாகத்திலும் பங்குகொண்டு அதனை நேர்மையாக ஒரு நிரந்தரமான, மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய தீர்ப்புகளை வழங்கி, அவர்களுடைய நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக இன்று விடுதலைப் புலிகள் மாறிக்கொண்டு வருகிறார்கள்.

நாம் எம்முடைய செயற்பாடுகளில் நேர்மையைக் கடைப்பிடிக்கின்றோம் கண்ணியத்தைக் கடைப்பிடிக்கின்றோம் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக நாங்கள் மாறிக்கொண்டிருகின்றோம்.

எம்மை 'பயங்கரவாதிகள்', ஒரு இனத்தை படுகொலை செய்பவர்கள், எம்மக்களை நாங்கள் கொலை செய்கின்றவர்கள் என்றெல்லாம் சிறீலங்கா அரசு பொய்ப் பிரச்சாரங்கள் செய்கின்றது. எங்களுடைய நடைமுறையில் எம்மால் இங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளையும் நிருவாகங்களையும் பார்த்ததும், இவர்களது அந்தப் பிரச்சாரங்கள் அடிபட்டுப் போகின்றன.

எங்கள் மீது அனைத்துலகம் ஒரு நம்பிக்கை கொண்டுள்ளது. நாங்கள் ஒரு நேர்மையான நிரந்தரமான மக்களுக்கான சேவையைச் செய்கின்றோம்.

சிறீலங்கா அரசு உணர்ந்துகொண்ட நிலையைவிட, அனைத்துலக நாடுகள் எங்கள் போராட்டத்தை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கின்றன என்பதை செய்திகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆகவே நாம் நடைமுறைப்படுத்துகின்ற இந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் எங்களின் போராளிகளினுடைய மிக நேர்மையான செயற்பாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. மக்களினுடைய நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றது. இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பானது சிறந்த முறையில் வளர்ந்துகொண்டு போவதற்கு, கற்றறிந்த அறிவாளிகள் பூரண ஒத்துழைப்பை வழங்கி மீண்டும் இந்த அமைப்புக்களை வளர்த்தெடுப்பதற்கு உங்களுடைய பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்றார். ■

# தமிழ்மொழியில் அதிகபுள்ளி பெற்றோர்க்கு பரிசுகள்

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் அதிகபுள்ளி பெற்ற நான்கு மாணவர்களுக்கு தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் பரிசுகள் வழங்கப்பட்டன.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவி சிவதர்சினி சிவசுப்ரமணியம், யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சதானந்தான் சேந்தன், காட்லிக் கல்லூரி மாணவன் மகேந்திரம் உமாகாந்தன், சிவபுண்ணியம் சசிகுமார் ஆகியோர் முறையே 96, 94, 93, 93 புள்ளிகளைப் பெற்று முதல் நான்கு இடத்தையும் தட்டிக் கொண்டனர். இவர்களுக்கு முறையே மூவாயிரம், இரண்டாயிரத்து ஐநூறு, இரண்டாயிரம், இரண்டாயிரம் ரூபாய்கள் பரிசாக வழங்கப்பட்டன.

அருட்திரு பிரான்சிஸ் யோசப் அடிகள் தலைமையில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர். ■

# அந்நிய மொழியை கற்கும் ஆர்வம் சகோதர மொழிக்கு இல்லையே

**— சு. க. எம்.பி. வருத்தம்**

அந்நிய மொழியான ஆங்கிலத்தை தோளில் சுமந்துகொண்டுள்ள நாம், எமது நாட்டின் சகோதர மொழியான தமிழைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் செலுத்தாது இருப்பது வேதனைக்குரியதாகும் என கண்டி மாவட்ட சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் யசரத்ன தென்னக்கோன் கூறியுள்ளார்.

வத்தேகம பகுதியில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், இம்மொழிகளில் ஆர்வம் கொண்டு கற்றுக் கொள்வோமேயானால் எமது சகோதர மக்களது உணர்வுகள் மற்றும் பிரச்சினைகளை உணர்ந்து அவர்களுக்கு உதவக்கூடிய நிலை உருவாகும். இனம், மதம் பாகுபாடற்ற ஒரு சமூகமாக வாழ வேண்டும் என்ற தத்துவத்தையே புத்த பெருமான் போதித்துள்ளார். அவர் மனித சமுதாயத்தை குல மத பேதங்களால் பிரிக்கவில்லை என்றும் தெரிவித்தார். ■

# எம்மக்கள் படும் துன்பத்திற்கு இந்தியாவும் ஒரு காரணம்

## - வே. பாலகுமாரன் தெரிவிப்பு

"எமது மக்கள் இன்று அனுபவித்துவரும் அவலங்களுக்கு இந்தியாவும் ஒரு வகையில் காரணமாக அமைந்துள்ளது. வருடத்தில் நான்கு மாதங்களில் இந்தியாவின் துரோகத்தனத்தை எமது மக்கள் ஞாபகப்படுத்திக் கொள்கின்றனர். இந்தியாவின் துரோகத்தில் இருந்தும் சதிகளில் இருந்தும் மீள்வதற்கான புதிய வழியும், தியாகமும் இந்த நான்கு மாதங்களிலும் தான் படைக்கப்பட்டுள்ளது.

தளபதி கேணல் கிட்டு, தியாகி திலீபன், அன்னை பூபதி, குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் என்று தியாகத்தின் அத்தியாயங்கள் படைக்கப்பட்டதும் இந்த நான்கு சந்தர்ப்பங்களில்தான்". இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய தமிழீழக் கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. வே. பாலகுமாரன் கூறினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது, அகிம்சை தேசம் என்றும் காந்தி தேசம் என்றும் கூறப்பட்டுவந்த இந்தியாவின் உண்மை நிலையை உலகிற்கு உணர்த்தியவர்களில் அன்னை பூபதியும் அவரது தியாகமும் போற்றப்பட வேண்டியவை.

புத்தக வடிவில் காணப்பட்ட தத்துவங்களை வைத்துக்கொண்டு அவற்றிற்கேற்க அனுபவங்களைத் தேடிக்கொண்ட காலம் எண்பதுகளுடன் கடந்து சென்றுவிட்டது. அனுபவங்களை வைத்துக்கொண்டு புதிய தத்துவங்களை உருவாக்கும் காலம் தற்பொழுது பிறந்திருக்கிறது.

இதற்கேற்ப தீர்க்க தரிசனத்துடன் எமது போராட்டத்தை வழிதவறிச் செல்லவிடாது நெறிப்படுத்துவதில் அன்னை பூபதியின் தியாகமும் அளப்பெரிய பங்காற்றியுள்ளது.

எந்த நோக்கத்துக்காக எந்த சூழ்நிலையில் இந்தியா எமக்கு உதவிபுரிய முன்வந்ததோ, அந்த சூழ்நிலை இன்று இல்லை. அந்த சூழல் தலைகீழாக மாறியுள்ளது. இந்தியாவை நாம் தொடர்ந்தும் நம்பியிருந்தால் நாம் நடுத்தெருவில் கைவிடப்பட்டிருப்போம்.

இந்தியாவை நம்பியிருந்த சக்திகள் இன்று செல்லாக் காசுகளாக மாறியுள்ளன. இந்த வகையில் இந்தியாவினது துரோகத்தனத்தை அம்பலப்படுத்தி எமது போராட்டத்தை வழிதவறிச் செல்லாமல் காப்பாற்றிய பெருமை அன்னை பூபதி போன்ற தியாகிகளைச் சாரும்.

போரை நிறுத்துங்கள் என்று அன்னை பூபதி அன்று எழுப்பிய அதே கோசம் இன்று தென்னிலங்கையின் மூலை முடுக்கெல்லாம் ஓங்கி ஒலிக்கிறது. ஒரு காலத்தில் தென்னிலங்கை மக்கள் தம்மை சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றிவிட்டதை மனப்பூர்வமாக உணர்ந்துகொள்வார்கள்.

வடக்கு வேறு கிழக்கு வேறு என்று நினைப்பவர்களுக்கும், வடக்கு கிழக்கைப் பிரிக்க முயற்சிப்பவர்களுக்கும் அன்னை பூபதியின் தியாகமும் அது இன்று தமிழீழத்தின் மூலை முடுக்கெல்லாம் போற்றப்படுவதும் ஒரு புதிய பரிணாமத்தைக் கொடுத்துள்ளது என்றும் தெரிவித்தார். ■

# இராணுவ நடவடிக்கைகளினால் 1479 இந்து ஆலயங்கள் சேதம்

வடக்கு, கிழக்கில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளால் 1479க்கும் மேற்பட்ட ஆலயங்கள் சேதமடைந்திருப்பதாகவும், இவற்றின் சேதம் 283 மில்லியன் எனவும் இந்துசமய கலாச்சார அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கிலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 1990 டிசம்பர் வரையான காலப்பகுதியில் மட்டுமே இச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி யாழ் மாவட்டத்தில் 513 ஆலயங்கள் சேதமடைந்துள்ளன. இவற்றின் பெறுமதி 128 மில்லியன் ரூபாவாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் 33 ஆலயங்கள் சேதமடைந்துள்ளதாகவும் இவற்றின் இழப்பீட்டுத் தொகை 2.1 மில்லியன் ரூபாவாகவுமுள்ளது. முல்லைத் தீவு மாவட்டத்தில் 181 ஆலயங்கள் சேதமடைந்ததுடன் இவற்றால் 39 மில்லியன் ரூபா சேதமேற்பட்டுள்ளதாம். மன்னார் மாவட்டத்தில் 37 ஆலயங்கள் சேதமடைந்துள்ளதுடன் இவற்றின் இழப்பீட்டுத் தொகை 7 மில்லியன் ரூபா எனவும் வவுனியா மாவட்டத்தில் 136 ஆலயங்கள் சேதமடைந்திருப்பதுடன் 16 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் திருகோணமலை மாவட்டத்தில் 199 ஆலயங்கள் சேதமடைந்திருப்பதுடன் 34 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 283 ஆலயங்கள் சேதமடைந்துள்ளதுடன் இதனால் 27 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அம்பாறை மாவட்டத்தில் 147 ஆலயங்கள் சேதமடைந்துள்ளதுடன் 30 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ■

# வடக்கு - கிழக்கு இளைஞர் தக்க தருணத்தில் போராடத் தொடங்கினர்

**- தொண்டமான்**

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையில் வடக்கு -கிழக்கு மக்கள் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இதனால் விரக்தியடைந்த இளைஞர்கள் தக்க தருணத்தில் போராட்டத்தை ஆரம்பித்தனர். அதன் விளைவாக தமிழர்களின் தன்மானம் காக்கப்பட்டது. இத்தகைய போராடும் நிலையில் மலையக மக்களாகிய நாம் இல்லை என அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், நாட்டின் சனத்தொகையில் நாம் 5 வீதமாக இருப்பதால் அரசுடன் ஒத்துப்போகும் நிலையில் உள்ளோம் எனவும் குறிப்பிட்டார். ■

# இலங்கை விவகாரத்தில் இந்தியாவிற்கு புதிய வெளியுறவுக் கொள்கை தேவை

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சுமார் நான்கு வருடங்களின் பின் திரு. டிக்சிற் தனது மௌனத்தைக் கலைத்துள்ளார். திரு. டிக்சிற் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இந்திய அரசின் கருத்துக்கள் என்ற ரீதியில் நோக்கப்பட முடியாதவை ஆயினும், இந்தியாவின் மூத்த இராஜதந்திரி ஒருவரினதும் முன்னாள் வெளியுறவுச் செயலாளரினதும் கருத்துக்கள் என்ற ரீதியில் அவை முக்கியத்துவமானவை என்பதில் சந்தேகமேயில்லை.

1990 இல் இந்திய இராணுவம் இலங்கை மண்ணை விட்டு வெளியேறிய பின்னர், இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் ஒரு மெத்தனமான உறவே இருந்தது எனலாம். அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா ஒரு நீண்ட மௌனத்தைக் கடைப்பிடித்து வந்தது எனலாம்.

இதற்கு, இனப்பிரச்சினை தொடர்பான இந்திய தலையீட்டில் இராணுவ ரீதியாகவும், இராஜதந்திர ரீதியாகவும் ஏற்பட்ட தோல்வி முக்கிய காரணமாக இருந்தது எனலாம். ஆயினும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக உருவாக்கப்பட்ட இந்திய -சிறீலங்கா உடன்பாடானது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாது விட்டாலும், சிறீலங்கா -இந்திய உறவில் ஒரு நெருக்கமான உறவைக் கொண்டு வந்திருந்தது என்பதும் உண்மை.

இந்நிலையில் இந்தியா தோல்வியுடன் அவமானகரமாக வெளியேறியபோதும், சிறீலங்காவுடனான பொருளாதார உறவுகள் வலுவடைந்து வந்தது. கூட்டு பொருளாதார ஆணைக்குழு இதற்கு உதவியாக இருந்தது. மேலும் இதற்குச் சிறீலங்கா அரசாங்கம் கடைப்பிடித்த திறந்த பொருளாதாரக் கொள்கையும் காரணமாக இருந்தது.

அத்தோடு இந்திய இராணுவத்தை ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் எனக்கூறி உடன் வெளியேற வேண்டு எனக் கோரியிருந்த அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவும், இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமாகிய பின்னர் இந்தியாவுடன் நட்புறவைப் பேணவே விரும்பினார். இவரது விருப்பம் இவரது இறுதிக்காலத்தில் மிகவும் உயர்வாகவே இருந்தது. அவர் இந்தியாவுடன் மிக நெருங்கியே சென்றார். இந்திய விஜயங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டும் வந்தார்.

இந்தியாவும் பிரேமதாசாவின் நட்புக்கரத்தைப் பற்றிக் கொண்டது என்றே கூறவேண்டும். இதேவேளை 1991 இல் இடம் பெற்ற ராஜீவ் காந்தியின் கொலையானது சிறீலங்காவினதும் இந்தியாவினதும் உறவை மேலும் நெருக்கமாக்கியது. இந்தியாவின் புலனாய்வுத் துறையும், பாதுகாப்பு அமைச்சும் சிறீலங்காவின் புலனாய்வுத் துறையுடனும் பாதுகாப்பு அமைச்சுடனும் நெருக்கமாக ஒத்துழைக்கவும் புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் அளவிற்கும் சென்றன. இந்திய -சிறீலங்கா புலனாய்வு மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் இருநாடுகளுக்கும் விஜயம் செய்தனர். இந்தியக் கடற்படை - சிறீலங்காக் கடற்படை இரண்டிற்கும் இடையிலான கூட்டு ரோந்து வரையும் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இவ்வாறாக இந்தியா, சிறீலங்காவுடன் நெருக்கமாக இருந்த போதிலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 1987 சமாதான உடன்பாடே அடிப்படையாக அமைய முடியும் என்பதில் இந்தியாவின் நிலைப்பாட்டில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இதனை சிறீலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசாவும் தெளிவாக உணர்ந்திருந்ததோடு அதற்கேற்ப நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார். இந்நிலையில் இவ்விடயத்தில் இந்தியா தனது மௌனத்தைக் கலைக்காமலே இருந்து வந்தது. மெத்தனமாக ஒரு வெளியுறவுக் கொள்கையுடன் சிறீலங்காவின் உறவு நீடித்தது.

ஆனால், பிரேமதாசாவின் திடீர் மறைவின் பின்னர் பதவிக்கு வந்த சிறீலங்கா ஜனாதிபதியின் உள்ளூர் அரசியல் நிலைப்பாடும் வெளியுறவுக் கொள்கையும் முன்னைய நிலையில் இருந்து மாறுபட்ட கோணத்திலேயே அமைந்தன. இந்நிலையில் இந்தியாவுக்கு தனது மௌனத்தைக் கலைக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் இலங்கை விவகாரத்தில் புதிய வெளியுறவுக் கொள்கை பற்றியும் சிந்திக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டது.

இதில் இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை -பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது -என்ற டி. பி. விஜேதுங்காவின் நிலைப்பாடு முக்கியமானதாகும்.

இதனை டிக்சிற் அண்மையில் வெளியிட்டுள்ள கட்டுரையில் தெளிவாகவே வற்புறுத்த முற்பட்டுள்ளார். "1983 -86 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்த நிலைப்பாட்டினையே ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க மீண்டும் கையாளுகிறார் என்றே தோன்றுகிறது. அரசியல் தீர்வு தேவை என்பதை உதட்டளவில் மட்டும் கூறிக்கொண்டு தமிழருக்கெதிரான இராணுவ அரசியல் நிலைப்பாட்டை மேற்கொள்வதே இந்த நிலைப்பாடாகும்" என்பதே டிக்சிற்றின் கூற்றாகும்.

இந்தவகையில் டிக்சிற்றின் கூற்றில் மறைமுகமான பொருள் ஒன்றையும் காணமுடியும். அதாவது ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் காலத்தை ஒத்த ஒரு அரசியல் சூழ்நிலையானது டி. பி. விஜேதுங்காவினால் உருவாக்கப்பட்டுள்ளது என்பதே அதுவாகும்.

இந்தியாவைப் பொறுத்து டி. பி. -விஜேதுங்காவின் கொள்கை முற்றாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. ஏனெனில் இந்நிலைப்பாட்டை இந்தியா ஏற்றுக்கொள்வதானால் 19-87 ஆம் ஆண்டில் இந்தியா, சிறீலங்காவுடன் செய்துகொண்டுள்ள சமாதான உடன்பாட்டை இந்தியாவும் நிராகரித்ததாகும் என்பதோடு, இந்தியா இலங்கை விவகாரத்தில் முற்றுமுழுதாகத் தோல்வி ஒன்றைத் தழுவியதை ஏற்றுக்கொண்டதாக வேண்டும்.

மேலும், இனப்பிரச்சினை தொடர்பாக முற்றுமுழுதாக இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றை சிறீலங்கா அரசாங்கம் நாடி நிற்குமாயின், அதன் பக்க விளைவுகள் தமிழகத்திலும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதோடு, இந்திய அரசியலையும் பாதிக்கவும் கூடும்.

**ஜெயராஜ்**

அதாவது, ஒருபுறம் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையானது, ஆயிரக்கணக்கில் தமிர்களின் மரணத்திற்கும் இலட்சக்கணக்கான அகதிகள் பிரச்சினையையும் உருவாக்கக் கூடும். இது இலங்கையில் தமிழ் மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்பதோடு, தமிழகத்தில் நெருக்கடிகளை உருவாக்கக் கூடும். இது தமிழகத்திலும் ராஜீவ் காந்தியின் கொலையை வைத்து நடத்தப்படும் அரசியலை திசை திருப்பி விடக்கூடும்.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பதும் ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை என்பதையும் இந்தியா தெளிவாகக் கண்டு கொண்டுள்ளது. இதற்குத் தனியாக இலங்கையில் பெற்ற அனுபவம் மட்டுமல்ல, இந்தியாவில் பெற்ற பல அனுபவங்களும் இந்தியாவிற்குப் பாடங்களாக அமையலாம். இந்நிலையில், இரா்ணுவத் தீர்வே தொடருமானால், இலங்கையில் பிரிவினை என்பது தவிர்க்க முடியாதது என்பதை இந்தியா தெளிவாக உணர்ந்துள்ளது. இது இந்தியாவைப் பொறுத்து ஒரு ஏற்புடைய விடயம் அல்ல. இதனையும் டிக்சிற் தனது கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து டிக்சிற் குறிப்பிடுகையில், "மத அல்லது இன அடிப்படையில் ஏற்படும் ஒரு பிளவு இந்தியாவின் சொந்த நலனைப் பாதிப்பதாக அமையும். ஏனைய நாடுகளுடனான உறவுகளில் இந்த வாதத்தின் நியாயத் தன்மையை இந்தியா ஏற்றுக்கொண்டால், இந்தியக் குடியரசில் இதனைப் பிரயோகிப்பதில் கூட கேள்விக்கு இடமிருக்காது" என தெரிவிக்கிறார்.

ஆனால், இனப்பிரச்சினை தொடர்பான விடயம் மட்டுமல்ல, டி. பி. விஜேதுங்க கடைப்பிடிக்கும் வேறு பல கொள்கைகளும், நடவடிக்கைகளும் இந்தியாவின் கவனத்தைக் கவரக் கூடியவையாகவே உள்ளன. இதில் மலையகத் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவத்தை பலவீனப்படுத்தும் முயற்சியில் டி. பி. விஜேதுங்கா ஈடுபட்டுள்ளமை இந்தியாவைப் பொறுத்து அதன் நலனைப் பாதிக்கும் அம்சமாகவும் புதிய சிக்கல்களை உருவாக்கக் கூடியவையாகவுமே உள்ளன.

இந்தியாவின் பார்வையில் சிறீலங்கா அரசியலில் மலையகத் தமிழ் மக்கள் எப்போதும் தனது 'காய்கள்' என்ற நிலையே இருந்தது. இதற்கு அமைச்சர் தொண்டமானின் தலைமையும் வாய்ப்பாகவே இருந்தது. ஆனால் இன்று டி. பி. விஜேதுங்கா மேற்கொள்ளும் முயற்சிகள் தொண்டமானைப் பலவீனப்படுத்தியுள்ளன. டிக்சிற் இதனைத் தனது கட்டுரையிலும் தெரிவித்திருக்கின்றார். "அரசியல் உடைவு காரணமாக ஏற்பட்டுள்ள. மனவேதனையை மலையக மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் அதேவேளை, தமிழர்களுடைய இந்தக் குழுவில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தலைவராக உள்ள தொண்டமானின் பிடி பல வருடங்களின் பின் இப்போது விடுபட்டுச் செல்கிறது" எனக் கூறுகிறார்.

அதாவது மலையகத்தில் தமிழ் மக்களின் அரசியற் பலத்தைச் சிதைத்துவிடுவதான டி. பி. விஜேதுங்காவின் நடவடிக்கையானது மலையகத்தில், தொண்டமான் மூலம் இந்தியா தனக்கிருந்த பிடியை இழப்பதற்குச் சமமான ஒன்றாகவே கொள்ளப்படக் கூடியதாகும். இந்நிலையில் இந்தியா இலங்கை விவகாரத்தில் புறம்தள்ளப்படுவது தவிர்க்க முடியாததொன்றாகவே போகும்.

அதிலும் டி. பி. விஜேதுங்கா இனப்பிரச்சினை விவகாரத்தில் வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவையில்லையெனத் தெட்டத் தெளிவாக அறிவித்துள்ளமையானது, இந்தியா விரும்பினும் எதிர்காலத்தில் இனப்பிரச்சினை விடயத்தில் நேரடியாகத் தலையிடமுடியாத நிலையை டி. பி. -விஜேதுங்கா உருவாக்கி வருகின்றார் என்றே கொள்ளமுடியும். கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருசிலரின் சமாதான முயற்சிகளை நிராகரித்து, கியூபெக் பிரச்சினையை முதலில் தீர்த்து வையுங்கள் என அவர்களுக்கு ஆலோசனை கூறியுள்ள டி. பி. விஜேதுங்கா, இந்தியா இவ்விவகாரத்தில் தலையிட்டால் காஸ்மீர் பிரச்சினையையும், பஞ்சாப் பிரச்சினையையும் தீருங்கள்; இங்கு நீங்கள் தேவையில்லை எனக்கூறினால் ஆச்சரியம் கொள்ள எதுவுமிருக்காது.

இவ்வாறாக சிறீலங்கா அரசாங்கத்தின் உள்நாட்டுக் கொள்கையே இந்திய நலன்களைப் பாதிப்பதாக அமைந்துள்ள அதேவேளை, சிறீலங்காவின் இன்றைய வெளியுறவுக் கொள்கையானது இந்தியாவின் பிராந்திய நலனைப் பாதிக்கக் கூடியதற்கான வாய்ப்புக்களை உருவாக்கி வருகின்றது. இதில் சிறீலங்காவின் நெருக்கமான சீனாவின் உறவு முக்கியமானதாகும்.



டிக்சிற்


சீனா சர்வதேச ஆயுத வர்த்தகத்தில் ஒரு கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்காத நாடு என்பதோடு, இன்று மூன்றாம் உலக நாடுகளின் பிரதான ஆயுத விநியோகத்தராகவும் உள்ளது. இதற்கேற்ப தென்னாசியப் பிராந்தியத்திலும் சீனா இன்று முக்கிய ஆயுத விநியோகத்தராகவே உள்ளது.

இந்த வகையில் இந்தியாவுடன் எல்லைத் தகராற்றைக் கொண்டுள்ள சீனா -தற்போது சற்றுத் தணிந்த நிலையில் உள்ளது. இந்தியாவின் பரம வைரியான பாகிஸ்தானின் பிரதான ஆயுத விநியோகத்தரில் ஒன்றாகவும் உள்ளது. பாகிஸ்தானுக்கென அணு ஆயுத தொழில் நுட்பத்தை விற்றுள்ள சீனா அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லவல்ல ஏவாயுதங்களையும், விமானங்களையும் விநியோகித்துள்ளதாகவும் அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்களே தெரிவிக்கின்றன.
மேலும் இந்தியாவின் வட எல்லையில் உள்ள நேபாளத்திற்கும் ஆயுத விநியோகம் செய்வதில் சீனா ஈடுபட்டுள்ளது. இது குறித்து இந்திய நேபாள உறவில் சில நெருடல்கள் கடந்த வருடங்களில் ஏற்பட்டதுமுண்டு. இந்நிலையில் சிறீலங்காவுக்கும் பிரதான ஆயுத விநியோகத்தராக மாறுவதென்பது, இந்தியாவைப் பெரிதும் பாதிக்கக் கூடியதென இந்திய வட்டாரங்கள் கருதுவதில் நியாயம் இல்லாமலும் இல்லை. இதனால் 1987 சமாதான உடன்பாட்டின் மூலம் சிறீலங்காவின் வெளியுறவுக் கொள்கையில் இந்தியா விதித்த கட்டுப்பாடுகளில் பயனற்ற நிலையை உருவாக்கக் கூடும்.

இவ்வாறு சீனா சிறீலங்காவின் முழுமையான ஆயுத விநியோகத்தராக மாறும்பட்சத்தில் இந்தியா ஒருவகையில் சீனவின் கண்காணிப்புக்குள் உள்ளாகியதாகவே கருத இடமுண்டு. அத்தோடு தனது பிராந்தியத்துக்கு வெளியில் சீனா ஆதிக்கம் செலுத்துவதாகவும் இது அமைந்துவிடும். இந்நிலையில் சீனாவுடனான சிறீலங்காவின் நெருக்கமான உறவானது, இந்தியாவினால் வரவேற்கப்படக் கூடியதொன்றாக இருக்கப் போவதில்லை.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....






"தோழி! உன்னைப் பற்றி வரலாறு எழுதும்படி நீ துளசிராவிடம் கூறினாய். ஆனால், இன்று துளசிராவுக்கே நாம் வரலாறு எழுதுகின்றோம். இதுதான் எமது போராட்டம். விடியும்வரை இது தொடரும்."

**1991** இன் நடுப்பகுதி. பொன்னும் மணியும் கொழிக்கும் பூநகரி மண். சிங்கள அரசின் கூலிப்படைகளினால் முற்றுகைக்கு உள்ளாக்கப்படுகிறது. நாகதேவன்துறை ஒரு கூட்டுப் படைத் தளமாக அமைக்கப்படுகிறது. ஈராண்டுகாலம் பூநகரி மண்ணையும் கிளாலிக் கடலையும் ஆட்சி புரிந்த கூலிப்படைகளின் உயிர்கள் ஈராண்டு காலம் முடிவதற்குள் அவர்களை விட்டுச் சென்றுவிட்டது.

அன்று எத்தனையோ அப்பாவி மக்களை கடலிலே வெட்டியும் சுட்டும் கொன்றொழித்த அரக்கர் படை, எம் மண்ணிலே மண்ணோடு மண்ணாய் சங்கமம் ஆகிவிட்டது.

கிளாலிக் கடல் எங்கும் அந்தி வானத்தின் ஒளிக்கீற்று படும்போது இரத்தாறு பாய்வது போன்ற காட்சி. அன்று எம் மக்கள் மீது "நாம் அப்பாவி மக்கள்" என்று கூறியபோதும், இனவெறி பிடித்த அரக்கர் படை செய்த அட்டூழியங்கள் கண்முன்னே நிழலாய்த் தெரிகிறது.

இவற்றையெல்லாம் நினைக்கும்போது நெஞ்சு எரிமலையாய் வெடித்துவிடும் போன்று கொதிக்கிறது.

எங்கிருந்தோ வந்த சில்லென்ற குளிர்காற்றுடன், "நாகதேவன்துறை வேகப்படகுகள் நம் கையில் வீழ்ந்ததடா" என்ற பாடல் என்னைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.

இப்பாடலைக் கேட்கும்போது இவ்வெற்றிக்குக் காரணகர்த்தாக்களான நானூற்று ஐம்பத்தெட்டு வீரமறவர்களின் வீரம் செறிந்த இலட்சியமும், தலைவனின் பாதையிலே தளராது போரிட்டு வீரகாவியம் படைத்த வீரச்செம்மல்களின் திருமுகங்களும் எம் கண்முன்னே நிழலாடுகின்றன.

1993-11-11 அன்று புலர்கின்ற காலைப்பொழுதினிலே ஓர் செய்தி "மகிழினி பூநகரிச் சமரில் மாவீரர் வரிசையிலே ஒருத்தி ஆகிவிட்டாளாம்."

மகிழினி! நானூற்று ஐம்பத்தெட்டு தியாகிகளில் நீயும் ஒருத்தி என்ற செய்தி என்னை உலுக்கத்தான் செய்தது. எம்முடன் ஈராண்டு காலம் உண்டு, உறங்கி, உலாவித் திரிந்த அவள் இனி வரப்போவதில்லை.

உன் வீரவதனம் என் கண் முன்னே நிழலுருவமாய் தெரிகிறது. பூநகரி மண்ணை மீட்போம் என்ற மன உறுதியுடன் எதிரியின் பாசறைக்குள் வழிகாட்டியாக நீ சென்று வீரச்செயல் புரிந்திட்ட கதைகேட்டு எம் நெஞ்சம் விம்மிப்புடைக்கின்றது.

10ம் திகதி தாக்குதலுக்கான நாள். எம் பிரிவில் அனைவரது முகங்களிலும் ஏதோ ஒருவித அமைதி குடிகொண்டிருந்தது. மதியச் சாப்பாட்டுக்குப்பின் நாம் அனைவரும் ஒன்றுகூடி இருக்கும்போது, ஒவ்வொருவரும் ஒருவர், முகத்தை ஒருவர் ஏதோ புதியவர்களைப் பார்ப்பது போன்று பார்க்கிறார்கள்.

மகிழினி திடீரென்று "என்னை எல்லோரும் வடிவாப் பாருங்கோ! ஏனென்டா நான் இந்தச் சண்டையில் மண்டையைப் போட்டுவிடுவன். நான் இந்தச் சண்டையில் வீரச்சாவு அடைந்தால் உயிருடன் திரும்பி வாற ஆக்கள் எனக்கு வரலாறு எழுதுங்கோ" என்றாள். அப்போது துளசிரா, மகிழினியைப் பார்த்து , "நான் நிச்சயம் உயிருடன் திரும்பிவருவன். நான் உனக்கு வரலாறு எழுதுகிறன். நீ கவலைப்படாதே" என்றாள்.

அப்போது ஒரு தோழியைப் பார்த்து மகிழினி, "ஒவ்வொருவரும் உங்களுக்கு விருப்பமான பாட்டுக்களை இப்ப பாடவேணும்" என்று கூறினாள். அப்போது துளசிரா "மகிழினி, உனக்கு விருப்பமான பாட்டை முதலிலே பாடு. பிறகு ஒவ்வொருதரும் படிக்கிறம்" என்றாள்.

மகிழினி மறுப்பு எதுவும் கூறாமல் "ஆராரோ பாடவந்தேனே. ஆவாரம் பூவின் செந்தேனே" என்ற பாடலைப் பாடினாள். முன்னர் என்றால், அவளுடைய குரலைக் கேட்டு எல்லோரும் சிரித்து இருப்போம். ஏனென்றால் சுருதி கூடிய பாடல்களை எல்லாம் அவளால் பாடமுடிவதில்லை. அடித்தொண்டையால் பாடும்போது கிணற்றுக்குள் இருந்து படிப்பது போன்றிருக்கும்.

"நீங்கள் எல்லோரும் நான் வீரச்சாவடைந்தால் எங்கள் வீட்டுக்குப் போங்கோ. என்ர அம்மாவுக்கும், அம்மம்மாவுக்கும் ஆறுதல் சொல்லுங்கோ. அம்மம்மாதான் என்னில நிறையப் பாசம். அவதான் நான் வீரச்சாவடைஞ்சா தாங்கிக் கொள்ளமாட்டா" என்றாள்.

மன்னார் மாவட்டத்தில் பனங்கட்டிக்கொட்டு என்னும் கிராமத்தில் அருள்வாசகம் தம்பதிகளின் மூன்றாவது புத்திரியாகப் பிறந்தாள் மகிழினி. இவளுக்கு இரண்டு அண்ணன்மாரும் ஒரு தம்பியும் ஒரு தங்கையும் உண்டு. அவர்களில் இவளுடைய இரண்டாவது அண்ணன் இயக்கத்தில் இணைந்துகொண்டார். இவள் தன் அம்மம்மாவுடன் வளர்ந்து வரலானாள். தந்தை சுகவீன முற்று இறந்தபின், 1990 இன் நடுப்பகுதியில் இயக்கத்தில் தன்னை முற்றுமுழுதாக இணைத்துக் கொண்டாள். மணலாற்றுக் காட்டில் பத்தாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்தாள். பயிற்சிப் பாசறையில் மிகவும் திறமையுடன் செயற்பட்டு சக தோழிகளின் மனதைக் கவர்ந்தாள்.

பயிற்சி முடிந்து வெளியே வந்தபின் கோட்டை முகாம் தகர்ப்பில் பங்குகொண்டு திறம்படச் செயற்பட்டாள். பின்பு பலாலியில் கட்டுவன் பகுதியில் அமைந்துள்ள சிறீலங்காப் படைகளின் காவலரண்களையும் இராணுவத்தின் செயற்பாடுகளையும் அவதானிக்கும் முகமாக, மகளிர் படைப்பிரிவிலிருந்து ஒரு பிரிவு அனுப்பப்பட்டது. அதில் அவளும் ஒருத்தியாகப் போனாள்.

**லெப். மகிழினி**



**சகாயபாமா அருள்வாசகம்**
*செபஸ்தியார் கோயிலடி, மன்னார்.*
**பிறப்பு: 1974 - 04 - 30**
**வீரச்சாவு: 1993 - 11 - 11**

ஆகாய, கடல், வெளிச்சமரிலும் திறம்படச் செயற்பட்டு, எல்லோராலும் திறமையாகப் பேசப்பட்டாள்.

1991 இன் நடுப்பகுதியிலே அவள் எங்கள் பிரிவில் இணைக்கப்பட்டாள். இதன் பின்பே அவளின் குணங்கள் எனக்கு முற்றுமுழுதாகத் தெரியவந்தது.

அவளை எல்லோரும் 'பவள்' என்றும், 'செயின் புளொக்' என்றும் செல்லமாக அழைப்பார்கள். அவளின் தோற்றமும் நடையும் பார்ப்போர் எல்லோரையும் சிரிப்புக்குள்ளாக்கும். யாராவது வேண்டுமென்றே 'பவள்' என்று கூப்பிட்டால், ஒன்றும் கூறாமல் சிரித்துவிட்டு சென்றுவிடுவாள்.

எங்கள் முகாமில் எங்களுக்கு கடுமையான பயிற்சி தரப்பட்டது. இவளுக்கு மழைக்காலங்களிலும், குளிர் காலங்களிலும் இழுப்பு வருவதுண்டு. அதனை அறிந்த பொறுப்பாளர் அவளை, "நீ இனி பயிற்சிக்கு வரவேண்டாம்" எனக்கூறியபோதும், அவள் கேட்கமாட்டாள். "பயிற்சி எடுத்தால் வேளைக்கு இழுப்பு மாறிவிடும்" என்று கூறுவாள்.

ஒருநாள் நான் மகிழினியைப் பார்த்து, "உன் அண்ணன் இயக்கத்திலையிருந்து விலகிவிட்டாராம்" எனக் கூறினேன். தமையன் விலகிய செய்தியைக் கேட்டவுள், "நான் இனி அண்ணனுடன் கதைக்க மாட்டன்" எனக் கூறினாள். "ஏன்?" என்று கேட்டதற்கு, "நினைச்ச நேரம் இயக்கத்துக்கு வாறதுக்கும் நினைச்ச நேரம் விலகுறதுக்கும் இயக்கத்தை என்னெண்டு நினைச்சார்" எனக் கூறியவளின் பார்வையிலே அவளின் மனவுறுதியையும், இயக்கத்தில் அவள் கொண்டுள்ள விசுவாசத்தையும் எல்லோரும் புரிந்துகொண்டோம்.

எங்கள் முகாமில் மகிழினியின் சமையல்முறை என்றால் எல்லோருக்கும் சந்தோசம். காரணம் அவள் தேநீர் தயாரித்தால் நாங்கள் எல்லோரும் இரண்டு கோப்பை தேநீர் குடிப்போம். அவ்வளவு சுவையாக இருக்கும். நாங்கள் சமைக்கும்போது கறிக்கு உப்பு பார்ப்பது, புளி விடுவது எல்லாம் அவள்தான். அத்துடன் எமக்கு ஏதாவது நல்ல சாப்பாடுகள் வந்தால், அதை எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டு பகிர்ந்து கொடுப்பதற்கு நிகர் அவளேதான். தான் உண்ணாவிட்டாலும் மற்றவர்களுக்கு உண்ணக் கிடக்க வேண்டும் என்ற மனம் படைத்தவள் மகிழினி.

ஒருமுறை, எங்கள் பிரிவைப் பதுங்கு குழி வெட்டும்படி கூறினார்கள். அப்போது "நான் சைற் எடுக்கிறன்" என்று கூறி மிகவும் நன்றாக, சுத்தமாக கோடரியால் பக்கத்தை எடுத்தாள். எந்தவொரு வேலையையும் கடமை உணர்வோடு மிகவும் சுத்தமாகச் செய்ய வேண்டும் என நினைப்பவள் மகிழினி. பத்து அடி ஆழம்வரை பதுங்கு குழி வெட்டிவிட்டோம். எங்கள் பொறுப்பாளர் இன்னும் இரண்டு அடி ஆழம்வரை வெட்டும்படி கூறினார். அப்போது மகிழினி "நான் இனி கீழ இறங்கமாட்டன். மேலே நிண்டு மண் இழுக்கிறன்" என்று கூறியவள், திடீரென்று பதுங்கு குழிக்குள் விழுந்துவிட்டாள். விழுந்தவள் ஏற முடியாமல் தத்தளித்த காட்சியை இன்று நினைத்தாலும் சிரிப்பாய் வருகிறது.

எங்கள் பிள்ளைகளில் யாராவது ஒரு பிள்ளைக்கு சுகவீனமென்றால், ஒரு தாயின் உணர்வோடு இரவு பகலென்று சிரமத்தைப் பாராது மருந்துகள் கொடுப்பதில் இருந்து உணவு கொடுத்து உடை துவைத்துக் கொடுப்பதுவரை மனச்சலிப்பின்றி செய்து முடிப்பாள்.

எங்கள் முகாமில் ஒர்நாள் ஒரு தோழியின் பிறந்தநாள். நாமெல்லோரும் குழுமி இருந்தோம். அப்போது பொறுப்பாளர் வந்து "மகிழினியைக் காணவில்லை. எங்கே?" என்று கேட்டார். வெளியிலிருந்து, "இங்கே நிற்கிறேன்" என்று குரலைக் கேட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தோம். துப்பாக்கியுடனும் மேலதிக ரவைக்கூடு வைக்கும் உறையுடனும் நின்ற அவளைப் பார்த்த அனைவருக்கும் அவளின் கடமை உணர்வினை நினைக்க நெஞ்சம் புல்லரித்தது. நாமோ, "இந்த இடத்தில் ஆமி வருவானா?" என்ற அசட்டுத்துணிவுடன் இருந்தோம்.

அவள் கூறினாள், "எதிரி என்பவன் எப்போதும் எந்தக் கணமும் எங்களைத் தாக்கி அழிக்கலாம். நாம் பகல் இரவென்று அசட்டையாக இருக்கக் கூடாது. அது எமக்கு அழிவையே ஏற்படுத்தும்" எனச் சிறு பிரசங்கமே செய்தாள்.

பாடசாலையில் நான்காம் வகுப்பு வரை கல்வி பயின்ற இவள் எமது பிரிவுக்கு வந்து புத்தகங்கள் படிப்பதிலும், செய்தித்தாள்கள் படிப்பதிலும்தான் தன் உலக அனுபவங்களை வளர்த்துக் கொண்டாள். இவளிடம் ஒரு சிறப்புத் தன்மை என்னவெனில், ஏதாவது ஒரு புத்தகத்தைப் படித்தால், அதை அப்படியே ஒரு வரியும் விடாமல் ஒப்புவிப்பாள்.

தோழி! உன்னைப் பற்றி வரலாறு எழுதும்படி நீ தோழி துளசிராவிடம் கூறினாய். ஆனால், இன்று துளசிராவுக்கே நாம் வரலாறு எழுதுகின்றோம். இது தான் எமது போராட்டம். விடியும்வரை இது தொடரும். ■

- கிருஸ்ணா -

# வடக்கு - கிழக்கு இணைப்பு தேவையற்றதொன்று

## — சிறிமாவோ பண்டாரநாயக்கா

வடக்கு கிழக்கு இணைப்பு தேவையற்றதொன்று. இந்த இணைப்பை எமது கட்சி எப்போதுமே எதிர்த்து வந்துள்ளது. இவ்வாறு, இணைப்பு குறித்து கருத்துத் தெரிவித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வட - கிழக்கு இணைப்பு அபிப்பிராய வாக்கெடுப்பு என்பவற்றைப் பற்றி தமிழர், முஸ்லீம், சிங்களவர் ஆகிய முத்தரப்பினரதும் அபிப்பிராயத்துக்கு இணங்கவே செயற்பட வேண்டும் என்றார்.

இணைப்புக்குறித்து கருத்துத் தெரிவித்த சிறீநாக விகாராதிபதி மாதுலுவாவே லோகித்த தேரோ, "வடக்கு -கிழக்கை ஒன்றிணைப்பது சட்டவிரோதமானது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு -கிழக்கை இணைக்க வேண்டும் என்ற தீர்மானம் உண்டு. ஆனால் அந்த ஒப்பந்தம் செயலற்றதொன்றாகி விட்ட நிலையில் அது தேவையற்ற ஒன்றாகிவிட்டது. மேலும், இரு மாகாண இணைப்பும் தமிழருக்கே சாதகமாகிவிடும். அல்லது ஈழப்போருக்கு வலுசேர்க்கும். எனவே இணைப்பு என்பது இரத்துச் செய்யப்பட வேண்டும்" என்றார்.

வடக்கு - கிழக்கு இணைப்பு சட்டரீதியானதல்ல. இது தொடர்பாக சட்டரீதியான வாக்கெடுப்பு நடத்த வேண்டிய அவசியமில்லை. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குப்பலம், இணைப்பை நிராகரிப்பதற்கு போதுமானது என்று குறிப்பிட்டார் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஸ் குணவர்த்தனா. ■

## பொலநறுவையில் காணாமல்போன ரி-56 இராணுவத்திடமிருந்து மீட்பு

பொலநறுவைப் பொலிஸ் நிலையத்திலிருந்து காணாமல் போன ரி -56 துப்பாக்கி கொத்மலை இராணுவ முகாம் சிப்பாயிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது. இவரும் இவருக்கு உடைந்தையாக இருந்தவர் எனக்கூறப்படும் பொதுமகன் ஒருவரும் சிறீலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் விடுமுறையில் தனது ஊரில் வந்து நின்றபோது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் துப்பாக்கியைத் திருடியதாக குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. ■

# பள்ளி எழுந்திடுவீரே!

**08.03.1994 இல் நடந்த அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்பட்ட இலக்கிய, ஓவியப் போட்டிகளில் முதலிடம் பெற்ற சிறுகதை.**

சிறு கதை

**- வேணி சின்னத்தம்பி -**

மத்தியான வெய்யில் நெருப்பாய்க் கொழுத்திக் கொண்டிருக்குது. தார் ரோட்டிலே கால்வச்ச உடனேயே நான் துடிச்சுப் போறன். இந்த வெயிலுக்குள்ளாலை நடந்துபோய் பேத்தியைப் பார்க்கவேணுமோ எண்டு நினைச்சுக்கொண்டு நான் படலையடியிலை பேசாமல் இருக்கிறன்.

இந்த வெயிலைப் பாக்கேக்கை எனக்கு என்ரை பேத்தியின்ரை ஞாபகம் வருகுது. இப்பிடி எத்தினை வெயிலுக்கை காஞ்சு காஞ்சு அவளும் போராடுகிறாள் எண்டதை யோசிச்சுப் பாக்கேக்கை இது பெரிய வெயிலோ எண்டு நான் நினைக்கிறன்.

வெத்திலையை வாய்க்குள்ளை போட்டுக் குதப்பிக்கொண்டு, கூன் விழுந்த முதுகை இன்னும் நல்லாய்க் கூனிக்கொண்டு நான் எழும்பி தெருவிலை நடக்கிறன்.

**பேத்தியை, அவளின்ரை நடைமுறையைப் பாக்கேக்கை, எனக்கு மூக்கிலை விரலை வைக்கவேணும் போல கிடக்கு. சண்டையைப்பற்றி, தங்கடை வாழ்க்கையைப் பற்றி அவள் கதை கதையாய்ச் சொல்லேக்கை, 'இது என்ரை பேத்திதானோ' எண்டு நான் ஆச்சரியப்பட்டுப் போறன். எனக்கு அவள் புத்தி சொல்லேக்கை, ஒவ்வொரு விசயத்துக்கும் வழிகாட்டேக்கை 'இவளுக்குத் தானோ நான் தலை இழுத்து, பொட்டுப் போட்டு வடிவு பாத்தன்' எண்டு நான் திகைச்சுப் போறன்.**

என்னை விலத்திக்கொண்டு சைக்கிள்களும், வாகனங்களும் போய் வருகுது. மாட்டு வண்டியிலை விறகு கொண்டு போறமாதிரி சைக்கிள்ளை விறகு கட்டிக்கொண்டு போறவையாலை தெரு பெரிசாய் அமர்க்களப்படுது. சுமையை மறக்க தெருவில கும்மாளம் போடுகினம் போலை.

திருவிழாவுக்கு நிறையிற மாதிரி சனம் நிறைஞ்சு போயிருக்கிற இந்த தெருவைப் பாக்கேக்கை, முந்தி இந்தத் தெரு இருந்த நிலை எனக்கு ஞாபகம் வருகுது. பஸ், ரெயின் ஓடுற காலத்திலை இந்தத் தெருவை,

இதுக்கு அங்காலையும் இஞ்சாலையும் பரந்து கிடக்கிற பெரிய வெளியை, உந்தப் பனைமரங்களை அப்ப ஒருத்தருக்கும் தெரியாது. உந்த வெளிக்குள்ளை உப்பு விளையுற காலத்திலை உப்பு அள்ள வாறவையாலைதான் எப்பாவது இந்தத் தெரு நிறைஞ்சு போகும். இப்ப உள்ள வாகனமெல்லாம் இந்த தெருவிலைதான் ஓடுற மாதிரிக் கிடக்கு. தெருவாலை போற வாற ஒவ்வொருத்தருக்கும் தெருவிலை கிடக்கிற ஒவ்வொரு பள்ளமும் இப்ப மனப்பாடம் மாதிரி.

நான் கனதூரம் நடந்து வந்திட்டன். கால் இரண்டும் சோர்ந்து போனது மாதிரித் தொங்க, இந்த புளியமரத்துக்குக் கீழை ஆறுதலாய் இருக்கிறன். கால் இரண்டையும் தடவிவிட்டுக்கொண்டு தெருக்கரையோடை நிக்கிற இந்தப் பெரிய புளியமரத்தை நான் வடிவாய்ப் பார்க்கிறன்.

முந்தி, முத்தர் அம்மான்ரை மூத்தவன் இந்த மரத்திலை தூக்குப் போட்டு செத்தபிறகு ஒருத்தரும் இந்த மரத்துக்குக் கிட்ட வாறதில்லை. அவனின்ரை ஆவி இதிலை சுத்திக்கொண்டிருக்கும் எண்டுபயம். இப்ப இந்த மரத்துக்குக் கீழை, அடுத்த பக்கத்திலை சின்னராசன்ரை தேத்தண்ணிக்கடை சனத்தாலை நிரம்பி வழியிறது எனக்குத் தெரியுது.

இந்தியன் ஆமி வாகனங்களிலை ஓடித் திரியேக்கை பேத்தியும் அவளின்ரை ஆக்களும் இந்த மரத்துக்கு மேலை ஒளிச்சு, ஒருநாள் முழுக்க ஏறியிருந்தது எனக்கு ஞாபகம் வருகுது. அண்டைக்கு பேத்தி இதை சாதாரணமாய் சொல்லேக்கை நான் நடுங்கிப் போனேன்.

"உந்த மரத்திலையோ... முத்தர் அம்மான்ரை மூத்தவனின்ரை ஆவி சுத்துற மரத்திலையோ..."? எண்டு நான் பயந்துகொண்டு கேக்கேக்கை, பேத்தி அடக்கமாட்டாமல் விழுந்து விழுந்து சிரிச்சது எனக்கு இப்பவும் கண்ணுக்கை தெரியுது.

பேத்தியை, அவளின்ரை நடைமுறையைப் பாக்கேக்கை எனக்கு மூக்கிலை விரலை வைக்கவேணும் போலை கிடக்கு. சண்டையைப் பற்றி, தங்கடை வாழ்க்கையைப்பற்றி அவள் கதை கதையாய் சொல்லேக்கை, 'இது என்ரை பேத்தி தானோ' எண்டு நான் ஆச்சரியப்பட்டுப்போறன். எனக்கு அவள் புத்தி சொல்லேக்கை, ஒவ்வொரு விசயத்துக்கும் வழிகாட்டேக்கை, 'இவளுக்குத்தானோ நான் தலை இழுத்து, பொட்டுப் போட்டு வடிவு பாத்தன்' எண்டு நான் திகைச்சுப் போறன்.

அந்தக் காலத்திலை பேத்தியின்ரை வயதிலை நானெல்லாம் என்னத்தைச் சாதிச்சுப்போட்டன்? வீட்டுக்கை இருந்து, பிள்ளையளைப் பெத்து, சமைச்சுப் போட்டதைத் தவிர வேறை என்னத்தை சாதிச்சன்? பேத்திக்கு முன்னாலை நானெல்லாம் வெறும் தூசெண்டு நினைச்சுக்கொண்டு நான் பெருமூச்சு விடுறன்.

பெரிய இரைச்சலோடை வந்த ஒரு வாகனம் என்னை விலத்திக் கொண்டு போகுது. அந்த வாகனத்தின்ரை புகை என்ரை முகத்திலை அடிக்க, நான் விலத்தி இருக்கிறன்.

இந்த புளியமரத்துக்குக் கீழை கால் இரண்டையும் நீட்டி ஆறுதலாய் இருந்துகொண்டு தூரத்திலை வாற வாகனங்களை நான் பார்த்துக்கொண்டிருக்கிறன். மண்ணெண்ணைப் புகையைக் கக்கிக்கொண்டு போற வாகனங்களையும், விறகுகளோடை போற சைக்கிள்களையும், விறகில்லாமல் வாற சைக்கிள்களையும் பார்த்துக்கொண்டிருந்த நான் ஒருக்கா திடுக்கிட்டுப் போறன்.

ஒருத்தன் சைக்கிள் ஓடிவாறான். எல்லாரும் ஒரு பக்கமாய், நேராய் ஓடிவரேக்கை அவன் மட்டும் அங்காலையும் இஞ்சாலையும் வளைஞ்சு வளைஞ்சு ஓடிவாறான். அந்த சைக்கிளோட்டத்தைப் பாக்க எனக்கு ஆத்திரம் வருகுது.

நடுரோட்டிலை இப்பிடியோ சைக்கிள் ஓடுறது எண்டு நான் நினைக்கிறன்.

நான் பார்த்துக் கொண்டிருக்கேக்குள்ளேயே அந்த சைக்கிள்காரன் சினிமாப் படங்களிலை வாறமாதிரி அந்தப் பக்கம் போறதும், இந்தப் பக்கம் வாறதுமாய் ஓடிக்கொண்டு வாறான். நான் நல்லாய் அவனையே உத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறன்.


அவனுக்குப் பின்னாலை இப்ப எனக்கு ஒரு நீலச்சட்டை தெரியுது. அந்த நீலச்சட்டை போட்டவள் அவனுக்குப் பின்னாலை சைக்கிளோடி வாறாள். அவள் சைக்கிளை வேகமாய் மிதிக்க, அவனும் விடாமல் வேகமாய் ஓடுகிறான். அவள் மெதுவாய் ஓட அவனும் சட்டெண்டு பிரேக் பிடிச்சு மெதுவாய் ஓடுறான்.

ஓ... எனக்கு இப்பத்தான் விசயம் விளங்குது.

என்ரை பேத்தி அடிக்கடி சொல்லுறமாதிரி நடுத்தெருவிலை பட்டப்பகல்லை ஒரு மானபங்கம் நடக்குது.

அவன் சைக்கிள் ஓடி ஓடி பின்னாலை திரும்பி அவளைப் பார்த்து என்னவோ சொல்லிச் சிரிக்கிறான். அவள் பயந்துபோய் கண்ணை உருட்டி, உருட்டி அங்காலையும் இஞ்சாலையும் பார்த்துக்கொண்டு, என்ன செய்யுறதெண்டு தெரியாமல் தவிச்சுப்போறாள். 'பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்கு சீவன் போகுது'.

**அந்தக் காலத்திலை தண்ணி எடுக்கிறதுக்கு நான் குடம் கொண்டு போகேக்கை, வடிவேலற்றை கடைசிப்பொடியன் பின்னாலை வந்து காதுக்கை எம். ஜி. ஆற்றை காதற்பாட்டைப் பாடிப்போட்டுப் போவான்.**
**அப்ப எனக்கு ஆத்திரம் வரும். கையில் கிடக்கிற குடத்தைத் தூக்கி அவனுக்கு எறிய வேணும் போலை கிடக்கும். ஆனால் நான் ஒண்டும் பேசமாட்டன். வீட்டுக்குள்ளாலை வெளிக்கிட்டுத் தெரியாக் காலத்திலை, ஊர், உலகம் புரியாத காலத்திலை நான் பேசாமல் போனன் எண்டால், இப்பவும் பேசாமல் போறதோ? இது பேத்தியின்ரை காலமெல்லோ...?**



எல்லாத்தையும் பாத்துக்கொண்டிருந்த எனக்கு, புண்ணிலை புளி பத்தினமாதிரி ஆத்திரம் உச்சிக்கு ஏறுது.

அந்தக் காலத்திலை தண்ணி எடுக்கிறதுக்கு நான் குடம் கொண்டு போகேக்கை வடிவேலற்றை கடைசிப் பொடியன் பின்னாலை வந்து காதுக்கை எம். ஜி. ஆற்றை காதற்பாட்டைப் பாடிப்போட்டு போவான்.

அப்ப எனக்கு ஆத்திரம் வரும். கையிலை கிடக்கிற குடத்தைத் தூக்கி அவனுக்கு எறிய வேணும் போலைகிடக்கும். ஆனால் நான் ஒண்டும் பேசமாட்டன். வீட்டுக்குள்ளாலை வெளிக்கிட்டுத் தெரியாக் காலத்திலை, ஊர் உலகம் புரியாத காலத்திலை நான் பேசாமல் போனன் எண்டால், இப்பவும் பேசாமல் போறதோ? இது பேத்தியின்ரை காலமெல்லோ...?

தெருவாலை போறவாறவை அவன் அவளை வெருட்டுறதையும், அவள் பயந்து சாகிறதையும் பார்த்துக்கொண்டு பேசாமல் போகினம்.

தொடர்ச்சி 9ம் பக்கம்.....

# Network

May 1994

Published by the International Federation of Tamils


"We launched our struggle for self determination and political independence because of the systematic oppression of our people by the Sri Lankan state..."

- Velupillai Pirabakaran,
Leader of the Liberation Tigers
of Tamil Eelam

## Candidly Speaking

**Nadesan Satyendra**

# The real politick of 'human rights'

**Recent reports by Amnesty International expose the Sri Lanka government's continued violations of human rights. At the same time, they also high light the failure of Amnesty's endeavours in Sri Lanka during the past ten years. It used to be said unkindly of Rotary: 'Whither Rotary? To Lunch.' It may well come to be said of Amnesty in Sri Lanka: 'Whither Amnesty? To more fact finding missions.'**

The weakness of Amnesty's approach is that it chooses to address symptoms rather than causes. Amnesty is quick to point out, that its remit does not extend to addressing the rights and wrongs of an armed conflict. Amnesty says that it does not take sides.

**But if you do not take sides where a government has so oppressed a people that that people have, as a last resort, justifiably taken arms to resist that oppression, then you end up by making pious pleas to the very same government which is intent on subjugating that people.**

Your pleas, by implication, recognise the right of that Sinhala dominated Sri Lanka government to continue to govern a people it has systematically oppressed for several decades. Your pleas also promote the myth that the Sri Lanka government is genuinely concerned with protecting the human rights of the Tamil people and securing a 'negotiated' and just settlement of the ongoing armed conflict. The Sri Lanka government then seizes upon your appeals, to give assurances about its future conduct and buys time to continue its oppression and advance the assimilative and so called 'pacification' process. You then make further reports saying that the Government has not kept its undertakings and you make fresh appeals to the same government. In the meantime, Tamils continue to be unlawfuly detained, tortured, subject to indiscriminate aerial bombardment, and thousands simply 'disappear'.

**David Selbourne was right when he said in the 1980s: "It is evident that one of the most difficult points for commentators to grasp... is that the Sinhalese, as I have maintained since I first began to write on Sri Lanka, have no intention whatever of reaching a 'negotiated' settlement with the Tamils."**

Deanna Hodgin from Insight was more direct than Amnesty has ever had the courage or inclination to be. She declared forthrightly in 1990: **"Human rights is not an idea with much currency for the Sri Lankan government. Quiet diplomacy is not an option for our policy in Sri Lanka..."**

Though Amnesty recently took full page advertisements in the London press to protest against the 'quiet diplomacy' stance adopted by Government delegations at the Geneva UN Commission on Human Rights, on the East Timor question, Amnesty itself has often appeared to be a prisoner of the same 'quiet diplomacy' syndrome.

**Lets face it. It will be difficult to pretend that Amnesty's reports on Sri Lanka during the past ten years have inhibited, leave alone prevented, Sinhala Buddhist chauvinism's attack on the Tamil people. Incidents of torture and unlawful detention have multiplied rather than decreased. Impunity is the new buzz word at the UN Commission on Human Rights and the Sri Lanka authorities continue to torture with impunity (and apparent relish) whilst Amnesty continues to report.**

Nine long years ago, Amnesty reported in 1985: "AI has repeatedly informed the Sri Lankan government that special legal provisions, especially those in force since 1979 facilitate torture.. Relatives have difficulty in establishing the whereabouts of detainees and in recent months over 180 are reported to have 'disappeared', the authorities having denied any knowledge of their detention... **AI knows of no case in recent years in which police or security personnel have been prosecuted for acts of torture or deaths in custody of political detainees held under the Prevention of Terrorism Act...**

The following types of torture have been reported to AI: 1.prolonged hanging upside down while being beaten all over the body, sometimes for the duration of one night and sometimes with the head tied in a bag in which chillies were burning, making the victim feel close to suffocating 2.prolonged beatings, especially on the soles of the feet while lying stretched out on a bench or while hanging by the knees from a pole; beatings on the genitals and other parts of the body with sticks, batons and sand filled plastic tubes. 3.insertion of chilli powder in the nostrils, mouth and eyes and on genitals. 4.electric shocks 5.insertion of pins under fingernails and toenails and in the heels. 6.insertion of iron rods in the anus 7.burning with cigarettes 8.mock or threatened executions... In view of persistent reports of torture in Sri Lanka in recent years AI recommends that the Sri Lanka Government implement the following measures as a sign of its commitment to eradicate torture and ill treatment.... **Please write courteously worded letters urging the Sri Lanka authorities to take effective measures for the prevention of torture, as indicated below:**

1.The Sri Lanka government should issue clear public instructions to the army, police and other security forces personnel that torture is a criminal act and will not be tolerated under any circumstances. All relevant officials should be instructed too refuse to obey any order to use torture

2.Relatives and lawyers should be informed promptly of the wherea-

*continued on page 2*



## To Our Neighbours

*O'Mount Sooriyakanda*
*Grief has darkened you*

*My thin younger sister*
*Much like my dear mother*
*Went from hither*
*Never to return from thither*

*They suspect my brother*
*To be a tiger*
*His eager hands that wipe our tears*
*Are handcuffed and led yonder*

*My heart is aching*
*With pain I am grieving*

*The shawl that adorned the shoulder*
*Of my father, on which I did slumber*
*Is found on the forecourt floor*
*Soaked in blood you will wonder*

*Life's great river*
*I believed would never dry*
*But now the river is frozen*
*In great despair*

*Close by to all the army camps*
*We searched in bushes and wells*
*Broke open recent mounts*
*In search of our dear lost ones*

*The reflection of the enemy's hearts*
*Is reflected in the deep broad crevasse*
*Found in every street to perceive*
*Come, come and see to believe*

*Shedding blood and sweat alike*
*Our house built with dreams and hope*
*The broken walls would display*
*The cruel face of our enemy away*

*Unknown foreign and unfamiliar faces*
*Could be seen on our forecourt floors*
*Staring at our family members*

*It is not fate, my neighbour*
*With tears to search the graves of yonder*
*Sooriyakanda mount greatly grieving tender*
*Even Buddha was once buried for you to wonder*

-Subba- (translated from the original in Tamil)

# Candidly Speaking

*continued from front page*

bouts of detainees. No one should be held in unacknowledged detention.

3.When it is found that torture has been committed by or at the instigation of a public official, criminal and disciplinary proceedings should be instituted.

**A number of 'courteously worded letters' were, no doubt, sent by Amnesty members committed both to securing human rights and to remaining courteous. But with what result? Amnesty's recommended action may well have appeared to the Tamil people somewhat like sending courteous letters to the fox to look after the 'human rights' of chickens in the chicken pen.**

Again, that was nine years ago. Since then, Amnesty has reported every year without exception on torture by Sri Lanka authorities - and Sri Lanka has continued to torture, year in and year out, again without exception.

In January 1986, Amnesty Reported: **"Amnesty International was concerned about reports of arbitrary killings of many hundreds of non combatants by government security forces in northern and eastern Sri Lanka and of many 'disappearances'. Widespread torture of political detainees was reported... The organisation also remained concerned about long term detention without charge or trial of many hundreds of Tamils."**

Amnesty reported again in January 1988: **"The (Sri Lanka) police and armed forces continued to kill non combatant Tamils...** Of particular concern were reprisal killings by the security forces and reports that Tamil suspects taken into custody were shot or tortured to death and their bodies disposed of in secret.''

Amnesty reported yet again in January 1989:"Thousands of people were detained without charge or trial, and dozens 'disappeared' following arrest by the Sri Lankan security forces and by the Indian Peace Keeping Force (IPKF) deployed in the northeast. The fate of hundreds who had disappeared in previous years remained inadequa–tely investigated. There were many allegations of torture.''

In January 1991, Amnesty reported: ''(During 1990)Thousands of people disappeared or were extra judicially executed in the northeast; many were tortured and then killed in custody. An unknown number of others were detained in the area... Government forces in the northeast were reported to have extra judicially executed thousands of defenceless civilians in areas they had regained..**Victims were reportedly shot, bayonetted, stabbed or hacked to death; some were said by witnesses to have been burned alive.''**

''Victims bodies were regularly left in the open. The identities of many remained unknown; others, presumably killed in custody, were identified as people who had been detained by security forces days earlier. Some had been burned beyond recognition or mutilated. In Amparai, where the Special Task Force, a police commando unit, was especially active, bodies - some without heads - began to be washed up on the beaches from September.

... **Both the security forces and the government refused to acknowledge that many defenceless people had been deliberately killed...** Victims included babies and their mothers, children and elderly men and women. ''

And now in February 1994, (and countless 'courteous' letters later) Amnesty has once again reported at length on torture, Sri Lanka style in 1993: ''Some Tamil people have been arrested by groups of armed men in military or civilian dress, blindfolded and taken to secret places of detention where they have been held at least a week, interrogated and torture to make them confess to involvement with the LTTE. Families have no idea who has taken their relative nor where their relative is detained.



**''As the story goes, a chicken and a pig passed a man in a restaurant enjoying his bacon and eggs. The chicken pointed to the eggs and spoke of its commitment to food production. The pig replied, pointing to the bacon,: 'You are only involved - I am committed.' The Tamil people have been at the receiving end of Sinhala Buddhist chauvinism for several decades and they have put their lives on the line in the defence of their homeland and of their near and dear. To report on human rights in the island of Sri Lanka without admitting to the justice of the demand for a Tamil homeland and the right of the Tamil people to govern themselves, is to speak the language of the chicken - involved perhaps, but, certainly, not committed.''**

Under Emergency Regulations 19(8) it is a criminal offence to detain any person in an unauthorised place of detention, which reflects one of the recommendations made by Amnesty International and accepted by the Government in 1991. It is therefore very disturbing that only a few months after the Defence Secretary gazetted a list of 343 authorised places of detention in Sri Lanka, people were being abducted, held in secret, unauthorised locations and interrogated under torture. This is reminiscent of the manner in which thousands of people were 'disappeared' in the south between 1988 and 1990, by police or army personnel who sought to hide their identities in order to evade accountability for their actions.

**Torture or ill treatment is a routine method of forcing detainees to confess to involvement with the LTTE. In particular, Amnesty International has interviewed a number of Tamil detainees who were beaten by CDB officers during interrogation. Prisoners held in secret detention by the army or other groups suffer more severe forms of torture.**

Amnesty International has also collected several first hand accounts of prisoners being beaten in local police stations, including those in Dehiwela, Kotahena and Peliyagoda. Sometimes prisoners are beaten while being questioned. On other occasions police randomly kick and punch prisoners in police cells for no apparent reason or ostensibly as a punishment for some perceived misdemeanour.

**Victims are often too frightened to complain about the treatment or do not believe their complain would lead to proper investigation and action.** The DIGP-Colombo told Amnesty International that no investigations have been launched into beatings because he had not received any complaints about specific incidents. .''

Amnesty recommended yet again, in terms reminiscent of its 1985 report, that 'the government should immediately end the detention of people in secret places 'and that 'the government and le–aders of the security forces should publicly state and issue orders that torture and other ill treatment will not be tolerated.'

**After ten years of Amnesty Reports, the Tamil people may be forgiven if they feel that these Reports have served only to demonstrate that the answer to forty years of consistent and systematic human rights violations by the Sinhala dominated Sri Lanka government cannot be another ten years of Amnesty Reports.** It is true that facts concerning violations of human rights need to be ascertained and published. But information on human rights abuses is not an end in itself. Human rights is not some self sufficient industry concerned simply with providing employment for researchers.

**The non governmental organisation, International Educational Development took a more rounded approach at the UN Sub Commission on Protection of Minorities in August 1990: ''The Universal Declaration of Human Rights states that all persons... have the right to the full realisation of their human rights and to an international order in which their rights can be realised.** The Sri Lanka situation has shown that for the past forty years, the Sinhala controlled government has been unwilling and unable to promote and protect the human rights of the Tamil population, and the Tamil population has accordingly lost all confidence in any present or future willingness or ability of the Sinhala majority to do so.

**Are people in this situation required to settle for less than their full rights. Can the international community impose on a people a forced marriage they no longer want and in which they can clearly demonstrate they have been abused? We conclude that in order for the human rights of the Tamil people and others in a similar situation to be realised, the international community must invoke the principle of self determination as it arises from persistent non fulfilment of the rights of minorities who have been subsumed into larger states.''**

**At the end of the day, the question that Amnesty may well need to ask is: what is the extent of its commitment to human rights? As the story goes, a chicken and a pig passed a man in a restaurant enjoying his bacon and eggs. The chicken pointed to the eggs and spoke of its commitment to food production. The pig replied, pointing to the bacon,: 'You are only involved - I am committed.' The Tamil people have been at the receiving end of Sinhala Buddhist chauvinism for several decades and they have put their lives on the line in the defence of their homeland and of their near and dear. To report on human rights in the island of Sri Lanka without admitting to the justice of the demand for a Tamil homeland and the right of the Tamil people to govern themselves, is to speak the language of the chicken - involved perhaps, but, certainly, not committed.**

It is, perhaps, all this and more which impelled Tamil Eelam leader, Velupillai Pirabakaran to say to the Tamil people on Maha Veerar Thinam in November 1993:''**...we are fully aware that the world is not rotating on the axis of human justice. ...International relations and diplomacy between countries are determined by the self interest of each country. .. In reality, the success of our struggle depends on our own efforts, on our own strength, on our own determination...''**

**The Tamil people know that they cannot afford the luxury of crying helplessly about the cynicism of real politick. They have recognised the need to marry principle with power and the Liberation Tigers of Tamil Eelam represent an open manifestation of that recognition and that marriage**

## Network

The demand for Tamil Eelam is a national question. It is, accordingly, an international question as well.

On the one hand, Sinhala chauvinism cannot succeed in its attempt to subjugate the people of Tamil Eelam without aid and support from influential sections of the international community, both in the Indian region and outside. On the other hand, in the end, Tamil Eelam itself will need to secure broad based international recognition.

To address the international frame within which the Tamil national struggle must perforce take shape, is therefore, not a matter of self indulgent luxury but a matter of immediate, direct and practical significance.

The new balances that are being struck in the emerging multi–polar world are not without relevance to the struggle of the people of Tamil Eelam. It is said states have permanent interests but do not have permanent friends. This may be more so in the case of nations struggling to become states.

If the 1950s and the 1960s were the decades of the anti colonial liberation movements, the 1990s is proving to be the decade of the post colonial national liberation movements. Self-determination is not a dirty word. The political force that it generates will, in the end, prevail over the power exerted by many existing state structures.

**Network** exists to help, support and network the world wide efforts being made to secure international recognition of the Tamil right to self determination.

Correspondence Address:

The International Federation of Tamils, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL

# TEEDOR Reports from Tamil Eelam

## Distribution of Cadju Plants in Mullaitivu

The Mullaitivu District Branch of **TEEDOR (the Tamil Eelam Economic Development Organisation)** distributed free cadju plants to people in the district from its ten acre nursery farm. Also 2000 coconut palms have been sold. These plants are now being grown by the people in their own lands.

## Fishing Nets given on Loan

Eighty fisherman in the Mullaitivu District have been provided with fishing nets worth Rs.277,000/- on a loan basis. The costs of these nets are repayable by the fishermen in instalments during a period of 20 months.

## Veterinary Services

TEEDOR has provided veterinary services by opening an Animal Health Centre at Kumilamunai in the Manal Aru area. The Centre provides services such as disease prevention, drugs and treatment of diseased cattle.

## Sesame cultivation

Several Village Production Committees of TEEDOR within the Killinochi District have each started a two acre farm for growing sesame, a grain widely in use amongst the Tamil people.

## Self Sufficiency in Salt

Due to the efforts made to attain self sufficiency in salt there is now sufficient salt for consumption. At the outbreak of the war in June 1990, a kilo of salt cost Rs.30/- as it had to brought from Colombo. Now, there is no shortage and a kilo costs Rs.10/- in the retail market.

## Double Burner Economy Oven

**The double burner economic oven, in wide spread use in the Jaffna Peninsula has now been introduced in the Killinochi District as well to prevent cutting down trees for firewood. Already 117 such ovens have been ordered from TEEDOR for Killinochi.**

## Village Uplift Schemes

Under TEEDOR's village uplift schemes, poultry farms have been opened at Ramavil and Kodikamam in Thenmadaratchy and in Alavi and Karanavai in Vadamaratchy. A fruit processing centre has been opened at Meesalai. 30 families have benefited by this scheme.

# Chit Chat

## Jobs for the boys?

"Ex SLFP now UNP, Anura Bandaranaike interviewed by the Sinhala owned Sri Lanka Sunday Times on the UNP defeat in the Southern Province elections in March: Q.Some say that the **abduction of Franciscu (SLFP member in the old Provincial Council) backfired on the UNP?** A. No one can say just because Franciscu was abducted the Peoples Alliance won the election. Though President Jayawardene suspended the civic rights of Mrs.Bandaranaike, which was seen as a grave injustice, he still won the next election by a million votes. **Q. Now Franciscu has lost his seat. Won't the UNP help him? A. We can give him a Government job. I have not met him. When I meet him I should talk about it"** - *Sinhala owned Sri Lanka Sunday Times, 3 April 1994*

## The middle Path?

UNP General Secretary, Senior Minister and ex President Premadasa stalwart Sirisena Cooray interviewed after the Southern Province election defeat: **Q.Are you saying that when Mr.Diss–anayake was taken back, your personal opinion did not matter? A. I took the middle path.** I acted on the ground that we should get as many members as possible to the party. **Q.Are you implying that you are against Mr.Dissanayake's re-entry?** A. Yes, it could be. Q. Are there any factions in the UNP today? A.I don't see any factions. There can be people faithful to certain others **Q. How would you compare President Wijetunga with President Premadasa? A. All leaders have their own style of working Q.Who is the more talented of them? A. Everyone knows that. You needn't ask me.**

### Hot Springs Weekly from Tamil Eelam:

# A long way to go before a just peace can be achieved

**A true and sincere desire for peace and settlement of the Tamil national question seems to be still far away from the minds of the Sinhala leadership - political or otherwise. This is the general opinion amongst people in Jaffna.** They ask: "Has any Sinhala politician called for an end to the war unconditionally and the commencement of peace processes? Not a single politician whether of the Government or of the (Sinhala) Opposition has expressed such a view thus far..."

...after the Poonakari (Pooneryn) battle, it has not been possible for the Government to hide from the Sinhala people that Sinhala soldiers also die - and that too, in large numbers in the war in the NorthEast. The Poonakari battle has exposed the Government's utterly false propaganda. Tamil civilians who are not involved in combat are killed in large numbers by aerial bombardment and shelling. Hardly a single Liberation Tiger has ever died in these aerial bombings and artillery shellings. But the Government manufactured false propaganda to deceive the Sinhala people that it was killing large numbers of so called 'Tiger terrorists'. For the first time, after the Poonakari war, the Sinhala people found out that more Sinhala soldiers died than Tigers. Not only that, the Government also lost heavy weapons to the Tigers which naturally increases the fire power of the Tigers...The death at one and the same time of Sinhalese soldiers much in excess of the Tigers who died in the same battle clearly showed the Sinhalese people that the Government was lying. They did not know what had happened to their children. Whether they were alive or dead was not known to them...

It is this agitation that began in the minds of the ordinary Sinhala villager that in turn began to worry the Government and the Sinhala chauvinists.The Sinhala chauvinists - the so called 'national press' and 'intellects' - were worried that a realisation by the Sinhalese people that their children were laying down their lives in alien soil without the 'enemy' having come to attack them in their homes, could lead to the Sinhalese people refusing to participate in the war.. In an effort therefore to pacify Sinhala popular opinion they began to speak of peace and militarily weakening the Tigers at the same time. This self contradictory theory clearly shows that Sinhalese politicians, press (including the so called 'national' English press based in Colombo) and 'intellects' are really not keen on peace and a just settlement of the Tamil national question but are only interested in appeasing angered Sinhala public opinion. The Sinhala leaders are talking differently at different times with intrinsic contradictions. This shows that there is a long way to go before a just peace can be achieved. *(Hot Springs Weekly, Tamil Eelam,23 January 1993)*

# Professor Peter Schalk hits out

**Professor Peter Schalk of Uppasala University, Sweden, in a hard hitting letter to the Swedish Minister of Immigration Affairs,in March 1993, has protested against the attempt to deport Tamil asylum seekers which led to one of them,Vickramaraja Tissaiveerasingham setting fire to himself in the streets of Ensobing in Sweden.**

Professor Schalk said: "On March 2 1994, an Eelam Tamil tried to kill himself by setting fire to himself, having poured petrol on his clothes. He is still living but he is struggling for his life in the Academic Hospital in Uppasala. His full identity and background is known to me.You have received a number of letters regarding this case and you have kindly instructed your secretary to answer on your behalf. I find however that your secretary throughout has misinterpreted the spirit of these letters and I therefore kindly ask you to instruct him to answer in an adequate way.He interprets these letters falsely as a request to you to interfere in the legal process of decision making... Now this is a complete misunderstanding of the request that is put forward to you. The request is that you as a law maker change the immigration law in Parliament so as to make it more humane. You are responsible for the present Immigration law, and the Immigration Board and the Aliens Appeal Board only execute your will, or still better, our will that you on behalf of the Swedish people formulate in Parliament. Your protecting Secretary wants to hide you behind a curtain of non responsibility..."

## "Tamils exposed regularly to racist progroms in Sinhala dominated areas"

**"Coming to the present case of the Eelam Tamil who burnt himself you should see it in a series of events. In October 1993 you were responsible for giving orders to the Swedish Immigration Board and the Aliens Appeal Board to start a wave of deportations back to Sri Lanka. You gave millions of kroner to the police to chase refugees in hiding. These institutions executed your will promptly and perfectly but it led to a reaction by the Tamils. They started a hunger strike in the St.Peters Church in Rebro and six of them were determined to die as a result of fasting.... Many Eelam Tamils move about with thoughts of committing suicide. One of them now has made a serious attempt to kill himself. You must understand their situation correctly. They are victims who have been pushed into a situation of no alternative. Their lives have been made impossible by the Sri Lankan government.. the Tamils have been exposed regularly in the modern history of Sri Lanka to racist progroms in Sinhala dominated areas. Having been weakened in their social position they are economically exploited by sharks. Then they try to get a future for them and their children in Sweden. Here, you make laws that instruct our executive administration to deport them. Finally they are left with no alternative..."**

"We want a humane and multi cultural Sweden and we can afford it. We have elected you to accomplish that. The first thing you can do is to instruct your Secretary to answer letters in a proper way. What he writes in conscious misunderstanding. His letters read like 'goddap yaskait' (no rhyme or reason). The letters you get (from Tamils) are written by people who are deeply concerned about their individual and collective survival as a cultural group and they deserve a serious, sensitive concerned and individualised reply. What (your Secretary) writes, he has copied hundreds of times from his computer. I feel deeply embarrassed and ashamed on behalf of my Tamil friends by his answers. You are responsible for what he is writing. You are also finally responsible for the Immigration laws. You cannot escape that responsibility. I want to know how and when you intend to reform the present immigration law for the benefit of immigrants and refugees."

### President, Tamil Society of City University says:

## "Marry culture with political freedom"

The Tamil Society of City University, London presented its Annual festival of Tamil Arts and Culture at the Great Hall of the University on 9 February 1994. The Hall was crowded with hundreds of Tamils and non Tamils. The President of the Tamil Society, Moses A.S.Thasan addressing the audience, spoke of the need to marry culture with political freedom. He said that no people or nation can dream of developing, maintaining or preserving its cultural heritage unless it has control over its destiny. Professor Kopan Mahadeva spoke on the history of the Tamil Eelam struggle. The Chief Guest at the function was Professor R.N.–Franklin, the Vice Chancellor of the University. The classical Tamil music for the afternoon was presented by the students of the London Veena Group led by Mrs.A.Sris–kantharajah.

Australasian Federation of Tamil Associations tells Human Rights Sub Committee of Australian Parliament on Foreign Affairs, Defence and Trade:

# "Quiet diplomacy is not enough"

**Australasian Federation of Tamil Associations gave evidence before the Human Rights Sub Committee of the Australian Parliament on Foreign Affairs, Defence and Trade recently. The evidence was given at the inquiry into Australia's international efforts to promote and protect human rights.** Mr.Ana Pararajasingham, Secretary of the Australasian Federation of Tamil Associations and Mr.V–.Sureshan, Secretary of the Eelam Tamil Association, New South Wales appeared before the Committee.

Mr.Pararajasingham called upon the Sub Committee on Human Rights (of the Joint Standing Committee of the Australian Parliament on Foreign Affairs, Defence and Trade) to assist in bringing about a political settlement of the conflict in the island of Sri Lanka by firstly impressing upon the Sri Lankan government the international community's desire for a negotiated political solution.

He said that this could be done not only by direct government to government communiques but also by endorsing the views expressed at sessions of the United Nations Human Rights Commission.

Mr.Pararajasingham pointed out that at the 48th Sessions of the UN Human Rights Commission, the Commission had reiterated the need for a negotiated political solution 'based on principles of respect for human rights and fundamental freedoms leading to a durable peace in the north and east' of the island of Sri Lanka.

He added:**"In February 1993, at the 49th Sessions of the UN Commission on Human Rights, 15 Non Governmental Organisations had declared that the Tamil population of the north-east of the island of Sri Lanka are a 'people with the right to freely choose their political status.' We would like the Sub Committee to endorse these views and we believe that that would go long way in persuading the Sri Lanka government to enter the negotiating process. We also believe that publicising the fact that the Sri Lanka government has consistently refused to respond to international mediatory efforts would be another method... We would also seek the Sub Committee's assistance in calling for suspension of all economic assistance to the Sri Lanka government and the implementation of economic sanctions."**

Responding to a question from the Chairman of the Sub Committee on Human Rights as to how the Australasian Federation saw 'a peace process unfolding progressively and a solution being achieved that could endure', Mr.Para–rajasingham said:

"As recently as in March 1993, in a BBC interview, Mr.Pirab–akaran stated that he is prepared to consider even the concept of federalism provided it acknowledges the autonomy of the Tamil homeland and self determination. Given this stance, we believe as a first step, the Sri Lanka government must be persuaded into the negotiating process. **We do not think that quiet diplomacy is enough."**



**Democracy, Sri Lanka Style**

# A VIEW FROM THE ENEMY'S CAMP

## LIBERATION TIGERS DEFENCE COLLEGE

**"The LTTE women's wing publication 'Sunthathirap Paraivagal' carried an article recently on Lt.Col.Pama who had died after being critically wounded in the Pooneryn attack. She had joined the LTTE in 1989 and had participated in defensive operations around Palaly in 1990. Later she had fought in the battle for Elephant Pass and in the jungles of Weli Oya against the advancing columns of the (Sri Lanka) army. She was taken into the women's wing of the Sea Tigers when it was established in March 1992 and in due course became deputy commander. In the days before she was sent off to participate in preparations for the Pooneryn attack, Soosai, Special Commander of the Sea Tigers, had put her in charge of Kilali - a complex and difficult duty ... what makes Lt.Col.Pama's case noteworthy is that among her merits the write up on her recounts the fact that she had been to the LTTE's Defence College for training of officer corps. Soosai mentions.. that he had first seen Pama at this Defence College.**

The establishment of the LTTE's Defence College for training an officer corp is one of the most important developments in Eelam War Two... the large scale operations which Pirabakaran was aiming at in Eelam War Two required leaders who could coordinate manoeuvre and lead large bodies of troops into battle... that it was necessary to devise drills for large bodies of men (and women) to achieve tactical mobility in the field and to effectively large scale operations involving major advances in gathering and processing military information, planning, logistics and supply...

The scale of the operation and the degree of tactical advantage which was swiftly achieved at Pooneryn was among other things due to a trained officer corps... A significant contribution must have been made by Pirabakaran himself who was a voracious collector of military literature from his earliest days as the leader of the Liberation Tigers. The publications unit of the LTTE has engaged in a massive effort to translate into Tamil a wide range of writings on military affairs including articles on the Sri Lanka army..Thus far they have produced 18 volumes for compulsory reading among cadres.

Therefore the average recruit is already familiar with many central precepts of military theory and practise by the time he reaches officer level... How can they (Tigers) produce an effective officer corps? There are two reasons. One, they identify and subject a selected number of recruits to an education program or send them to school or in special cases for higher education. There are currently a large number of such boys and girls who attend school while living in Tiger camps under military regimen. Some senior cadres who are in charge of technically advanced units such as communications, maps and ordnance development are regularly pulled out from their respective positions and sent for higher education. Two, Tigers have produced their own or have translated a substantial body of military knowledge... the reading material is in Tamil. This has to be viewed in the light of the problems faced by armies of the sub continent that were essentially British forces led by an officer corp which even after the demise of the empire remained British in everything but its nationality....

The LTTE's potential, it should be evident now, is also derived from the fact that it has been able to evolve a system of military thought unhindered by the legacy bequeathed on the armies of South Asia by the West. *(Ex Plote ideologue, now turned regular columnist in the Sinhala owned Sri Lanka Sunday Island, 3 April 1994)*

## HUMAN RIGHTS? WHAT HUMAN RIGHTS!

"Following an NGO attempt at Geneva to push through an anti Sri Lanka resolution at the Human Rights Commission session, the Sri Lanka government has decided to closely monitor the activities of all NGOs operating in the island. Though a disclosure in due course was announced, the identity of the NGO involved was not revealed. **A Government spokesman said that 'foreign elements' backing the LTTE were also behind this NGO."** *- Sinhala owned Lanka Guardian, 1 April 1994*

## SPEAKER M.H.MOHAMED: 'I CAN TRUST LTTE'

Sri Lanka Speaker M.H.Mohamed interviewed by Sinhala journalist Daya Lankapura about his cancelled visit to Tamil Eelam: Q. Didn't you have any security problems? And were'nt you scared? A. No. **I can trust them.** I know Anton Balasingham. I (have) even met Pirabakaran... there was no reason for me to be scared. I hear that they had made all arrangements to give me a grand reception., had I been able to there." *- Sinhala owned Sri Lanka Sunday Island, 10 April 1994*

## CHINA TO RUSSIA FOR ARMS - AND COMMISSIONS?

"A delegation of senior defence officials (headed by Defence Ministry Secretary General Hamilton Wanasinghe) leave to Moscow today (Sunday 10 April) for talks to purchase upto 100 surplus Russian Army BMP tracked infantry fighting vehicles for the Sri Lankan Army's new mechanised infantry brigade, informed sources said. The machines are being offered by the Russian firm Voentech, a private company which deals in second hand ex Soviet military equipment... Currently the army's tracked armour consists of T-55 battle tanks and Chinese built T-85 infantry fighting vehicles...Last week the Navy signed a deal with China to buy a warship, two gun boats and a landing craft. A recent proposal to allow the Chinese armaments firm, NORINCO to set up a bonded warehouse of arms here to supply the needs of the security forces has run into controversy... The contract with NORINCO is for five years and it apparently allows for prices to be revised annually. NORINCO meets 60% of the military's needs." *- Sinhala owned Sri Lanka Sunday Island, 10 April 1994*

## COMMON SENSE AND GOEBBELS

"Common sense suggests that communicators want to be believed... Yet observation of the media in Sri Lanka flies against these common sense assumptions. **In Sri Lanka the major media organisations, particularly the government owned Lake House and the electronic media, seem to be singularly unconcerned about credibility. Even the privately (Sinhala) owned media do not seem to care that much about credibility..** the general pattern has been to publish/broadcast, credibility be damned. Is this a case of following Goebbel's rule of the big lie, or are there specifically Sri Lankan factors at work?" *- Sinhala writer Rohan Samarajiva in Sinhala owned Lanka Guardian, 1 April 1994*

## EXPLOSIVES FREELY AVAILABLE

"The bomb blasts at four (Colombo) Hotels on Friday night (8 April) and the Dehiwela Zoo on Saturday came as an explosive curtain raiser to the festive season... The authorities have blamed the LTTE for the incidents and while destabilising the tourist industry cannot be ruled out as the motivating factor, business rivalries and other personal factors too will have to be considered in any well rounded anaylsis of the blasts... With the free availability of weapons and explosives it is easy for anybody with ulterior motives to smuggle these in anywhere... " *- Editorial Comment, Sinhala owned Sri Lanka Sunday Island, 10 April 1994*

# 1000 ஆதரவற்ற குழந்தைகளை தத்தெடுக்கும் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் புதிய திட்டம்

**தமிழீழத்தில் தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தினாலும், பொருளாதாரத் தடையினாலும், பல்வேறு கோணங்களில் பாதிப்படைந்துள்ள மக்களுக்குக் கைகொடுக்கும் நோக்கமாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. இவற்றில் ஒரு திட்டமான 1000 குழந்தைகளைத் தத்தெடுக்கும் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கேட்போர் கூடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பற்றிய நோக்கம், செயற்பாடுகள் பற்றி ஆராய்கின்றது இக்கட்டுரை.**

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தொடர்கின்ற யுத்தம், தமிழ் மக்களை சமூக, பொருளாதார நிலைகளில் கடுமையாகப் பாதித்து வருகிறது. வீட்டுக்கு வீடு கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், பெற்றோரை இழந்த குழந்தைகள், குழந்தைகளை இழந்த பெற்றோர் என அவலங்கள் பரந்து காணப்படுகின்றன.

இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில், பாதிப்புக்குள்ளானவர்கள் மீது அடுத்தவர் அனுதாபப்பட முடியுமேயல்லாமல், அவர்களைப் பாதுகாக்க முடிவதில்லை. உதாரணமாக அண்ணன் இறக்க, அண்ணணின் குழந்தைகளைப் பராமரிக்க தம்பி விரும்பினாலும் அவரது பொருளாதார நிலை இடம் கொடுப்பதில்லை.

ஒரு குழந்தை பெற்றோரை இழந்த பின்னர் அவரது உறவினர்களுடன் வாழ வாய்ப்பிருக்குமாயின் அதனை ஊக்குவிப்பதே சிறந்ததென உளவியல் நிபுணர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். இந்த வகையில் கூடுமானவரை பெற்றோரை இழந்த குழந்தைகளை உறவினர்களுடனும் தந்தையை இழந்த குழந்தையை தாய்மாருடனும் வாழ வழிகாட்டுவதே முக்கிய நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் இக்குழந்தைகள் இயல்பு நிலையில் தனது மனத்தாங்கல்களை ஓரளவு குறைத்துக்கொள்ள வாய்ப்பிருக்கும்.

இப்பின்னணியை மையமாகக் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலிருந்து பாதிக்கப்பட்ட, உதவி தேவைப்படுகின்ற 1000 குழந்தைகளைத் தெரிவு செய்யும். குறிக்கப்பட்ட குழந்தைகள் வளர்ந்து சுயமாக உழைக்கும்வரை -ஆகக்கூடிய காலம் குழந்தை 21 வயதை அடையும் வரை இத்திட்டத்தின் கீழ் உதவிபெறும். உதவி வழங்கவேண்டிய தொகைகள் வயதெல்லையைப் பொறுத்து மாறுபடும். இது கீழே குறிப்பிட்டுள்ள வகையில் வகுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 01 - 03 வயதுக் குழந்தைகள் | ரூபா 500.00 |
| 04 - 05 வயது - பாலர் கல்வி | ரூபா 400.00 |
| 06 - 10 வயது - ஆண்டு 5 வரை | ரூபா 450.00 |
| 11 - 13 வயது - ஆண்டு 8 வரை | ரூபா 500.00 |
| 14 - 17 வயது - பல்கலைக்கழக புதுமுக வகுப்பு | ரூபா 800.00 |
| 18 - 21 வயது - பல்கலைக்கழகம் | ரூபா 1200.00 |

தெரிவு செய்யப்படும் குழந்தைகளின் தொகை 1000 ஆகும். மாவட்ட ரீதியாக நோக்கும்போது யாழ். மாவட்டத்தில் 300 குழந்தைகளும், வடக்கு, கிழக்குப் பிரதேசத்திலுள்ள ஏனைய ஏழு மாவட்டங்களிலும், ஒரு மாவட்டத்திற்கு 100 குழந்தைகள் வீதம் ஏழு மாவட்டங்களிலும் 700 குழந்தைகளும் தெரிவு செய்யப்படுவர்.

ஒவ்வொரு பிரிவுக் குழந்தைகளுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் தனித்து ஒரு குழந்தையின் முழுமையான செலவுகளுக்கும் போதுமானதாக இருக்காது; எனினும் குழந்தைகளை வைத்துப் பராமரிக்கும் உறவினருக்கு கைகொடுக்கும் நடவடிக்கையாக இத்திட்டம் அமையும்.

மேற்படி விபரத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சர்வதேசக் கிளைகள் அந்தந்த நாடுகளில் பகிரங்கப்படுத்தும். இதனடிப்படையில் மனிதநேயத்துடன் ஆதரவற்ற இக்குழந்தைகளுக்கு கைகொடுக்கத் தமது சில வசதிகளை தியாகம் செய்ய முன் வருகின்றவர்கள் தமது பெயர்களை அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகளுடன் பதிவு செய்துகொள்ளலாம். பதிவு செய்யும்போது குழந்தைகளுக்கான ஓராண்டுக்கான சராசரித் தொகையான - 150 அமெரிக்க டொலர்களை முற்பணமாகச் செலுத்த வேண்டும்.

மேற்படி விபரங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தாம் விரும்புகின்ற குழந்தையின் வயது தொடர்பான விபரங்களையும் பதிவுசெய்ய முடியும். இவ்விபரங்கள் கிடைத்தவுடன் ஒவ்வொருவருக்காகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள குழந்தைகளின் விபரம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளைகள் ஊடாக அனுப்பி வைக்கப்படும். சம்பந்தப்பட்டவர்கள் குழந்தைகளுடனும், பாதுகாவலர்களுடனும் நேரடியாகத் தொடர்புகள் வைக்கவும், தகவல்களைப் பெறவும் முடியும். மாதாந்தம் அக்குழந்தைக்குரிய தொகையை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திக் கிளையில் ஒப்படைக்க வேண்டும். இங்கு குழந்தைகளுக்குரிய தொகை எங்களால் வழங்கப்படும். குழந்தைகளின் உதவித்தொகை ஆண்டுக்கு ஆண்டு மாறுவது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

இதனடிப்படையில் அதிகமான குழந்தைகளைப் பொறுப்பேற்பதற்காக உழைத்த எமது சர்வதேசக் கிளைகளும், தனிநபர்களும் தனித்தனியாகக் கௌரவிக்கப்படுவார்கள்.

குழந்தைகள் தெரிவு செய்யப்படும்போது குழந்தையின் தகுதி - குழந்தை பெற்றோரை இழந்தவராக, தந்தையை இழந்தவராக, தாயை இழந்து தந்தையால் புறக்கணிக்கப்பட்டவராக அல்லது தாய், தந்தையர் இருந்தும் இருவராலும் புறக்கணிக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும். தெரிவு செய்வதில் அவ்வப்பகுதி கிராம சேவையாளர், பாடசாலை அதிபர்கள் போன்றவர்களின் அனுசரணையோடு தெரிவு செய்யப்படுவர். கல்வித் தகுதியினையும் தேவையையும் கருதி வயதெல்லை உயர்கல்வி முடிவுவரை நீடிக்கப்படலாம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குழந்தைகளைத் தெரிவு செய்வதுடன் நின்றுவிடாமல், இது சம்பந்தமான சகல விடயங்களுக்குமான முழுமையான பொறுப்பையும் நேரடியாகப் பொறுப்பேற்று, குழந்தைகளுக்காக வழங்கப்படும் உதவிகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் மாதாந்தம் ஆராய்ந்து திருப்திகரமாக உள்ளதா என உறுதிசெய்வதுடன், இதற்காகப் பொறுப்பேற்றவருக்கு வகை சொல்லும் பொறுப்பும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினுடையதாகும். பொறுப்பேற்க விரும்புகின்ற பெற்றோரின் விருப்புத் தேர்விற்கு முடிந்தவரை இசைவாக குழந்தையை வழங்கும் நியதியும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினுடையதாகும்.

குழந்தையின் பாதுகாவலர் குழந்தையை ஒழுங்காகப் பராமரித்து கல்வியை வழங்குகின்ற பொறுப்பைக்கொண்டு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் உடன்படிக்கை ஒன்று செய்வதுடன், குழந்தைக்கான கல்வியை, பராமரிப்பை முறையாக வழங்கவில்லை எனக் கருதுமிடத்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குழந்தையைப் பொறுப்பேற்று விடுதியில் சேர்த்து பராமரிக்க வழிசமைக்கும். கட்டுப்பாடும், கண்ணியமும் உடைய பாதுகாவலராகப் பராமரிப்பவர் இருப்பர். தமிழர் புனர்வாழ்வுக் கழகமோ அல்லது பொறுப்பேற்கின்ற பெற்றோரோ குழந்தையுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடவும், தகவல்களைப் பெறவும் உரிமையுடையவர்களென்பதை இவர்கள் அங்கீகரிக்க வேண்டும்.

இறுதியாகப் பொறுப்பேற்கும் பெற்றோரைப் பொறுத்தவரையில், இவர்கள் தங்கள் குடும்பத்தில் ஒரு பிள்ளையை எவ்வாறு கவனிக்கின்றார்களோ அது போன்று, இக்குழந்தை சுயமாக வாழத் தொடங்கும்வரை பராமரிக்கவேண்டிய கடப்பாடு உள்ளது. பாதுகாவலர் முறையாகப் பராமரிக்கவில்லையெனத் தமிழர் புனர்வாழ்வுக் கழகமோ அல்லது பொறுப்பேற்ற பெற்றோரோ கருதுமிடத்து, இக்குழந்தையை நேரடியாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பராமரிக்கத் தேவையான மேலதிக பணத்தை வழங்கவேண்டியது அவசியம். பொறுப்பேற்கும் குழந்தையைப் பராமரிப்பு நிலையத்தைவிட்டு வேறு இடத்திற்கோ அன்றி வெளிநாடு ஒன்றிற்கோ அழைப்பது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ■

- கதிர்

## பள்ளி எழுந்திடு.....

'பொடியன் உப்பிடித்தான்...' எண்டு நினைச்சினமோ, இல்லையெண்டால் 'உதெல்லாம் பகிடிக்குத்தானே' எண்டு நினைச்சினமோ தெரியேல்லை. கண்ணுக்கு முன்னாலை ஒருத்தி கேவலப்படுத்தப்படுறதைப் பார்த்துக்கொண்டு - எல்லாருமே பேசாமல் போகினம்.

என்னாலை மட்டும் இந்தப் புளியமரத்துக்குக் கீழை கையைக்கட்டிக்கொண்டு, இவன் துரத்துறதையும், அவள் துடிச்சுப் போறதையும் பாத்து ரசிச்சுக் கொண்டிருக்க முடியேல்லை.

என்ரை பேத்தியெண்டால் உதைப் பாத்துக்கொண்டு சும்மா இருப்பாளோ? உந்தச் சேத்துக்குள்ளை அவனைத் தூக்கிப் போட்டுக் குளிப்பாட்ட மாட்டாளோ?

நானும் எல்லாரையும் போலை பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தன் எண்டால், அந்தப் பேத்திக்கு நான் ஆச்சியாய் இருக்கிறதிலை அர்த்தமில்லையெல்லோ?

நான் எழும்புறன். விறுவிறெண்டு ஓடிப்போய் அவன்ரை சைக்கிளை இறுக்கிப் பிடிக்கிறன்.

அவன் திகைச்சுப் போறான். கூன் விழுந்து தடதடத்துப் போன என்னைப் பாத்து நடுங்கிப் போறான்.

எனக்கு ஆத்திரம் வருகுது. அவன் பயப்பிடுகிறதைக் கண்டு எனக்கு எரிச்சல் வருகுது. எதிர்த்துக் கேட்க மாட்டினம் எண்ட துணிவிலைதானே இவங்கள் இப்பவும் தெருவிலை சேட்டை விடுகிறாங்கள் எண்டு நான் கொதிச்சுப் போறன்.

இவனுக்கு நான் புத்தி சொல்ல வேணும். நடுத்தெருவிலை இப்படி ஒருத்தியோடை பகிடிவிடுறது அவளின்ரை மானத்தையே பறிக்கிற மாதிரி எண்டதைப் புரியவைக்க வேணும்.
நான் சைக்கிள் கைபிடியை விடாமல் இறுக்கிப் பிடிச்சுக்கொண்டு அவனை நிமிர்ந்து பார்க்கிறன்.

வாயிலை வந்தபடி அவனைத் திட்டுறன்.

"தெருவிலை இப்பிடிப் பகிடி விடுறதாலை ஒருத்தியின்ரை மனம் எந்தளவுக்குத் துன்பப்படுது எண்டது உனக்குத் தெரியுமோ? அவளின்ரை மன உணர்வுகளை எந்தளவுக்கு நீ சிதைக்கிறாய் எண்டது உனக்கு விளங்கேல்லையோ? இனிமேலும் இண்டைக்கு மாதிரிச் சேட்டை விட்டாய் எண்டால், என்ரை பேத்தியைக்கொண்டு உனக்கு செய்யக்கூடாத வேலையைச் செய்விப்பன்" எண்டு நான் அவனை வெருட்டுறன்.

அவன் ஒண்டும் பேசாமல் நிக்கிறான். இவனுக்கு இவ்வளவும் காணும் எண்டு நினைச்சுக்கொண்டு நான் சைக்கிள்ளை இருந்து கையை எடுக்கிறன். அவன் சைக்கிளை மிதிச்சுக்கொண்டு வேகமாய் போறான். திரும்பிப் பாக்காமல் வேகமாய் ஓடுறான். அவன் போறதையே பார்த்துக்கொண்டு நிண்ட நான் அவன் தெருவிலை மறைஞ்சாப் பிறகு அவளிட்டைத் திரும்புறன்.

அவள் - அந்த நீலச்சட்டைக்காரி -என்னைப் பாத்து நன்றியோடை சிரிக்கிறாள். நான் அவளைப் பார்க்கிறேன்.

இவளுக்கு என்ரை பேத்தியின்ரை வயதுதான் வரும். ஆனால் பேத்திக்கும் இவளுக்கும் கனக்க வித்தியாசம். என்ரை பேத்தியெண்டால் இப்படி ஒருத்தன் பின்னாலை துரத்திக்கொண்டு வரேக்கை சும்மா பாத்துக்கொண்டு வருவாளோ? உந்த ஆமிக்காரனையே வெருட்டிக்கொண்டு நிக்கிறவள் இவனைச் சும்மா விடுவாளோ?

எனக்கு அவளைப் பாக்க ஆத்திரம் வருகுது. இவள் இப்படி நசிஞ்சுகொண்டு, பயந்து, பேசாமல் இருக்கிறதாலைதான் நாயை மாதிரி கேவலப்படுத்துறாங்கள் எண்டு நான் நினைக்கிறன். நடுத்தெருவிலை தன்னை ஒருத்தன் மானங்கெடுக்கிறதை இவள் புரிஞ்சுகொள்ளாமல், இதெல்லாம் பகிடி எண்டு நினைக்கிறாளோ? அவங்கள் காலங்காலமாய் இவளை, இவளின்ரை உணர்ச்சிகளை அடக்குறதை இவள் அறியாமல் இருக்கிறாளே!

நான் அவளை உற்றுப் பாக்கிறேன்.

"உனக்கு வாய் இல்லையோ? நாக்கைப் பிடுங்கிற மாதிரி நாலு வார்த்தை எதிர்த்துப் பேசத் தெரியாதோ? நீயெல்லாம் மானமுள்ள பொம்பிளைதானே" எண்டு நான் அவளைப் பாத்துப் பேசுறன்.

"உன்னை மாதிரி என்ரை பேத்தி இருந்தால் இந்த தெருவிலை நடக்கிறதே வேறையாயிருக்கும்" எண்டு நான் பெருமையோடை சொல்லுறன்.

அவள் தலையைக் குனிஞ்சுகொண்டு பேசாமல் நிக்கிறாள்.

"இனிமேல் இப்பிடி ஒண்டும் தெரியாதவளாய், வாய் பேசாதவளாய் இருக்காதை. தைரியமாய் நிமிர்ந்து நில். அதுக்குப் பிறகு உன்னை ஒருத்தரும் அசைக்கவே மாட்டினம்..."

நான் உணர்ச்சிவசப்பட்டு தெரு எண்டதையும் மறந்து பெரிய குரலில் கத்துறன்.


அவள் நிமிர்ந்து என்னைப் பார்க்கிறாள். என்ரை பேத்தியின்ரை கண்ணிலை தெரியிற உறுதியும், தெளிவும் இப்ப இவளின்ரை கண்ணிலை தெரியுது. அவள் சைக்கிளை எடுக்கிறாள். ஒண்டும் பேசாமல் நிமிர்ந்துகொண்டு நிதானமாய் சைக்கிளோடிப் போறாள்.

'இவள் இனிமேல் கோழை இல்லை' எண்டது புரிய நான் பூரிச்சுப்போய் நிக்கிறன். ஓடிப்போற வாகனங்களுக்கிடையிலை அவள் அடிக்கடி மறைய நான் எட்டி எட்டிப் பார்க்கிறன். இந்த பெரிய வெளியைக் கடந்து அவள் மறையுறாள். ஒரு புள்ளியைப் போல அவளின்ரை உருவம் என்ரை கண்ணைவிட்டு மறையுது.

மனம் நிம்மதியாய் மூச்சுவிட நான் திரும்பி நடக்கிறன்.

"இவ்வளவு காலமாக சமைச்சதையும், பிள்ளையளைப் பெத்ததையும் தவிர வேறை என்னத்தைச் சாதிச்சாய்..." எண்டு

தொடர்ச்சி 10ம் பக்கம் ....




# ருவாண்டாவில் இனப்படுகொலை தொடருமா?

மத்திய கோட்டுக்கருகே அமைந்துள்ள ருவாண்டா நாடானது பச்சைப்பசும் புற்றரைகளையும், தொடரலைப் பாங்கான மலைத்தொடர்களையும், நீர் வீழ்ச்சிகள், வாவிகளையும் உள்ளடக்கிய சிறியதொரு நாடாகும்.


சூரிய உச்சம் வருடத்திற்கு இரு தடவைகள் நிகழ்ந்தாலும் கடல் மட்டத்தின் மேல் 5000 இல் இருந்து 15000 அடிகள் வரை, இந்நாட்டின் பெரும்பாலான பகுதிகள் அமைந்திருப்பதால் பொதுவாக மிதமான காலநிலையைக் கொண்டதாகவே விளங்குகின்றது.

உயர் நிலப் பகுதிகள், பருவக் காற்று மழை வருடத்துக்கு இருதடவைகள் இடம்பெறுவது போன்றனவற்றால் ஆபிரிக்காவில் இருபெரும் நதிகளாக விளங்கும் நைல் மற்றும் கொங்கோ நதிகளின் வடிகால் அமைப்புப் பகுதிகள் ருவாண்டாவிலேயே அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் அண்மைக்காலமாக ருவாண்டாவில் இடம்பெற்றுவரும் இனப்படுகொலைகளால் சிந்தப்பட்ட குருதி வெள்ளம், இவ்நீண்ட நதிகளையும், ஆழ் வாவிகளையும் செந்நிறமாக்கியுள்ளது.

குன்றுகளைத் தழுவி வந்த தென்றல் காற்றுக்குப் பதிலாக தற்போது பிணவாடையே வீசுகிறது. ஆறுதலாய், அழகிய காட்சிகளை ரசிப்பதற்குப் பதிலாக உள்ளூர் மக்களும் வெளிநாட்டவரும் அவசர அவசரமாக நாட்டைவிட்டு வெளியறேுகின்றனர்.

ருவாண்டாவின் தலைநகரான கிகாலியின் சனத்தொகையினரான 300,000 பேரில் அரைவாசிப்பேர் அகதிகளாக வெளியேறியுள்ளனர். உதவி வழங்கும் ஸ்தாபனங்களின் உத்தியோகப்பற்றற்ற கணிப்பின்படி 2 மில்லியனுக்கு மேற்பட்டோர் வீடற்றவர்களாக்கப்பட்டுள்ளார்கள்.




இவை எல்லாவற்றிற்கும் மேலாக 'ஆபிரிக்கா வாட்ச்' எனப்படும் மனத உரிமைகள் அமைப்பானது ஐ. நாடுகள் சபைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இரு வாரங்களில் இடம்பெற்ற இனப்படுகொலைகளின் காரணமாக ஒரு இலட்சம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் எனும் அதிர்ச்சித் தகவலை அறியத் தந்துள்ளது.

ருவாண்டாவின் பெரும்பான்மையினமான கீட்டுவினருக்கும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த டூட்சியினருக்குமிடையே நீண்ட காலமாகக் கனன்று கொண்டிருக்கும் இனப்பிரச்சினை சம்பந்தமாக அயல்நாடான தான்சானியாவில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட ருவாண்டாவின் சனாதிபதியான 57 வயதுடைய ஜீவனல் கபயாரிமானாவும், புருண்டியின் சனாதிபதியான 38 வயதுடைய சைப்றியன் நயாமிராவும் பயணம்செய்த ருவாண்டா சனாதிபதியின் ஜெட் விமானம் கிகாலி விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றபோது ராக்கட் தாக்குதலுக்குள்ளானதில் விமானத்தில் பயணம்செய்த அனைவரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களாக ருவாண்டாவில் உள்நாட்டுப் போர் நடைபெற்று வந்திருந்தாலும், ஏப்பிரல் 6 ஆம் திகதி சனாதிபதிகள் கொல்லப்பட்ட சம்பவமானது, அந்நாட்டில் நரகத்தின் வாசலைத் திறந்துவிட்டது போல அமைந்தது.

குறிப்பாக சிறுபான்மையினத்தைச் சேர்ந்த டூட்சியினரே தாக்குதலுக்குள்ளான போதும் மத குருமார், உதவிபுரியும் ஸ்தாபனங்களைச் சேர்ந்தோர், மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்தோர், பெண்கள், பாலகர் எனப் பல தரப்பட்டோரும் பலிக்கடாக்களாக்கப்பட்டனர்.

அகதி முகாம்கள், பாடசாலைகள், ஆலயங்கள், வைத்தியசாலைகள், விளையாட்டு மைதானங்கள் எனப் பல இடங்களில் தஞ்சம் அடைந்தோர் மூர்க்கத்தனமாக வெட்டப்பட்டும், கொத்தப்பட்டும், துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகியும் மரணமானார்கள். வெட்டப்பட்ட தலைகள், அவயவங்கள் வீதியோரங்களில் சிதறிக் காணப்பட்டன. செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சடலங்களை அகற்ற, அகற்ற மேலும் மேலும் புதிய சடலங்கள் தோன்றின.

மது மயக்கத்தில் இருந்த கீட்டு இன இராணுவ வீரர்கள் குடிமக்களைக் கொல்ல, குடிமக்களும் தமக்கிடையே இருந்த இன ரீதியான வெறுப்பை ஒருவர் மேல் ஒருவர் கொட்டித்தீர்த்தனர். ஒரு சம்பவத்தில் இராணுவத்தினர் குடிமக்களது கைகளை அவர்களது முதுகின் பின்னால் கட்டிவிட்டு கத்தியால் வெட்டியும், 'இலக்குப் பயிற்சி' பெறுவது போல் துப்பாக்கியால் அவர்களைச் சுட்டும் கொன்றனர்.

பெண்கள் கொல்லப்படுவதற்கு முன்பாக கற்பழிக்கப்பட்டனர். சில இடங்களில் பிள்ளைகளை முதுகில் கட்டிய பெண்கள், இதேபோல் பிள்ளைகளை முதுகில் சுமந்த ஏனைய பெண்களைக் கொலை செய்த நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன.

இளம் வயதினர் கைகளில் கத்தி, வாள், கோடரி, ஈட்டி, பொல்லு, கிரனேட், துவக்குகள் சகிதம் நகரில் வலம் வந்த போது, இராணுவத்தினர் அவர்களைக் கட்டுப்படுத்த முனையவில்லை. 'வேலியே பயிரை மேயும்போது' நீதி நியாயம் சட்டம் ஒழுங்குக்கு இடமேது.

ருவாண்டாவில் நடைபெற்ற சம்பவங்களைக் கேட்கும்போது பலருக்கு கொழும்பின் யூலைக் கலவரங்கள் ஞாபகத்துக்கு வரலாம். சிங்களக் காடையர்களினால் நிகழ்த்தப்பட்ட பல அனர்த்தங்களை விபரித்து 'மனிதனில் மிருகம்' என்று 'ரைம்' சஞ்சிகை கட்டுரை வரைந்திருந்ததும் இங்கு ஞாபகத்திற்கு வருகின்றது.

17 வருடங்களாக ருவாண்டாவில் மிசனரி வேலை செய்து, மயிரிழையில் உயிர் தப்பி நாடு திரும்பிய குவிபெக் மாகாணத்தைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர், நினைத்துப் பார்க்க முடியாத மிருகத்தனமான நிகழ்வுகள் ருவாண்டாவில் நடைபெற்றுள்ளன என விபரித்துள்ளார்.

மேலும் "ருவாண்டாவில் இரத்தம் சிந்தப்பட்டதைப் போன்ற மனித அவலங்கள் மிக அருமையாகவே இடம்பெற்றுள்ளன" என செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச ஆணைக்குழு அறிவித்துள்ளதில் இருந்து அங்கு இடம்பெற்ற அனர்த்தங்களின் அகோரத்தை அறிந்துகொள்ளலாம்.

சனாதிபதிகளைச் சுமந்து வந்த ஆகாய விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது என ருவாண்டாவின் அரசாங்கம் அறிவித்தாலும், விமானம் வீழ்ந்த பகுதிகளுக்கு செல்ல தமக்கு அனுமதி மறுக்கப்பட்டமையினால் இதனை உறுதிப்படுத்த முடியாதுள்ளது என அந்நாட்டில் நிலைகொண்டுள்ள ஐ. நா. அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அரச தரப்புச் செய்திகள் டூட்சி இனத்தவரின் 'ருவாண்டா தேசப்பற்று முன்னணியே' இவ் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாகத் தெரிவிக்கின்றன. ருவாண்டாவின் ஏழரை மில்லியன் மக்களில் 85 வீதமானோர் கீட்டு இனத்தவராகவும் 14 வீதமானோர் டூட்சி இனத்தவராகவும் விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மூன்று வருடகாலப் போரின் பின் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் கீட்டு சனாதிபதியான கமியாறிமானாவுக் கும், டூட்சிய முன்னணிக்குமிடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

புதிய தேர்தல் நடாத்தப்படும் வரை ஒரு இடைக்கால அரசாங்கம் நிறுவப்படும் என உறுதிமொழி கொடுக்கப்பட்டிருந்தாலும் சனாதிபதி இதனை உதாசீனம் செய்கிறார் என டூட்சியினர் குற்றம் சுமத்தியிருந்தனர்.

விவசாயிகளான கீட்டு இனத்தவர் சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்பாக ருவாண்டாவில் குடியேறியிருந்தனர். இடையர்களான டூட்சி இனத்தவர் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பாக எத்தியோப்பியாவிலிருந்து இடம் பெயர்ந்திருந்தனர்.

நாளடைவில் கால்நடை வைத்திருப்பவர்களே செல்வந்தர்கள் எனும் நிலை ஏற்பட, கால்நடைக்குப் பதிலாக காணிகள் பரிமாற்றம் செய்யப்பட்டு இதன் மூலம் வளர்ந்த நிலப்பிரபுத்துவ முறையின் கீழ் டூட்சி இனத்தவர் செல்வாக்குடையவராக விளங்கினர்.

முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களின் போதும் பிற்பட்ட காலங்களிலும் ருவாண்டாவும் புருண்டியும் பெல்ஜியத்தின் நிர்வாகத்துக்குட்பட்ட பிரதேசமாக விளங்கின. எனினும் நாளடைவில் கீட்டு இனத்தவர் கிளர்ந்தெழுந்து போராடியதில் ருவாண்டா 1962 இல் சுதந்திர நாடானது. இக்காலகட்டத்தில் இலட்சக்கணக்கான டூட்சி இனத்தவர் அயல் நாடுகளுக்கு அபலைகளாக ஓடியிருந்தனர்.

விமான விபத்தில் சொல்லப்பட்ட கபயறிமானா 1973 இல் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பில் பதவிக்கு வந்திருந்தார். கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தின்படி டூட்சி இனத்தவருக்கு அமைச்சர் பதவிகள் கொடுக்கப்பட்டதுடன், இரு தசாப்தங்களாக உகண்டாவில் மறைந்து வாழ்ந்த டூட்சி இனத்தவர்கள் திரும்பிவந்து குடியேற நிலங்கள் அளிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இச்சலுகைகள் கீட்டு இனத்தவர் பலரிடையே குறிப்பாக சனாதிபதியின் காவற்படையினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. இக் 'காவற்படையினரால்' ஏவப்பட்ட ராக்கெட்டே சனாதிபதியின் விமானத்தை வீழ்த்தியுள்ளது என பெல்ஜிய இராணுவக் குழுவொன்று அறிக்கைவிட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பலம்வாய்ந்த 600 பேரைக் கொண்ட இக்காவற்படையே எதிர்ப்பட்ட எல்லா டூட்சி இனத்தவரையும் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது. ருவாண்டாவின் பிரதம மந்திரியும் டூட்சி இனத்தவருமான சுகதே எனும் பெண்மணியின் வீட்டைச் சூழ்ந்துகொண்ட இக்காவற்படை அங்கு நின்ற ஐ. நா. படையினரை நிராயுதபாணிகளாக்கி அவரைச் சுட்டுக் கொன்றதுடன் பாதுகாப்புக்கு நின்ற 10 பெல்ஜியத் துருப்பினரையும் தமது முகாமுக்குக் கொண்டு சென்று சுட்டுக்கொன்றது. டூட்சி இனத்தைச் சேர்ந்த மேலும் மூன்று அமைச்சர்களும் பிற்பாடு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை மேற்பார்வை செய்யவென 2400 ஐ. நா. அமைதிகாக்கும் படையினர் அங்கு நிலைநிறுத்தப்பட்டிருந்த போதும் சோமாலியாவில் கற்றுக்கொண்ட படிப்பினையின் பின் தமது இராணுவ பலத்தை காட்டிக்கொள்ளாமல் இவர்கள் வெறுமனே வெளிநாட்டவரை வெளியேற்றும் முயற்சியிலேயே கவனம் செலுத்தினர். மேலும் ஐ. நா. படையினர் தொகையை 270 ஆகக் குறைப்பதற்கான தீர்மானத்தையும் பாதுகாப்புச் சபை நிறைவேற்றியுள்ளது. (ஆயினும் கடந்த வாரம் ஐ. நா. படையினர் தொகையை 5500 ஆக்க முடிவெடுத்துள்ளது.)

இதேவேளை இராணுவத்துக்குச் சமனான போராளிகள் தமது பக்கத்தில் இருக்கிறார்கள் எனக் கூறிக்கொள்ளும் டூட்சி முன்னணி தமது போராளிகள் கட்டுக்கோப்பானவர்கள் என்றும், நன்கு பயிற்றப்பட்டவர்கள் என்றும் சனாதிபதியின் காவற்படையினர் கலைக்கப்படும் வரை, அல்லது சரணடையும் வரை தாம் ஓயப்போவதில்லை என்றும் கூறியுள்ளனர்.

வெளிநாட்டவரும், ஐ. நா. படையினரும் வெளியேறியுள்ள இந்நிலையில் கீட்டு, டூட்சி இனத்தவரிடையே இடம்பெறும் படுகொலைகள் தொடர்வதற்கான சூழ்நிலையே நிலவுகின்றது எனப் பல அவதானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். ■

## பள்ளி எழுந்திடு....

பேத்தி அடிக்கடி என்னைக் கேக்கிறது இப்பவும் காதிலை ஒலிக்குது.

இவ்வளவு காலத்துக்கு பிறகு - இத்தனை வயதுக்கு பிறகு இண்டைக்கு நானும் ஒருத்திக்கு விழிப்புக் கொடுத்திருக்கிறன். ஒருத்திக்கு உண்மையைப் புகுத்தியிருக்கிறன் எண்டதை நினைக்கேக்கை என்னிலையே எனக்குப் பெருமையாய்க் கிடக்கு.

"தூங்கிக்கிடக்கிற எங்கடை பெண் இனத்தை நாங்கள் தட்டி எழுப்பவேணும். அடக்கு முறைக்கெதிராய் போராட வேணும்..." எண்டு மேடையிலை முழங்கிற என்ரை பேத்தியை நான் கெதியிலை போய்ப் பார்க்கவேணும். நீ மட்டுமில்லை, இப்ப நானும் தான் ஒருத்திக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியிருக்கிறன் என்பதை அவளுக்குப் பெருமையோடை சொல்லவேணும். ■

# புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் தனிநாட்டுக்கான பூர்த்திகளை கொண்டுள்ளன

## யாழ் சென்றுவந்த டென்மார்க் பத்திரிகையாளர் தகவல்

"புலிகள் இலங்கையின் இரண்டாவது பெரிய நகரத்தை (யாழ்ப்பாணத்தை) தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். அத்துடன் இதுவே தமிழீழத்தின் பெரும் பகுதியாகும். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் அனைத்தும் ஒரு தனிநாட்டுக்கான பூர்த்திகளைக் கொண்டுள்ளன. ஒளிவீசும் தலைவராக பிரபாகரன் தமிழ் மக்களின் அன்பைப் பெற்றுள்ளார்".

இவ்வாறு சமீபத்தில் யாழ். குடாநாட்டுக்கு சென்றுதிரும்பிய மார்ட்டின் அட்லர் (Martin Adler) எனும் டென்மார்க் பத்திரிகையாளர் பொலிரிகன் (Politiken) எனும் டென்மார்க் தினசரியில் 23-04-1994 இல் எழுதியுள்ளார். மக்களுக்கு எதிரான யுத்தத்தை சிறீலங்கா நடத்துவதாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுத எதிர்ப்பில் இறங்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது என அருட்திரு. இம்மானுவேல் (கத்தோலிக்க குருமட தலைவர்) தம்மிடம் விளக்கியதாகவும் இப்பத்திரிகையாளர் எழுதியுள்ளார். இவர் தமிழீழம் 'தியாகிகளின் நாடு' என்ற தலைப்பில் சூசான் ஒகோ என்பவருடன் சேர்ந்து எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தின் சில பகுதிகள் பின்வருமாறு:-

### தமிழீழம் தியாகிகளின் நாடு

பத்து வருடங்களாக இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் இடையில் நடக்கும் கொடூர யுத்தம் நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களைப் பலியாக்கியுள்ளது. இதில் பலர் பொதுமக்களே. கொழும்பில் உல்லாசப் பயணிகள் தங்கும் விடுதிகளின் மீதான குண்டுத் தாக்குதல்கள் இலங்கைக்கு வரஎண்ணும் உல்லாசப் பயணிகளை பயப்படுத்தியுள்ளது.

தெல்லிப்பளையில் கிட்டத்தட்ட ஒன்றும் இல்லை. பலாலி இதற்கு வடக்கே உள்ளது. ஒரு உடைந்த வீட்டில் இருந்து புலிகளின் துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது. இதன் பிறகு கிறனைட் ஒன்று அங்கிருந்து நூறு மீற்றர் தொலைவிலுள்ள தோட்டம் ஒன்றில் விழுந்து சிதறுகிறது. நாம் நின்ற நிலம் உதறுகிறது. அங்கிருந்து முன்னூறு மீற்றர் தொலைவில் கண்ணி வெடி வயல்கள் மின்சார வேலிகள் இருக்கின்றன. இங்கே இராணுவம் கிடங்குகளில் பதுங்கியுள்ளது. பலாலி வடக்கிலே பெரிய இராணுவ முகாம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில் உள்ளது. இது தமிழீழத்தில் ஒரு பெரிய காயம் என்கிறார் யாழ்ப்பாணப் பகுதி புலிகளின் பொறுப்பாளரான இருபத்தெட்டு வயதுடைய செல்வராசா. இவரே எங்களை பலாலி முகாம் பகுதிக்கு அழைத்து வந்தவர்.

### முறிக்கமுடியாத நம்பிக்கை

பலாலியில் அண்ணளவாக ஐந்திலிருந்து பத்தாயிரம் இராணுவத்தினர் உள்ளனர். இந்த முகாம், வடக்கே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த முகாம் ஆகும். இராணுவம், கடற்படை மற்றும் ஆகாயப்படை முகாம்களும் இங்கே அமைந்துள்ளன. இங்கிருந்தே இராணுவம் யாழ்ப்பாணம் மீதான தனது ஆகாயத் தாக்குதலை நடத்தி வருகின்றது.

புலிகளால் தொண்ணூறாயிரம் இராணுவத்தையும், அவர்களது பாரிய ஆயுதங்களையும் தாக்குப்பிடிக்க முடியாது. ஆனால், புலிகளினது தாய்நாட்டின் மீதான நம்பிக்கையும் உறுதியும் அவர்களுக்கு வெற்றியை அளிக்கிறது. யாழ்ப்பாணம் இலங்கையில் பெரிய நகரமாக இருந்தது. ஏழு வருடங்களாக நடத்தப்பட்ட செல் மற்றும் ஆகாயத் தாக்குதல்களால் இன்று இங்கு ஒரு வீடுகூட தாக்குதல்களில் இருந்து தப்பவில்லை. குண்டுகளைப் போட்டு எம்மைப் பல நூறு வருடங்களுக்கு அரசாங்கம் பின்தள்ளியுள்ளது என்கிறார் அருட்திரு நேசநாயகம். போனவருடம் இவருடைய சென் ஜேம்ஸ் தேவாலயம் இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது. இதில் பதின்மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்தக் கொடுமை இவர் தனது இருபத்தைந்து வருடகால சேவையைக் கொண்டாடிக் கொண்டிருந்தபோதே நடந்தது.

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரத் தடையினால் (1-990 இல் அமுல்படுத்தப்பட்டது.) மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவுகள் அதிகளவில் கூடியுள்ளன. 1992 இல் இராணுவம் ஆனையிறவுப் பாதையை தடைசெய்து யாழ். குடாநாட்டுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் இடையிலான தொடர்பைத் துண்டித்தது. தடைசெய்யப்பட்ட பொருட்களில் எரிபொருட்கள், மெழுகுவர்த்தி, பற்றறிகள், நெருப்புப் பெட்டி, வீடுகட்டத் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் மருத்துவ தளபாடங்கள் என்பன அடங்கும். பெற்றோலுக்குப் பதிலாக இங்கு மண்ணெண்ணெய் பாவிக்கப்படுகின்றது. கொழும்பில் மண்ணெண்ணெய் பதின்மூன்று ரூபாய்; ஆனால் இங்கு நூற்றிப் பதின்மூன்று ரூபாய். கடத்திக் கொண்டுவரப்பட்ட பெற்றோல் எண்ணூறு ரூபாய். இரண்டு இலட்சத்தி ஐம்பதினாயிரம் மக்கள் யாழ். குடாநாட்டில் அகதிகளாக உள்ளனர். தமது தாய் நாட்டிலேயே இவர்கள் அகதி. இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களிலும் மற்றும் கரையோரப் பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்தவர்கள். நாளாந்தம் சிங்கள இராணுவத்தின் கடற்படை மேற்கொள்ளும் தாக்குதலாலேயே கடற்கரையோரப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். நூற்றி ஐம்பது அகதிக் குடும்பங்கள் தமது வாழ்க்கையை யாழ். புகையிரத நிலையத்தில் தரையிலேயே நடத்தி வருகின்றனர். புஸ்பம் 32 வயது; இவர் இங்கு தனது கணவன் மற்றும் நாலு பிள்ளைகளுடன் மூன்று வருடங்களாக தங்கியுள்ளார். இராணுவம் ஊர்காவற்துறையை பிடித்த பின்னரே இவர் அங்கிருந்து வெளியேறினார். உலகம் தம்மை மறந்துவிட்டதா என அவர் கவலையாகக் கேட்கின்றார்.

### போசாக்கின்மை (சத்துக்குறைபாடு)

அசோக்குமார் (ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர்ஸ்தானிகராலய யாழ். பகுதிக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்) கூறுவதன்படி அநேக மக்கள் சத்துக் குறைபாடுகளினால் வருந்துகின்றனர். யாழ்ப்பாணத்தில் பிறக்கும் குழந்தைகள் இருபத்தைந்திலிருந்து முப்பது வீதமானோர் நிறை குறைந்தே பிறக்கின்றனர். கொழும்புடன் ஒப்பிடும்போது, அதிகளவில் தொற்று வியாதிகள் பரவுவதாகவும், மலேரியா போன்ற தொற்று நோய்களால் குழந்தைகள் பலர் இறப்பதாகவும் இவர் கூறுகின்றார். ஆனால் இவற்றைத் தடுப்பதற்கான மருந்துவகைகளையும் அரசாங்கம் தடைசெய்துள்ளதாகவும் கூறுகின்றார்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலையே சேவையில் உள்ளது. இது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு எல்லைக்குள் இருந்தும் பல தடவை இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஒரு மில்லியன் மக்களால் பாவிக்கப்படும் இந்த வைத்தியசாலையில், ஆயிரம் நோயாளிகளுக்கான கட்டில்கள்கூட இல்லை. அநேகமான நோயாளிகள் நிலத்திலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். போக்குவரத்துப் பிரச்சினையால் பலர் இங்கு வரமுடியாத நிலையில் உள்ளனர்.

### சாவின் ஏரி

இதே கடலேரியின் மூலமே யாழ். குடாநாட்டில் உள்ள ஒன்பது இலட்சம் மக்கள் வெளி உலகத்துடனான தொடர்பை வைத்துள்ளனர். இந்த கடலேரிப் பாதையை அரசாங்கம் 1992 இல் தடைசெய்தது. அதில் இருந்து அரசாங்கம் இந்தக் கடலேரியில் காணப்படும் எல்லாவற்றையும் புலிகள் எனக்கூறித் தாக்கி வருகின்றது. இந்தத் தடையிருந்தும் 100 இலிருந்து 1000 இற்கு மேற்பட்ட மக்கள் தமது சைக்கிள்கள் மற்றும் பல பொருட்களுடன் வள்ளத்துக்காக கிளாலிக் கடற்கரையில் காத்து நிற்கின்றனர்.

இந்தப் பாதை பெரிதும் ஆபத்தானது. 1992 இல் இருந்து நூறுக்கு மேற்பட்ட மக்கள் இந்தக் கடலேரியில் அரசாங்கத்தின் ஆகாயப்படை மற்றும் கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்துள்ளனர். இந்தக் கடலேரிப் பாதையை யுத்தமில்லாத இடமாகச் செய்வதற்காக 1993 இல் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியது. ஆனால் அரசாங்கம் இராணுவ அழுத்தத்தின் காரணமாக மறுத்துவிட்டது. இராணுவம் இதனைப் புலிகளும் பயன்படுத்தக்கூடும் எனக்கூறியே மறுத்தனர். இந்த மறுப்பின் காரணமாகவே புலிகள் இந்தக் கடலேரிக்குத் தெற்கேயுள்ள பூநகரித் தளத்தைத் தாக்கி இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

யுத்த முடிவுக்கான எந்த அறிகுறிகளும் அங்கு இல்லை. இதற்கு மாறாக ஜனாதிபதி விஜயதுங்கா பேச்சுவார்த்தைக்கு இடம்கொடுக்காமல் புலிகளை முற்றாகத் தாக்கி அழிக்கப் போவதாகக் கூறுகின்றார். இவரே பிரேமதாசா கொலை செய்யப்பட்டதற்குப்பின் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நடத்திவருகின்றார். மற்றும் இவர் இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு எனக் கூறிவருகின்றார்.

### வெள்ளைப் புலிகள்

"நாங்கள் பெரிய சிறை ஒன்றிலேயே வாழ்கின்றோம். தமிழ் இனம் அரவமின்றித் திருகிக் கொல்லப்படுகின்றது என்கிறார்" அருட்திரு இமானுவேல். இவர் யாழ்ப்பாணம் கத்தோலிக்க குருமடத்தின் தலைமை ஆசிரியர். இவரை நான் மதகுருமார் வாழும் கட்டிடம் ஒன்றில் சந்தித்தேன். இந்தக் கட்டிடம்கூட இராணுவத்தின் குண்டுமழைக்கு உட்பட்ட எண்ணமுடியாத கட்டிடங்களில் ஒன்று.

இந்த மதகுரு, தான் போராளிகளின் கெரில்லா யுத்தத்தை நூறுவீதம் ஆதரிப்பதாகக் கூறு

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

# "இந்தியா ஏற்படுத்தும் குழப்பங்களைத் தடுத்து சர்வதேச மத்தியஸ்த தீர்வுக்கு உதவுங்கள்"

## உலகத் தமிழர்கள் அமெரிக்க ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

இலங்கைத் தீவின் தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டுக்கு தீர்வு காண்பதில் சர்வதேச மத்தியஸ்த்தம் ஏற்படுவதற்கு இந்தியா ஏற்படுத்தி வரும் குழப்பங்களைத் தவிர்த்து,சர்வதேச மத்தியஸ்த்தத்துக்கு உதவும்படி உலகத்தமிழர்கள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டனுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டனுடன் உத்தியோகபூர்வ பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்த வைகாசி 19ம் திகதி வெள்ளைமாளிகைக்கு எதிரே ஆர்ப்பாட்டம் செய்த தமிழர்கள், இவ்வேண்டுகோளை அமெரிக்க ஜனாதிபதியிடம் கொடுத்துள்ளனர். உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமெரிக்கக் கிளையும், கனடாவில் உள்ள தமிழர் சங்கங்களின் சம்மேளனமும் கூட்டாக ஒழுங்கு செய்த இவ் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சியின் போது, "இந்தியாவே! அமைதிக்கு பாதை விடு" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் பின்வருமாறு:-

தமிழ் அகதிகளை சிறீலங்காவுக்கு பலவந்தமாக திருப்பியனுப்புவது என்ற கொடுமையான கோட்பாட்டின் மூலம் இந்தியா ஜெனிவா அகதிகள் மரபு சாசனத்தை தெட்டத் தெளிவாக மீறுகிறது. அரசுக்களின் உரிமைகளும் கடமைகளும் என்ற சாசனத்தை மீறக்கூடிய வகையில் இலங்கைத் தீவின் தேசிய இன முரண்பாட்டிற்கு சர்வதேச மத்தியஸ்தம் ஏற்படாதவாறு தடுக்க இந்தியா முயற்சித்து வருகிறது. தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான உரிமையில் இந்தியா கெட்ட நோக்குடன் தலையிடுவதும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமது பிரதேசத்துள் தடைசெய்வதும், தமிழர்களுடைய அபிலாசைகளுக்கு தவறான விளக்கங்களைக் கொடுப்பதும், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளை மீறுகின்ற கெட்ட செயலாகும்.

தேசிய இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு உள்ளேயும் சர்வதேச ரீதியாகவும் சட்டபூர்வமான அமைப்புக்கள் போதாமையினாலும், அரச பயங்கரவாதம் திட்டமிட்ட முறையில் அதிகரித்ததினாலும், தமிழர்களுடைய சமத்துவத்துக்கான போராட்டம் சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்டமாக சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைய பரிணாமம் அடைந்து நிற்கிறது.

இந்தியா தனது பிராந்திய மேலாதிக்கத்தை பேணும் நோக்கில், சுயலாபத்துக்கான சிந்தனையுடன், தமிழர்களுடைய போராட்டங்களை அழித்தொழிப்பதற்கும் இந்த தேசிய இனப்பிரச்சினையில் தொடர்ந்தும் தலையிடுவதற்கும் எடுத்துவரும் முயற்சிகள் கண்டனத்துக்கு உரியன. அமைதிப்படை செயற்பாடு என்ற கபடமான போர்வையின் கீழ் தமிழர்களுடைய அபிலாசைகளை அடக்கி ஒடுக்குவதற்கும் தனது படைபலத்தை கொடுமையான முறையில் பயன்படுத்திய இந்தியா, தனது பிளவுபடுத்தி வெல்லும் தந்திரத்தில் தோல்வி கண்டது. தமிழர்கள் தாயகத்தில் நிலைகொண்டிருந்த வேளையில் அமைதிகாக்கும் படையினர், அநேக யுத்தக் குற்றச்செயல்களைச் செய்தனர். முழுமையான மனவுறுதி -தன்னலமற்ற தியாகங்கள் என்பவற்றின் மூலம் இந்த நீதியற்றதும் கொடூரமானதுமான சண்டையில் தமிழ் மக்கள் வெற்றி பெற்றனர். இந்தியா வரலாற்றின் படிப்பினைகளை மறக்கப் பார்க்கின்றது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி வூட்ரோ வில்சனின் வார்த்தைகளில் கூறுவதானால், "சுயநிர்ணய உரிமை ஒரு முக்கியமான கோட்பாடு என்பதை சிறந்த அரசியல் தலைவர்கள் இனிவரும் காலத்தில் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். இதனை அலட்சியப்படுத்துவது அபாயகரமானது" என்பதை தொடர்ந்தும் தனது கேந்திர அக்கறைகளுக்காக தமிழ் மக்களுடைய மனித உரிமைகளைக் காவு கொள்ளும் கொள்கையை கடைப்பிடிக்கும் இந்தியா உணரவேண்டும். பயங்கரவாதம் மற்றும் குழப்பங்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்தல், சிறீலங்காவின் ஆயுதப்படைகளுக்கும் கூலிப்படைகளுக்கும் பயிற்சிகள் அளித்தல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு இன்று தனது கேவலமான அரசியல் விளையாட்டை இந்தியா நடத்துகிறது.

தொடர்ச்சி 13ம் பக்கம்...

# குடாநாட்டில் மீனவர்கள் மேல் தாக்குதல்கள்

யாழ் குடாநாட்டில் வைகாசி 8ம் திகதி முதல் 11ம் திகதி வரையிலான காலப்பகுதியில் சிறீலங்கா விமான, கடற்படையினரால் தொடர்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. இதனால் மீனவர்கள் உடல், பொருட் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரியவருகிறது.

காங்கேசன்துறையிலிருந்து வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு வரை கடல்வழியாக சென்றுகொண்டிருந்த சிறீலங்காவின் கடற்படைப் படகுகள் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்கள் மேல் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இதனால் மீனவர்களின் பெறுமதிமிக்க கட்டுமரங்கள், வலைகள் என்பன சேதமடைந்துள்ளன.

அத்துடன் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் தவராசா எனும் 24 வயது மீனவர் வல்வைக் கடலில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. குடத்தனைக் கடலில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் குடத்தனையைச் சேர்ந்த எஸ். கணபதிப்பிள்ளை எனும் மீனவர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

நாகர் கோயில் கடலில் வைத்து வைகாசி 11ம் திகதி இரு மீனவர்களை கடற்படையினர் கைது செய்ததாகத் தெரிகிறது. நாகர் கோயிலைச் சேர்ந்த இந்த இரு மீனவர்களுக்கும் என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை.

இதேதினம் பலாலி முகாமிலிருந்து வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு நோக்கியும், மண்டைதீவு முகாமிலிருந்து யாழ் குருநகர் பகுதி மீதும் செல் தாக்குதல்கள் சரமாரியாக நிகழ்த்தப்பட்டுள்ளன.

அன்றைய தினம் அவ்ரோ விமானம் ஒன்று யாழ் நகரப் பகுதி மீதும் வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு, தென்மராட்சிப் பகுதிகள் மீதும் தாழப்பறந்து குண்டு வீசும் பாவனையில் பல தடவைகள் வட்டமடித்ததாகவும் இதனைத் தொடர்ந்து பாடசாலைகள் மூடப்பட்டதாகவும், வீதியில் நின்ற மக்கள் குண்டு வீச்சுக்களை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

## யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரின் 'இந்திய சிந்தனை மரபு'

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் நா. சுப்பிரமணியனும், அவரது மனைவி திருமதி. கௌசல்யா சுப்பிரமணியனும் இணைந்து எழுதிய 'இந்திய சிந்தனை மரபு' எனும் நூல் வெளியீட்டு விழா, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி கலை இலக்கிய கழகத்தின் சார்பில் நடைபெற்றது.

பண்டிதர் சி. அப்புத்துரைஅவர்கள் தலைமை தாங்கிய இவ் வைபவத்தில் யாழ் பல்கலைக்கழக இந்துநாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஸ்ணன் உரையாற்றுகையில், "இந்தியச் சிந்தனை மரபு என்ற இந்நூல் அரியதொரு பொக்கிசமாகும். சமய உலகில் தடுமாறிக் கொண்டிருப்பவர்களுக்கு இந்நூல் கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளது" என்றார். மாவை ஆதீன முதல்வர் மகாராஜசிறீ அ. து. சண்முகநாத குருக்கள், சி. சிவமகாராஜா, திருமதி. சோ. கைலாசநாதன் ஆகியோர் கூட்டாக மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் சிவலிங்கராஜா, சைவப்புலவர் க. செல்லத்துரை, திருமதி. கோகிலா மகேந்திரன், ஆசிரியமணி அ. - பஞ்சாட்சரம், கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோர் இந்நூல் பற்றிய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ■

# ஐரோப்பிய பாராளுமன்ற....

பட்ட தமிழர்களுக்குச் சாதகமான நிலை, ஜாஸ்கவுரோன்ஸ்கி அறிக்கையில் இல்லை என அவதானிகள் கருதுகின்றனர். இதற்குக் காரணம் போலியான 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர்கள்' போன்ற குழுக்கள், உண்மைக்குப் புறம்பான தகவல்களை ஐரோப்பியர்களுக்கும் மற்றும் வெளிநாட்டவர்களுக்கும் வழங்கி வருவதேயாகும். ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மான முன்னறிவிப்பில் 5வது பிரிவில் இவ் யாழ்ப்பாண பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர்கள் அமைப்புக்கும், தாராள ஜனநாயகத்திற்கான கவுன்சில் என்கிற அமைப்புக்கும் அதன் உறுப்பினர்கள் அபாயத்தில் உள்ளதால், உதவிகளை ஐரோப்பிய ஒன்றியம் செய்ய வேண்டுமென அழைப்புவிடுத்துள்ளது.

ஆனால் மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்று ஒரு அமைப்பு யாழ்ப்பாணத்தில் இல்லை என்று யாழ். பல்கலைக்கழக உபவேந்தர், பகிரங்கமாக தனது உத்தியோக முத்திரையுடனான உத்தியோக முகவரி பொறிக்கப்பட்ட கடிதம் மூலம் மறுப்புத் தெரிவித்திருந்தார். அத்துடன் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் தனது கூட்டத்தில் தீர்மானம் ஒன்றின் மூலம் இத்தகைய ஒரு அமைப்பு இல்லை என பகிரங்கமாக அறிவித்தும் இருந்தது.

உண்மை இப்படியிருக்க, இல்லாத அமைப்பின் இட்டுக் கட்டிய கதைகளை உண்மை எனக் கருதும் ஐரோப்பிய பாராளுமன்றம், இவ்வாறு இயங்கும் சில சுயநலவாதிகளின் வார்த்தைகளை உண்மை என நம்பி தனது விளக்க குறிப்புரையிலும் இந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு அவர்களது துணிவுக்கு பாராட்டு தெரிவித்துள்ளது. அது எவ்வளவு தூரத்திற்கு உண்மைக்கு புறம்பான தகவல்களில், ஐரோப்பிய பாராளுமன்றம் மூழ்கிக் கிடக்கிறது என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

அவ்வாறே இவ்வறிக்கையில் தாராள ஜனநாயத்திற்கான கவுன்சில் எல்லா பகுதியினரையும் இனப்பிரச்சினை தீர்வுக்கு ஜனநாயக வழியில் தீர்வுகாண முயற்சிகளை செய்யும் அமைப்பு எனக் குறிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இதுவரை இலங்கைத் தீவில் அமைதியை ஏற்படுத்த உழைத்த, உழைக்கின்ற குழுக்கள் பிரமுகர்களுக்கிடை இத்தகைய ஒரு அமைப்பு இல்லை என்பது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரியும். உண்மை இதுவாக இருக்க தங்களுக்கு இருக்கும் ஆங்கிலப் புலமையின் துணையுடன் கற்பனாவாதக் கதைகளை எழுதும் இத்தகைய அமைப்புக்களை, உண்மைகளைக் கண்டு அறிவிக்கும் அமைப்புக்களாக ஐரோப்பிய பாராளுமன்றம் கருதுவதால் ஐரோப்பிய பாராளுமன்ற அறிக்கை உண்மைக்குப் புறம்பான பல தகவல்களை வெளிப்படுத்துவதுடன் அரசியல் யதார்த்தத்தையும் பிரதிபலிக்கத் தவறியுள்ளதில் வியப்பில்லை.

மேலும் இலங்கைத் தீவுக்கு ஐரோப்பிய பாராளுமன்றத்தவரோ, வெளிநாட்டவரோ விஜயம் செய்யும்பொழுது அவர்களை வடக்கே செல்ல அனுமதிக்க மறுக்கும் சிறீலங்கா அரசாங்கம், தனது அடிவருடிகளான தமிழ்க் குழுக்களையும் கொழும்புத் தமிழர்களான தமிழ்ப் பிரமுகர்களையும் மட்டுமே இவர்களைச் சந்திக்க அனுமதிக்கிறது. இவர்கள் வாயளவில் சிறீலங்கா அரசாங்கத்தை சில குறைகள் கூறினாலும், இதயத்தில் சிறீலங்காவை அண்டிப் பிழைப்பதற்காக ஆதரிக்கும் தேவையுள்ளவர்கள். அரசாங்கத்தின் ஸ்திரத்தை பேணக்கூடிய வகையில் பேட்டிகளையும், கருத்துக்களையும் கூறுகின்றனர்.

அவ்வாறே அகதி முகாம்களுக்கு இவர்கள் விஜயம் செய்யும் போது, சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் பராமரிப்பிலிருக்கும் அகதிகளின் பிரதிநிதிகள் அரச சார்பான கருத்துக்களையே வெளிப்படுத்துவர் என்பதே நடைமுறை யதார்த்தம்.

இந்த வகையில் ஐரோப்பிய பாராளுமன்ற அங்கத்தவர்களோ வேறு எந்த வெளிநாட்டவர்களோ யாழ் குடாநாட்டுக்கு நேரடியாக விஜயம் செய்து மக்களைச் சந்திக்காதவரை, உண்மைக்குப் புறம்பான யதார்த்தமற்ற தகவல்களையே பெறுவர்.

அத்துடன் வர்த்தக நோக்கையே பிரதான நோக்காகக் கொண்டு சிறீலங்காவுடன் உறவு கொள்ள விரும்புபவர்களும், தாம் குடாநாட்டுக்குச் சென்று உண்மை நிலையை அறியவேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை.

தீர்மான முன்னறிவிப்பில் 'B' பகுதியில் 1993 நவம்பர், ஒக்டோபர் மாதங்களில், தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் குடாநாட்டில் நூற்றுக்கணக்கானவர்களின் அழிவுக்குக் காரணமாயிருந்தனர் என அப்பட்டமான உண்மைக்கு மாறான கருத்தை வெளியிட்டுள்ளனர். ஆனால் உண்மையில் இவர்கள் குறிப்பிட முனைவது பூநகரி 'தவளைப் பாய்ச்சல்' தாக்குதல்களால் ஏற்பட்ட அழிவுகளையே என்பது சிலர் கருத்து.

உண்மையில் ஆக்கிரமிக்கப்பட்ட தமது தாயக பூமியை மீட்பதற்கு மக்கள் நடாத்தும் போரை 'இழப்பு' எனக்கூறும் ஐரோப்பிய பாராளுமன்றம், அதற்குக் காரணமான சிறீலங்கா ஆக்கிரமிப்பாளரை எதுவித குறையும் கூறவில்லை. மாறாக ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணை மீட்பதற்கு மக்கள் நடாத்தும் யுத்தத்தை பயங்கரவாதத் தாக்குதல் எனவும் சுட்டிக் காட்டுகிறது. ஆயினும் 1993 -94 இல் வெளிவந்த பயங்கரவாதம் பற்றிய ஐரோப்பிய ஆய்வு நூல்களில், ஒன்றுகூட தமிழீழ மக்களின் தேசிய இராணுவமான தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டை, புத்திஜீவிகள் மட்டத்தில் 'பயங்கரவாதம்' என வர்ணிக்கவில்லை என்பது இங்கு கவனத்தில் எடுக்க வேண்டிய விடயமாகும். எனவே ஐரோப்பிய அரசியல் வாதிகள் தமது சுயநோக்குகளை நிறைவேற்றுவதற்கு இச்சொற்றொடரைப் பயன்படுத்துகிறார்கள் என்பதே சாலப்பொருத்தமாகும்.

சிறீலங்கா ஜனாதிபதியும் இலங்கைத் தீவினை வர்த்தக நோக்குடன் சார்புத் தன்மைகளுக்காக பயன்படுத்த விரும்பும் அனைவருக்கும் கடை விரித்து, காசு சேர்த்து தனது யுத்த வெறியையும் பொருளாதாரத் தோல்விகளையும் சமாளித்து வருகின்றார் எனபது இன்றைய நிலைப்பாடு. இதனால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 1976 முதல் டில்லியில் இருந்தே இயங்கிவரும் ஐரோப்பிய ஆணைக்குழு அலுவலகம் இலங்கைத் தீவில் தனது அலுவலகம் ஒன்றை ஸ்தாபிக்க முயன்றுவருகின்றது. இதற்காக ஐரோப்பிய பாராளுமன்றத்தின் வர்த்தகக் குழுவினர் சிறீலங்காவுக்குச் சார்பான, ஒருதலைப் பட்சமான தமிழ்மக்களுடைய நியாயப்பாடுகள் எதைப்பற்றியும், அக்கறை எதையுமே வெளிப்படுத்தாத, அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளனர். இவர்கள் தமது சார்புத் தன்மைக்கு ஆதரவாகவும், ஆதாரமாகவும் தமது சுயநலன்களுக்காக விடுதலைப் போராட்டத்துடன் முரண்படுகின்ற தமிழ்ப்பதர்களின் கூற்றுக்களையும் ஆவணங்களையும் தொகுத்து அறிக்கைகளை வெளியிடுகின்றனர்.

### முன்னாள் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் கண்டனம்

இவ்வறிக்கை பக்க சார்பானது எனவும், வர்த்தக நலன்களை மட்டுமே மையமாகக் கொண்டு ஐரோப்பிய பாராளுமன்றத்தின் வர்த்தகக் குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை; துன்புறும் தமிழர் பற்றி எதுவுமே பேசவில்லை என முன்னாள் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் 'கிறிஸ்ரினா ஓடி' கண்டனம் தெரிவித்துள்ளார். 'வெஸ்ட் மினிஸ்ரர் பாராளுமன்ற கமிட்டி' அறையில் வைத்து இக்கண்டனத்தை வெளியிட்ட கிறிஸ்ரினா, யூன் 9ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் தான் போட்டியிடும் தொழிற் கட்சியினர் வெற்றிபெற்றால் இவ்வறிக்கையை மாற்றக்கூடிய வகையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர இருப்பதாகவும் உறுதியளித்தார்.

### தமிழ் அகதிகளுக்குப் பிரச்சினை

ஐரோப்பிய நாடுகள் அரசியல் காரணங்களுக்காக நாட்டை விட்டு வெளியேறுபவர்களுக்கு அதுவும் அவர்கள் வாழ்வுக்கு அச்சமுண்டு என்பது நன்கு நிறுவப்பட்டால் மட்டுமே, அரசியல் புகலிடம் வழங்கப்படல் வேண்டும் எனும் 1951 ஆம் ஆண்டின் ஜெனிவா அகதிகள் சாசன மரபையே கடைப்பிடிக்கின்றன. தற்போதைய புதிய அறிக்கை தமிழர்களைப் பயங்கரவாதிகள் எனும் தோரணையில் அமைந்துள்ளதால், தமிழ் அகதிகள் 1951 ஆம் ஆண்டின் ஜெனிவா அகதிகள் சாசனத்தினுடைய தகைமைகளுக்குக் கீழ் வரவில்லை எனக்கருதி, அவர்களை ஐரோப்பிய நாடுகள் திருப்பி அனுப்பக் கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது என அகதிகள் நலன்புரி அலுவலர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் மேலும், "யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனித உரிமைக்கான ஆசிரியர்கள் போன்ற போலி அமைப்புக்களின் அறிக்கைகள் தமிழர்களை, ஐரோப்பிய நாடுகள் 'கிரிமினல் குற்றவாளிகள்' எனக் கருதக் கூடிய சூழ்நிலையையும் தோற்றுவித்துள்ளன. இதனால் அகதிகள் 'குற்றப்பரம்பரை' என்ற கருத்துடன் உள்ள பல இனவாத அமைப்புக்கள் தமிழரையும் நாட்டை விட்டு வெளியேற்றினால் குற்றச்செயல்கள் குறையும் என்ற கருத்துக்களை வெளியிடுவதற்கு புதிய சூழ்நிலை இடமளிக்கும்" எனவும் கூறினார்.

மேலும் ஐரோப்பிய பாராளுமன்றம் சிறீலங்காவுக்கான ஆயுத விற்பனவுகளை மீள ஆரம்பிப்பது, அவர்கள் எதிர்பார்ப்பது போல மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யாது, தமிழின அழிப்புக்கே பயன்படுத்தப்படும் என்பதை வரலாற்று நிகழ்வுகள் ஊடாக அவர்கள் கண்டு கொள்ளலாம். ஆகவே ஐரோப்பிய பாராளுமன்ற நாடுகள் மீளவும் சிறீலங்காவுக்கு ஆயுத விற்பனைகளைத் தொடங்குவது, உலகில் தமிழின அழிப்புக்கு ஒத்துப்போகும் சர்வதே யுத்தக் குற்றச் செயலாகவே நாளைய வரலாறு தீர்ப்பிடும்.

இது ஒருபுறம் இருக்க, "சீபெல்ட்" (Seefeld) தீர்மானத்தில் 1988 இல் ஐரோப்பிய பாராளுமன்றம் 31 வது சரத்தின் மூலம் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் சிங்கள பௌத்த சிறீலங்காவை உருவாக்க நினைப்பது யுத்தத்தையும் இரத்த ஆறையும் தொடரச் செய்யும் செயலாகும்எனவும் குறிப்பிட்டிருந்தது. அத்துடன் 32 வது சரத்தின்படி எல்லா இனங்களினதும் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

ஆனால், சிறீலங்கா இவற்றை நடைமுறைப்படுத்தாது பேச்சு வார்த்தைக்கான விடுதலைப் புலிகளினது அழைப்புக்களையும் அலட்சியப்படுத்தி தொடர்ந்தும் நிலைமையை மோசமடைய வைக்கிறது. இந்நிலையில் சிறீலங்காவின் நடத்தைகளைக் கண்டித்து வழிப்படுத்த வேண்டிய பொறுப்பிலுள்ள ஐரோப்பிய பாராளுமன்றம், அதனைப் பற்றி எதுவுமே கருத்துவெளியிடாது ஒருபக்கச் சார்பான அறிக்கையை வெளியிட்டிருப்பது ஐரோப்பாவில், ஐரோப்பிய பாராளுமன்ற அங்கத்தவர் தெரிவில் பங்குபற்றக்கூடிய தகைமையுடன் வாழும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் மனோநிலையை புண்படுத்தியுள்ளது என்பது வேதனை மிகுந்த உண்மை.

எனவே இதுகுறித்து தமிழ் வாக்காளர்கள் தங்கள் தொகுதி ஐரோப்பிய பாராளுமன்ற வேட்பாளர்களுடன் யூன் 9ம் திகதிக்கு முன் சந்தித்து தங்கள் அதிருப்தியை தெரிவிப்பதுடன், இதனை அவர்கள் யூன் 9 இல் வெற்றி பெற்றதன் பின்னர் மாற்றியமைக்கும்படியும் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும் தெரிகிறது. ■

## புலிகள் என நினைத்து இராணுவ குழுக்கள் மோதல்

வில்பத்து கற்குளியலவ என்ற இடத்தில் சிறீலங்காப் படையினர் தமக்கிடையே நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இராணுவக் கேப்ரல் ஒருவர் கொல்லப்பட்டார். புலிகள் மீது தாக்குவதாக நினைத்து இரு இராணுவக் குழுக்கள் தமக்கிடையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்ட இச்சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது. ■

## ஈழத்தமிழர் விவகாரம்

# இந்தியா தான் எடுத்த தகாத முடிவுக்காக ஒருநாள் பதில் சொல்லியாக வேண்டும்

சில சம்பவங்கள் எம்மைத் தலைகுனிய வைக்கின்றன. ஈழத்தமிழர் விடயத்தில் இந்திய அரசு எடுத்த முடிவுகள் சரிதானா? என்ற பல கேள்விகள் எமக்கு கருகின்றன. ஒரு சர்வதேச வலைப்பின்னலில் சிக்கிய இந்தியா இதைச் செய்ததா? என்ற கேள்வி கூட எமக்கு ஏற்பட்டது. இந்தக் கேள்விகளுக்கு இந்திய சமூகம் அல்லது இந்திய ஆளும் வர்க்கம் என்றோ ஒருநாள் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது. இவ்வாறு சுபமங்களாவின் ஆசிரியரும் நாடக ஆசிரியருமான கோமல் சுவாமிநாதன் அண்மையில் யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற 'தமிழ் இலக்கியத்தின் தாக்கங்கள்' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது, "கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் இங்கு ஒரு கேள்வியைக் கேட்டார், 'நாங்கள் உங்கள் மண்ணுக்கு என்ன துரோகம் செய்தோம்? உங்கள் இராணுவம் இங்கு வந்து எமது மக்களை அழிப்பதற்கும் எமது மக்களுக்கு துன்பங்கள் செய்வதற்கும் நாங்கள் என்ன துரோகம் செய்தோம்?' என்று கேட்டார். இந்திய அரசை நிறுத்தி வைத்து சரித்திரம் கேட்க வேண்டிய கேள்வி இது என்றார்.

என்றோ ஒருநாள் இந்தக் கேள்விக்கு இந்திய ஆளும் வர்க்கம் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. நான் இலங்கை வருவதற்கு தயாரானபோது யாழ்ப்பாணம் சென்றுவிடாதீர்கள் என்று பலர் என்னை எச்சரித்தனர். உள்நுழைவு அனுமதி (விசா) எடுக்கச் சென்றபோது பத்திரிகை ஆசிரியர் என்ற பார்வையில் இலங்கை அரசின் ஒப்புதல் இல்லாமல் அதைத் தர மாட்டோம் என்றார்கள். பின்பு இலக்கிய சொற்பொழிவு செய்யச் செல்வதாக உறுதிமொழியை வாங்கிக் கொண்டு, அரசியல் பேசக்கூடாது என்று சொல்லி அனுமதி தந்தார்கள். நான் அரசியல் பேசமாட்டேன், இலக்கியம்தான் பேசுவேன் என்று அவர்களிடம் சொன்னேன். என் இலக்கியமே அரசியல்தான் என்று அவர்களுக்குத் தெரியாது.

அரசியலைத் துறந்துவிட்ட, அரசியலை மறந்துவிட்ட இலக்கியங்கள் கிடையாது. யாழ்ப்பாண மண்ணில் காலடி எடுத்து வைத்தபோது எனது பயணத்தில் ஏற்பட்ட கஸ்டம் மறைந்துவிட்டது. நான் இங்கு வரும்போது, இருபதாம் நூற்றாண்டின் வழிகாட்டியாக ஈழத்து இலக்கியம் திகழும் என்றும் போராட்டம் எங்கு நடக்கின்றதோ அங்கு நல்ல இலக்கியம் தோன்றும் என்றும் சொன்னேன். தமிழ் இலக்கியம் பின்னடைந்து போனதற்கு இலட்சியமின்மையும், வர்த்தகத் தன்மையுமே காரணங்களாகும். சுதந்திரத்துக்குப் பின்னர் ஒரு சமூகத்ததிற்கு ஒரு ஓய்வு கிடைக்கின்றது. இந்த ஓய்வை விலைக்கு வாங்க சினிமா, நாடகம், பத்திரிகை என்ற மூன்றும் முயல்கின்றன. இன்று தமிழ் இலக்கியம் வியாபாரப் பொருளாகிவிட்ட நிலையைக் காண்கிறோம். ஆபிரிக்காவில், இலத்தீன் அமெரிக்காவில் யுத்தத்தின் மத்தியில் வெடிகுண்டுகளுக்கு நடுவில் கலைஞர்களால் கவிதைகள் படைக்கப்படுகின்றன. ஈழத்திலும் இதேமாதிரியே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றமையை நான் அவதானித்தேன்.

இங்கு எந்த வசதியும் இல்லாமல் கலை இலக்கியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இங்கு போலியான கலை இலக்கியங்கள் தோன்றவில்லை. வாழ்வு மாயையாகத் தெரியவில்லை. வாழ்க்கையின் யதார்த்தத்தை சந்திக்கின்றோம். இங்குள்ள வேதனைகளும் அதன் தழும்புகளும் இருபத்தோராம் நூற்றாண்டில் மாபெரும் இலக்கியத்தை இந்த ஈழத்தில் உருவாக்கும்.

சுயமான இலக்கியங்கள் இந்த மண்ணில் தோன்றுகின்றன. இந்த மண்ணின் அரசியலை எமது பத்திரிகையில் எழுதும்போது, இந்திய அரசியல் சட்டங்களுக்கு உட்பட்டே ஆகவேண்டும். அப்படி ஒரு நிலை உள்ளது. ஈழத்து விஜயத்தின்போது பல விடயங்களை நான் பார்க்கின்றேன். இப்படிக்கூட வாழ்கின்றார்கள்; தமது இருப்பை நிலைநிறுத்த இப்படியும் போராடுகின்றார்களா என்றும் வினாவினார். ■

## புலிகளின் கட்டுப்பாட்டில்....

கின்றார். "அடிமையாக இருப்பதைவிட போராடிச் சாவதே மேல்" என்கின்றார். "வெள்ளைப் புலிகள் என்றே கத்தோலிக்க மதகுருமாரை கொழும்பு அரசாங்கம் அழைப்பதாக அவர் சொல்லுகின்றார். இது மக்களுக்கு எதிரான யுத்தம். தமிழ்ச் சமுதாயம் சிங்களவரால் அழிக்கப்படக்கூடிய நிலையை சிறீலங்கா ஏற்படுத்தியது. நான் அகிம்சை வழியையே நாடுகின்றேன்.. ஆனால், இளைஞர்கள் ஏன் ஆயுதத்தைத் தூக்கினார்கள் என்பது தனக்கு விளங்குவதாகக் கூறுகின்றார். இந்த ஆயுதப் போராட்டத்தை நாம் பல வருட ஜனநாயகப் போராட்டத்திற்குப் பின்னரே தொடங்கினோம் என்கிறார்" அருட்திரு இமானுவேல்.

### "கொழும்பு அரசாங்கம்

இலங்கை மட்டுமே தனது எதிரிக்கு சாப்பாடு போடுவதாக நம்புகின்றது. செஞ்சிலுவைச் சங்கம் கப்பலில் வருகின்ற சாப்பாடு யாருக்கு போகின்றது என கவனித்து வருகின்றது. அரசாங்கம் மாதந்தோறும் அனுப்பும் உணவு நாற்பது வீதமான தேவையையே பூர்த்தி செய்கின்றது. மக்கள் தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு வெளிநாடுகளிலிருந்து தமிழ் மக்கள் அனுப்பும் பணமே உதவியாக உள்ளது என்கின்றார் மதகுரு இமானுவேல். எமது பிள்ளைகள் போசாக்கின்றியே பிறக்கின்றார்கள். எமது வாழும் நாட்கள் குறைந்துள்ளன. வாழ்க்கைத் தரத்தைப்பற்றி என்ன சொல்வது" என்கின்றார்.

### இறந்தோரின் தேவாலயம்

மாவீரரை புகழ்ந்து பாடும் பாட்டுக்கள் ஒலிக்கின்றன. இவர்கள் தமது உயிரை தமிழீழத்திற்காக அர்ப்பணித்துள்ளனர். கோப்பாயில் மாவீரர்களுக்கான துயிலும் இல்லம் ஒன்று உள்ளது. ஆயிரத்து முன்னூறிலும் அதிகமான மாவீரர் நினைவுச் சமாதிகள் கட்டடப்பட்டுள்ளன. இந்த மாவீரர் துயிலும் இல்லத்திற்கு மாலை நேரம் நான்கு பெண்போராளிகள் பார்வையிட வந்திருந்தனர்.

இதில் அநேகமானோர் பூநகரி யுத்தத்திலேயே இறந்தவர்கள் என்கிறார் சமாதிக்கு பாதுகாவலராக உள்ளவர். இதில், 1993 இல் கார்த்திகை 11 இல் இருந்து 13 வரை 500 பேருக்கு மேல் இறந்தவர்களாவர். இதில் பல பெண் போராளிகளும் உள்ளனர். இவர்கள் அனைவரும், இந்த யுத்த வரலாற்றில் மிகவும் அதிக ரத்தம் சிந்திய போரில் உயிர் துறந்தவர்கள்.

### பொலிஸ் படை

அன்ரன் பாலசிங்கம், இவர் புலிகளின் அரசியல் ஆலோசகர் மற்றும் அவர்களின் பேச்சாளராகவும் உள்ளார். இவரை நான் கோண்டாவில் அலுவலகத்தில் சந்திக்கிறேன். அப்போது, இவர் அங்கே தனது நாய் ரயீம் உடனும், பல காவலர்களுடனும், ஒரு லான்ட்றோவர் வாகனத்தில் வந்தார். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் அனைத்தும் ஒரு தனிநாட்டிற்கான பூர்த்திகளைக் கொண்டுள்ளன. தமிழர்கள் அவர்களுக்கென மொழி, கலாச்சாரம் மற்றும் மதம் ஆகியவற்றைக் கொண்டுள்ளனர். புலிகள் இலங்கையின் இரண்டாவது பெரிய நகரத்தை (யாழ்ப்பாணம்) தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளனர். அத்துடன், இதுவே தமிழீழத்தின் பெரும்பகுதியாகும். ஒளிவீசும் தலைவராக பிரபாகரன் தமிழ் மக்களின் பற்றைப் பெற்றுள்ளார்.

1992 ஆம் ஆண்டிலிருந்து, புலிகள் தமது பொலிஸ் படையை வைத்துள்ளனர். கடந்த வருடம், தமது நீதிமன்றங்களையும் கொண்டுவந்துள்ளனர். நாங்கள் எமது தாய்நாட்டை இன்னமும் பிரகடனப்படுத்தாதற்கு காரணம், உணவுப் பொருட்கள் அரசாங்கத்தின் இடங்களிலிருந்தே வரவேண்டும் என்கின்றார் பாலசிங்கம். நாங்கள் உலகத்தின் பெரிய ஒரு இராணுவமான இந்திய இராணுவத்தை வெளியேற்றினோம். இந்திய அமைதிப்படை மூன்றுவருட இழப்புகளுக்குப் பிறகு 1990 ஆண்டு வெளியேறியது. இலங்கை இராணுவத்தில் உள்ளவர்கள் தென்பகுதியைச் சேர்ந்த பையன்கள். தெற்கில் உள்ள மக்கள் தமது பிள்ளைகள் இறப்பதை வெறுக்கிறார்கள் என்கிறார் பாலசிங்கம். நான் கதைத்துக்கொண்டிருக்கும்போது, இராணுவத்தின் குண்டு போடும் விமானம் பறந்து சென்று எமது பேச்சை நிறுத்துகின்றது.

நான் கிளிநொச்சியைத் தாண்டிச் செல்லும்போது, சிறீலங்கா இராணுவத்தின் மூன்று இறந்த உடல்கள் மக்களின் பார்வைக்காக புலிகளால் வைக்கப்பட்டிருந்தது. இவர்கள், வளர்ச்சியடையாத சிறுபையன்கள். இவர்கள் ஆனையிறவில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கெரில்லாத் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டவர்கள். இவர்களின் உடல்கள், புழுதி சேர்ந்த பாதை ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது. அதை, மக்கள் பார்த்த வண்ணம் சென்றனர். இவர்கள் தமிழீழ யுத்தத்தில் கடைசியாகப் பலியானவர்கள். ■

# தேர்தலில் போட்டியிட படை அதிகாரிகள் விருப்பம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் உயர் பாதுகாப்புப் படை அதிகாரிகளும் உயர் பொலிஸ் அதிகாரிகளும் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளதாக பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி உயர் அதிகாரிகள் பொதுசன ஐக்கிய முன்னணியின் மூலம் போட்டியிட விரும்புவதாகவும் இதற்கான விண்ணப்பங்கள் தற்போது முன்னணிக்குக் கிடைத்திருப்பதாகவும் இது தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்தவர்களில் பத்து இராணுவ உயர் அதிகாரிகளும், எட்டு சிரேட்ட பொலிஸ் அதிகாரிகளும், ஏனைய பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களில் பன்னிரண்டு பேர்களும் விண்ணப்பித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டுக்கு ஒரு நல்ல சேவையை இவர்கள் செய்ய முற்பட்டபோதும் அரசியல் காரணங்களினால் அதைச் செய்ய முடியாது போனதால் தாம் அரசியலில் ஈடுபட்டு அச்சேவையை செய்ய விரும்புவதாக குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ■

## இந்தியா ஏற்படுத்தும்....

பயங்கரவாதம் மற்றும் குழப்பங்கள் தடுப்புச் சட்டமானது, குற்றம் ஒன்றும் செய்யாதவர்கள் ஒன்று கூடும் உரிமையை மட்டுப்படுத்துவதுடன் மறுப்பதற்கான நிகழ்தகவுகளையும் கொண்டுள்ளது. இதனுடைய இயல்புகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழுவின் மனித உரிமைகள் மரபு சாசனத்தை இழிவுபடுத்துவதாக உள்ளது. விதி 4(2)இல் "பயங்கரவாதம்", "குழப்பங்களை விளைவித்தல்" என்பவற்றுக்கு கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் அமைதியான அரசியல் கருத்துக்களைக் கொண்டிருப்போர் மேலும் இச்சட்டத்தை அமுல்படுத்துகின்றது என மனித உரிமைகள் குழுக்கள் சுட்டிக் காட்டுகின்றன. "தடா சட்டமெனப்படும் பயங்கரவாதம் மற்றும் குழப்பங்களை தடுப்பதற்கான சட்டமானது, சிறீலங்காவின் ஆயுதப் போக்குக்கு எதிரான நிறுவனங்களை ஆதரிக்கும் மக்களை சிறைப்படுத்துவதற்கு துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது" என சர்வதேச மன்னிப்புச் சபையின் 1993 ஆம் ஆண்டு அறிக்கை கூறுகின்றது.

பிராந்திய ஏகாதிபத்தியத்தை உறுதி செய்யும் நோக்குடன், இந்தியா, இலங்கை தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கு சர்வதேச மத்தியஸ்த்தம் ஏற்படாதவாறு தடுத்து வருகின்றது. ஐரோப்பாவில் இருந்து அமைதித் தீர்வுக்கான ஆலோசனைகளுடன் சென்றுகொண்டிருந்த திரு. சதாசிவம் கிருஸ்ணகுமார் அவர்கள் பயணம் செய்த சரக்குக் கப்பலை சர்வதேச கடல் எல்லையில் வைத்து வழிமறித்து கைது செய்து அவரின் மரணத்துக்குக் காரணமாக அமைந்த இந்தியாவின் செயற்பாட்டை மேற்சொல்லப்பட்ட இந்திய சர்வதேச மத்தியஸ்த்தைத் தடுப்பதற்கு எடுக்கும் கோபாவேசமான செயல்களின் உச்சமான ஒன்றாகச் சுட்டிக் காட்டலாம்.

இந்த உண்மைகளின் பின்னணியில், அமெரிக்க ஜனாதிபதி தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இந்தியாவில் இருந்து தமிழ் அகதிகளை பலவந்தமாகத் திருப்பி அனுப்பும் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்த வேண்டும் என மனிதாபிமான உணர்வுடன் வேண்டுகோள் விடுக்கின்றோம். இந்திய அமைதி காக்கும் படையினரின் யுத்தக் குற்றச் செயல்களை நீதியின் முன் நிறுத்தக் கூடியவகையில் அமெரிக்க ஜனாதிபதி தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்தியாவை விசாரணைக்குழு ஒன்றை அமைக்குமாறு வற்புறுத்துமாறும் பணிவன்பாக வேண்டுகிறோம். அத்துடன் மேலும் அமெரிக்க ஜனாதிபதி இந்தியாவை சிறீலங்காவின் ஆயுதப் படைகளுக்கும், கூலிப்படைகளுக்கும் பயிற்சி அளிப்பதை நிறுத்தும்படியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் மேல் விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை விலக்கும்படியும் வற்புறுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம். சுதந்திரமான உலகின் தலைவர் என்ற முறையில் ஒரு உறுதியான வேண்டுகோள் ஒன்றை அமெரிக்க ஜனாதிபதிக்கு விடுக்க விரும்புகின்றோம். "அமெரிக்க ஜனாதிபதி தனது நன்மதிப்பை பயன்படுத்தி சர்வதேச மத்தியஸ்த்தம் ஒன்றை உருவாக்கி, இலங்கைத் தீவில் நிலவுகின்ற தற்போதைய தேசிய இன முரண்பாட்டுக்கு தீர்வு ஏற்படுவதற்கு இந்தியா ஏற்படுத்திவரும் குழப்பங்களைத் தடுத்து விலக்கி, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நீதியான தீர்வு ஒன்று ஏற்பட வழிசெய்ய வேண்டும்" என்பதே எங்கள் பணிவான வேண்டுகோள். ■

# தங்கப் பதக்கத்தை தட்டிப் பறித்தது சிறீலங்காக் கடற்படை

தனது மனைவி மக்களுக்கு காட்டிப் பெருமைப்படவென சிறீலங்காக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கிய தங்கப்பதக்கத்துடன் யாழ் வந்திறங்கிய வங்கி ஊழியர் ஒருவரிடமிருந்து அத்தங்கப்பதக்கத்தை சிறீலங்காக் கடற்படை அபகரித்துக் கொண்டது.

திருகோணமலையிலிருந்து 'நரோமா' கப்பலில் காங்கேசன் துறையை வந்தடைந்த இவரைச் சோதனையிட்ட சிறீலங்காக் கடற்படையினர், "இதனை நீர் கொண்டுபோக முடியாது. எம்மிடம் தாரும். நாம் யாழ் அரசாங்க அதிபருடாக உமக்குக் கிடைக்கச் செய்கிறோம்" எனக் கூறி அதனைப் பறித்துக் கொண்டார்களாம். இவ்வங்கி ஊழியர் எவ்வளவோ வாதாடியும் அவர்கள் அதனை கொடுக்க மறுத்து விட்டார்கள். அத்துடன் இவர் கொண்டுவந்த இனிப்பு வகைகளையும் சேர்த்து எடுத்துக் கொண்டதாக, யாழ் வந்தபின் அரசாங்க அதிபரிடம் இவர் புகார் செய்துள்ளதாக தெரியவருகிறது. ■

# தமிழீழ வடபுலத்தில் நடைபெற்ற மாபெரும் துடுப்பாட்டப் போட்டி 1994


## யாழ் மத்திய கல்லூரி - எதிர் - பரி.யோவான் கல்லூரி

கடந்த மார்ச் மாதம் 18 - 19 திகதிகளில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்திலே நடைபெற்ற இப்பெரும் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி அணி 7 துடுப்பாளர்களை தம் வசம் தக்கவைத்த நிலையில் வெற்றிவாகை சூடியது. பல்வேறு நிறங்களாலும் கருமை நிறத் தலைகளாலும் சூழப்பெற்ற மைதானத்தில் வெண்ணிய ஆடையணிந்த 11 துடுப்பாளர்கள் ஆங்காங்கே பந்தை நோக்கி வண்ணம் நிற்க திருவாளர்கள் ரவீந்திரன், முருகவேல் நடுவர்களாகக் கடமையாற்ற, துடுப்பாளர்கள் தமது இலக்குகளைக் காப்பாற்றுவதுடன் ஓட்டங்களை எடுத்த விறுவிறுப்பும், துடுப்பாட்ட ரசிகர்களிடம் ஏற்பட்ட சுறுசுறுப்பும் ஆனந்தமும் துடுப்பாட்ட விசிறி (Fan)களிடம் ஏற்பட்ட ஆவேசமும் கண்கொள்ளாக் காட்சியாகவிருந்தன. விசிறிகளால் ஆட்டம் இடையிடையே தடைப்பட்டதால் யாவரும் இவர்களை வெறுத்ததும் மறக்க முடியாத உண்மை. (Fan) என்ற சொல் (Fanatic) என்ற சொல்லின் குறுக்கம் என்பதை நினைவு கொள்ளலாம்.

இரு அணித்தலைவர்களும் களத்தில் பூவா, தலையா போட்டுப் பார்த்ததில் பரி. யோவான் அணித்தலைவர் வெற்றி பெற்று போட்டியின் முதல் ஆட்டத்தில் 148 ஓட்டங்களுக்கு சகல துடுப்பாளர்களும் ஆட்டமிழந்தனர்.









தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரி அணியினர் தமது முதல் ஆட்டத்தில் 257 ஓட்டங்களை எடுத்த நிலையில் இரண்டாம் நாள் காலை 11 மணிக்கு 9 துடுப்பாளர்கள் ஆட்டமிழந்த நிலையில், தமது முதல் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர். இந்நேரத்தில் எஸ். ஆகாஸ் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இவ்வாட்டத்தில் அணித்தலைவர் எஸ். மதிவதனன் மூன்று தடவைகளும் துணைத்தலைவர் கே. சுரேஸ் ஒரு தடவையும் எல்லைக் கோட்டுக்கு மேலாக பந்தை அடித்த ஆறு ஓட்டங்கள் ஒவ்வொன்றும் ரசிகர்களின் கோசப் பாராட்டுதல்களைப் பெற்றது.

பரி. யோவான் அணியினர் 109 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் தமது இரண்டாவது ஆட்டத்தை ஆரம்பித்து 189 ஓட்டங்களுக்கு, சகல துடுப்பாளர்களும் ஆட்டமிழந்தனர். இவ்வாட்டத்தில் எஸ். நிர்மலானந்தன் எல்லைக் கோட்டுக்கு மேலாகப் பந்தை அடித்து ஆட்டத்தை விறுவிறுப்படையச் செய்தார்.

பரி. யோவான் அணியின் ஓட்ட எண்ணிக்கையைச் சமனாக்குவதற்கு 80 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் தமது இரண்டாவது ஆட்டத்தை ஆரம்பித்த யாழ் மத்திய அணியினர் 3 துடுப்பாளர்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்று வெற்றிவாகை சூடினர்.

90 வது தடவையாக ஆடப்பெற்ற இப்பெரும் போட்டியில் பின்வரும் பரிசுகள் தீர்ப்பாளர்களால் தெரிவு செய்யப்பட்டன.
சிறந்த துடுப்பாளர் - எஸ். மதிவதனன், யாழ் மத்திய கல்லூரி
சிறந்த பந்து வீச்சாளர் -எஸ். ஆகாஸ், யாழ் மத்திய கல்லூரி
சிறந்த பந்து தடுப்பாளர் - எஸ்.- நிமலன், யாழ் பரி. யோவான் கல்லூரி
முத்துறை வல்லவர் - எஸ் ஆகாஸ், யாழ் மத்திய கல்லூரி
ஆட்டத்தின் நாயகன் - கே. சுரேஸ், யாழ் மத்திய கல்லூரி

போட்டியின் ஆகக் கூடுதலான ஓட்டங்களான 64 ஓட்டங்களை எடுத்த எஸ். ஆகாஸ் ஆட்டமிழக்காமல் இருந்ததும் குறிப்பிடத் தக்கது.

1904 ஆம் ஆண்டு முதன் முதலில் ஒராண்டில் இருதடவைகளும் பின்னர் ஆண்டுதோறும் நடைபெற்ற இத் துடுப்பெடுத்தாட்டப் பெரும்போட்டி இவ்வருடம் 90 வது தடவையாக நடைபெற்றது. இப்பெரும்போட்டி இந்நாட்டிலேயே இரண்டாவது பெரும்போட்டி எனப் பெயர் பெற்றுள்ளது. முதலாவது பெரும் போட்டி றோயல் கல்லூரி எதிர் புனித தோமஸ் கல்லூரி கொழும்பு ஆகும்.

யாழ் மத்திய கல்லூரியில் வண. பிறெட்டிக் வெப்ஸ்ரர் ஈராண்டுகள் அதிபராயிருந்த போது 1881 ஆம் ஆண்டிலே, இக்கல்லூரிகளுக்கும் துடுப்பாட்டத்தை அறிமுகம் செய்துவைத்தார். பின்னர் ஏனைய கல்லூரிகளுக்கும் பரவிய இவ்விளையாட்டு யாழ் மத்திய கல்லூரி, யாழ் பரி.- யோவான் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரிகளிலும், யாழ். விளையாட்டுக் கழகத்திலும் வளர்ச்சி பெற்றது.

அந்நாளில் இக்கல்லூரிகள் தம்மிடம் ஒரு தகுந்த அணியை உருவாக்கிவிட்டவுடன் ஏனைய கல்லூரிகளை போட்டிக்கு அழைத்தன. இந்நாளில் கயிற்றுப் பாயில் ஆடப்படும் இவ்வாட்டம் அந்நாளில் புல்தரையில் ஆடப்பெற்றது. அவ்வாறு ஆடும்போது ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தில் பந்து துடுப்பாளர்களைப் பதம் பார்த்துவிடும் அபாயமும் இருந்தது.

யாழ். நகரில் அந்நாளில் இரு பெரும் திருச்சபைகளால் நடாத்தப்பெற்ற பெரும் கல்லூரிகள் யாழ் மத்திய கல்லூரியும் (1816 இல் ஆரம்பம்), பரி. யோவான் கல்லூரியும் (1823 இல் ஆரம்பம்) ஆகும். எனவே இவ்விரு பெரும் கல்லூரிகளுக்கும் இடையே ஆரம்பித்த துடுப்பாட்டப் போட்டித் தொடர் வடபுலத்தின் பெரும் துடுப்பாட்டப் போட்டியாகப் பரிணமித்துள்ளது. ஆண்டுதோறும் நடைபெற்ற இப்போட்டிகளிலே விறுவிறுப்புக்குக் குறையவே இல்லை. ஆரம்பகாலங்களில் இரு கல்லூரிகளும் மாறிமாறி வெற்றி பெற்றன. பின்னர் 1928 முதல் 32 வரையும் மீண்டும் 1941 முதல் 47 வரையும் பரி. யோவான் அணி வெற்றி பெற்றது. 1960 ஆம் ஆண்டில் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததாலோ என்னவோ 1970 ஆம் ஆண்டில் யாழ் மத்திய கல்லூரி வெற்றி பெற்ற பின் 14 ஆண்டுகள் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றன. 1985 முதல் 1989 வரை ஆட்டம் நடைபெறவில்லை. அடுத்த ஆண்டில் பரி யோவான் அணி வெற்றி பெற்றது. நாட்டு நிலைமையின் காரணத்தால் 1991 ஆம் ஆண்டில் ஆட்டம் நடைபெறவில்லை.

சென்ற வருடம் மிகவும் பரபரப்பான ஆட்டத்தில் பரி. யோவான் அணித்தலைவர் பீ.- சஞ்சீவும், ஜீ. சிறீதரனும் தமது அணி தோல்வியடைவதில் இருந்து காப்பாற்றியது பலருடைய பாராட்டையும் பெற்றது.

துடுப்பாட்டம் இத்தகையதொரு விளையாட்டு. The Match is not over till Last Over is over. ■

(தகவல் - 'சானரம்')

## இலங்கை விவகா...

இந்நிலையில்தான் நான்கு வருடங்களின் பின்னர் இந்தியாவிற்கு இலங்கை தொடர்பான புதிய வெளியுறவுக் கொள்கை ஒன்றை வகுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. இக் கொள்கையானது இந்தியாவின் உள்நாட்டு மற்றும் பிராந்திய நலன்களைப் பாதிக்கக் கூடிய தாகவும் அமைதல் வேண்டும்.

இந்த வகையிலேயே இந்தியா கடைப்பிடிக்க வேண்டிய வெளியுறவுக் கொள்கை பற்றி டிக்சிற் தனது ஆலோசனைகளை முன் வைத்துள்ளார். இதில் முக்கியமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டியிருப்பதாவது, விடுதலைப் புலிகள் தொடர்பாகவும், அதன் தலைவர் பிரபாகரன் தொடர்பாகவும் டிக்சிற் முன் வைத்துள்ள கருத்துக்களாகும்.

இதில், டிக்சிற்றுக்கு இரு குறிக்கோள்கள் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. ஒன்று, இலங்கையில் இன்று சிறீலங்கா அரசுக்கு எதிராக பலம் பொருந்திய தலைமைத்துவத்தையும், தமிழ் மக்களுக்கு தலைமைத்துவம் கொடுக்கக்கூடிய சக்தியும் விடுதலைப் புலிகளிடமே உள்ளது என்பதாகும். ஏனைய தமிழ்க்குழுக்கள் பயனற்றவை என்பதை டிக்சிற் தனது கட்டுரையிலே வெளியிட்டுவிட்டார். இரண்டாவது, சிறீலங்கா இராணுவத்தால் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெல்ல முடியாது என்பதாகும். இதனால் இப்பிரச்சினையானது இலங்கையில் தமிழருக்கு தனிநாடு அமைப்பதற்கு வழிவகுத்துவிடும் என்பதும் ஆகும்.

இந்நிலையில் இந்தியா இவற்றைக் கருத்திற் கொண்டு புதிதாக ஒரு வெளியுறவுக் கொள்கையை வகுக்க வேண்டும். இக் கொள்கையானது டி.பி. விஜேதுங்காவின் கொள்கையினால் இலங்கையில் பாதிக்கப்பட்டு வரும் இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதோடு, இலங்கை விவகாரங்கள் இந்திய அரசியலைப் பாதிக்காதவாறும் பிரதேச நலன்களைப் பாதிக்காதவாறும் அமைய வேண்டும் என்பதே டிக்சிற்றின் நோக்கமாகும். அதாவது டி. பி.- விஜேதுங்காவின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கை, இந்திய நலனைப் பாதுகாப்பதாயும் சிறீலங்காவின் அரசியலில் இந்தியாவின் பிடி உறுதியாக இருக்க வேண்டும் என்பதோடு, தனிநாடு என்ற நிலைக்கு தமிழீழ விடுதலைப் போராட்டம் செல்வது தடுக்கப்பட வேண்டும் என்பதுமே டிக்சிற்றின் புதிய கொள்கையின் வடிவமாகும். ■

## அகதிகளை அப்புறப்படுத்தும் விஜேதுங்க அரசாங்கம்

கொழும்பில் அகதிகளாக இருந்து வந்தவர்களையும் அப்புறப்படுத்தி வெளியேற்றும் பணியில் விஜேதுங்க அரசாங்கம் இறங்கியுள்ளது. கொழும்பு சரஸ்வதி மண்டப அகதி முகாமில் வசித்து வந்த வாழைச்சேனை, வாகரை, ஏறாவூர்பற்று, மண்முனை வடக்கு, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அகதிகள் வசித்து வந்தனர். மட்டக்களப்பில் சகச நிலை திரும்பிவிட்டதாகக் கூறிவரும் சிறீலங்கா அரசாங்கம், தனது பொய்ப்பிரசாரத்தினை உறுதி செய்யும் நோக்கில் இவ்வகதிகளை மட்டக்களப்புக்கு அப்புறப்படுத்த முடிவு செய்துள்ளது. ■

# இந்தியாவின் நடவடிக்கை யாவும் கழுத்தை பிடித்து வெளியே தள்ளியது

"இந்திய அரசின் ஒவ்வொரு நடைமுறைகளும் எமது கழுத்தைப் பிடித்து வெளியேறு என்று சொல்வது போன்று ஒரு உணர்வை ஏற்படுத்தியது."

இவ்வாறு, அகதியாக இந்தியா சென்று இரண்டாவது கட்டமாக திரும்பிவந்தவர்களில் ஒருவரான செ. தேவராசா என்ற குடும்பஸ்தர் அண்மையில் யாழ். பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, "இந்தியாவில் நாங்கள் தங்கியிருந்த காலப்பகுதியில் பயப்பீதியுடனேயே வாழ்ந்தோம். அங்கே என்ன ஆபத்தான சம்பவம் நடந்தாலும் இலங்கைத் தமிழர் மீதே சந்தேகிப்பர். நாங்கள் அடிக்கடி விசாரணை செய்யப்படுவோம். சிலசமயங்களில் எம்மீது துன்புறுத்தல் செய்வார்கள். எங்களுக்கு பசியாற போதிய உணவுகள் கிடைப்பதில்லை. குறிப்பிட்டளவே, சாப்பாட்டிற்கான பணம் கிடைக்கும். வெளிவேலைக்கு நாங்கள் செல்வோம். அதுவும் அவர்களின் அனுமதி பெற்றே செல்லவேண்டும். ஒரு மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டங்களுக்கு செல்லக்கூடாதென கட்டாயமாக பணிக்கப்படும். எங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி அறிவு கிடைப்பதில்லை. எமது பிள்ளைகள் நல்ல கல்வி அறிவு இல்லாமல் தமது வாழ்க்கையை வீணடித்தனர். எம்மீது இந்திய அரசின் கெடுபிடியினாலும் பிள்ளைகளின் எதிர்கால கல்வியைக் கருத்திற்கொண்டும் நாங்கள் எமது சொந்த மண்ணுக்குத் திரும்பினோம்.

எங்குதான் பொருள் பணம் செல்வங்களோடு வாழ்ந்தாலும், எமது மண்ணில் எமது இனத்துடன் சேர்ந்து வாழ்வதுபோல திருப்தி ஏற்பட மாட்டாது" என்றார். ■

## கிழக்கிலங்கையில்...

பட்டு அபகரிக்கப்பட்டதை தடுத்து நிறுத்த முடியவில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 1016 சதுரமைல் நிலப்பரப்பில் 70 சதவீதமான 700 சதுரமைல் காணியை சேருவில தொகுதியாகவும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 1775 சதுரமைல் நிலப்பரப்பில் 50 சதவீதமான 900 சதுரமைல் காணியை அம்பாறைத் தொகுதியாகவும் சிங்களவர்கள் அபகரித்துக் கொண்டனர். தமிழ்பேசும் மக்களான தமிழர்களினதும், முஸ்லீம்களினதும் பாரம்பரிய வதிவிடமும் சுதந்திரமான தொழில்துறைகளை உள்ளடக்கிய பிரதேசமுமான இலங்கைத் தீவின் கிழக்கு மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பான 3,839 சதுரமைலில் (ஏறக்குறைய) 1,600 சதுரமைல் பரப்புடைய 42 வீதமான பொன்விளையும் பூமியை சிங்களவர்கள் அபகரித்துக் கொண்டுவிட்டனர். இத்துடன் நில்லாது மேலும் 400 சதுரமைல் காணிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இந்த அநியாயத்தை தடுத்து நிறுத்த கிழக்கு மாகாணத் தமிழ், முஸ்லீம் பூர்வீகக் குடிகளால் முடியவில்லை.

அன்று கிழக்கு மாகாணத்திற்கான பாராளுமன்றப் பிரதிநிதிகளில் 5 பேர் தமிழர்கள். 5 பேர் முஸ்லீம்கள். இருவர் மட்டுமே சிங்களவர். ஆனால் இன்று சிங்களவர்களால் இந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவ விகிதாசாரம் மாற்றப்பட்டுவிட்டது. புதிதாகக் குடியேறிய சிங்களவர்களின் நலனுக்காகவே அம்பாறைத் தொகுதி ஏற்படுத்தப்பட்டது. அம்பாறைத் தொகுதிக்காக அம்பாறை மாவட்ட எல்லைகள் பிரிக்கப்பட்டபோது, இங்கு 80 சத வீதத்திற்கும் அதிகமான தமிழர்களும் முஸ்லீம்களும் வாழ்ந்துகொண்டிருந்தனர். இவர்களின் நலனில் எவ்வித அக்கறையும் இல்லாமல் புதிய குடியேற்ற நகரமான அம்பாறைக்கே மாவட்ட நிருவாகக் கச்சேரி மாற்றப்பட்டது. சிறீலங்காவின் அரசியல் சாசனத்துக்குக் கூட முரணான வகையில் சிங்களத்தில் மட்டுமே இங்கு நிர்வாகம் நடைபெறுகிறது.

அம்பாறை மாவட்டத்திற்கு 3 முஸ்லீம் பிரதிநிதிகள், ஒரு தமிழ்ப் பிரதிநிதி, ஒரு சிங்களப் பிரதிநிதி என்ற வகையில் சிறீலங்காப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இருந்தது. இதன்படி அரசியல் பிரதிநிதித்துவம் அம்பாறை மாவட்டத்தில் 80 வீதம் தமிழ் பேசும் முஸ்லீம்களுக்கும் தமிழர்களுக்கும் இருந்தது. 20 சதவீத பிரதிநிதித்துவத்தைக் கொண்ட சிங்களவர் நீதிநியாயத்திற்கெல்லாம் முற்றும் முரணான வகையில் முஸ்லீம், தமிழ் பெரும்பான்மையினரின் உரிமைகளைச் சூறையாடுகின்றனர்.

அம்பாறைத் தொகுதிப் பிரதிநிதி சிறீலங்காவில் பிரதி அமைச்சராகவும் அம்பாறை மாவட்ட மந்திரியாகவும் உள்ளார். திருகோணமலை மாவட்டத்திற்கு இன்னொரு சிங்களவர் சிறீலங்காவின் மாவட்ட மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்குள்ள சிறீலங்காவின் பிரதிநிதிகளால் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஓரளவுக்கேனும் நிறைவேற்ற முடியவில்லை. இந்த மந்திரிகளில் சிலர் தமிழ் மக்களின் இலட்சிய உரிமைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்கள். தமிழரை யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு என்று பிரிப்பவர்கள். கிழக்கு மாகாணசபையை ஆட்சி செய்ய இங்குள்ளவர்களுக்கு முதுகெலும்பு இல்லையா எனச் சவால் விடுபவர்கள். வடக்கு கிழக்கு ஒன்றிணைவதை முற்றாக எதிர்ப்பவர்கள். முஸ்லீம் தமிழ்ப் பிரதேசங்களை உள்ளடக்கிய பிரதேசத்தை அம்பாறை மாவட்டத்தில் இருந்து பிரித்து, கல்முனை மாவட்டமாக மாற்ற எடுத்த முயற்சி கிழக்கிலங்கை முஸ்லீம் பிரதிநிதிகள் ஐவர் ஆதரித்தபோதும் ஒரு சிங்களவரால் தனிப்பட்ட ஆட்சேபனை மூலம் தூக்கி வீசப்பட்டது. 17 சதவீத சிங்கள பிரதிநிதித்துவம் 83 சதவீத தமிழ், முஸ்லீம் பிரதிநிதித்துவத்திற்கு எப்படி மதிப்பளிக்கிறது என்பதற்கு இது சிறந்த உதாரணம். இதிலிருந்து பேரினவாத மத்திய சிறீலங்கா அரசாங்கத்திற்கு கிழக்கிலங்கை முஸ்லீம், தமிழ் மக்களில் எதுவித அக்கறையும் இல்லை என்பதும் கிழக்கிலங்கை முழுவதையும் சிங்களவரின் ஆதிக்கத்திற்குள் விரைவில் கொண்டுவருவதும் அவர்களின் ஏகோபித்த இலட்சியம் என்பதையும் நம்மால் தெளிவாக உணரமுடிகிறது.

காணிக் குடியேற்றம் பற்றி சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைப்படி மகாவலி துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ள 45,000 காணித் துண்டுகளில் சுமார் 19,000 காணித்துண்டுகள் சிங்களவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதன்மூலம் மேலும் 1,00,000 சிங்களவர்கள் புதிதாக குடியேற்றப்பட உள்ளனர்.

இப்படியான நிலையில் 20 சதவீத வாக்குகளைக் கொண்ட முஸ்லீம்களால் இழந்த உரிமைகளை மீளப்பெற்று இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட இனமாகச் சுதந்திரமாகப் பாதுகாப்போடு வாழமுடியும் என்பது நடைமுறைச் சாத்தியமற்ற வெறும் கற்பனைக் கனவு. அண்மைக்காலங்களில் நடைபெறுவது போன்று முக்கியமான சந்தர்ப்பங்களில் சிங்களப் பகுதியில் உள்ள முஸ்லீம் தலைவர்கள் சிங்கள ஆட்சியாளர்களின் தூண்டுதலின் பேரில் கிழக்கிலங்கை முஸ்லீம்களுக்கு வெறும் ஆசைவார்த்தைகளைக் காட்டி, அரபு நாட்டு நன்கொடைகளை அரசியல் நோக்கங்களுக்காகத் துர்ப்பிரயோகம் செய்து கிழக்கிலங்கை முஸ்லீம்களை, தமிழர்களிலிருந்து பிரித்து சிங்களவர்களுடன் கூட்டுச் சேரவைப்பார்களேயானால் கிழக்கு மாகாணம் நிரந்தரமாக சிங்களப் பேரினவாத மத்திய அரசாங்கத்துள் அடங்கிப் போக வழிவகுக்கும்.

கிழக்கு மாகாணத்துக்கு தனியான ஒரு மாகாண சபை ஏற்படுமானால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இன்னல்களையும் ஏமாற்றங்களையும் நன்குணர்ந்த தமிழர், இனப்பாதுகாப்புக்கும் எதிர்காலச் சுபீட்சத்துக்கும் ஓரளவேனும் உத்தரவாதம் கொடுக்கக்கூடிய வடக்கு-கிழக்கு ஒன்றிணைந்த மாநில சபை அமைவதை விரும்புகின்றனர். கிழக்கு மாகாணத்திற்கு தனியான மாகாணசபை அமைவதை முற்றாக ஆட்சேபிக்கின்றனர். தாங்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள பெரும்பான்மை இனத்தவரோடு ஐக்கியமாக ஒன்றிணைந்து வாழ்வதையே முஸ்லீம்கள் விரும்புகின்றனர். இதன்படி கிழக்கில் வாழும் முஸ்லீம்கள் தமிழர்களோடு கூட்டுச் சேர்வதுதான் நியாயம். இல்லையேல் கிழக்கு மாகாணத்தில் தமிழர், முஸ்லீம்கள் பகைமையும் கலவரமும்தான் நிரந்தரமாகிவிடும். சிங்களப் பேரினவாத மத்திய அரசாங்கத்திற்கு கிழக்கு மாகாண முஸ்லீம்களின் சகல உரிமைகளையும் தனித்துவதத்தையும் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு பாதுகாப்புக்காக துப்பாக்கிகளையும் கொமாண்டோக்களையும் யாசிக்க நேரிடும். இதனால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்களும் தமிழர்களும் நிரந்தரமாகச் சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இறுதியில் எல்லாம் பறிபோய்விடும். இதைத்தான் ஒருசில சிங்களத் தலைவர்களும் தமிழ் முஸ்லீம் தலைவர்களும் விரும்புகின்றனர். இப்படியான பயங்கரவாதத்தையும் பாதுகாப்பற்ற நிலையையும் ஏற்படுத்தக்கூடிய தனியான கிழக்கு மாகாணசபை இங்குள்ளவர்களுக்கு உகந்ததல்ல" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ■

## நீண்டகால யுத்த....

இவ்வாறு பிரித்தானிய தொழிற் கட்சியின் வெளிவிவகார முன்னாள் நிழல் பேச்சாளர், பிரித்தானிய பாராளுமன்ற கமிட்டி அறையில் நடைபெற்ற 'சிறீலங்காவில் மனித உரிமைகள்' என்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய சர்வதேச மன்னிப்புச் சபையின் சிறீலங்காவுக்குப் பொறுப்பான பிரித்தானிய பிரதிநிதி பீட்டர் நிக்லஸ், "இலங்கைத் தீவில் மனித உரிமைகளைப் பேணுவது முதலில் சட்டபூர்வமான அரசாங்கத்தின் கடமை. சர்வதேச மன்னிப்புச் சபையும் அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை நிறத்தும்படி தொடர்ந்தும் வலியுறுத்தி வரும்" என்றார்.

ஆயுத விற்பனைக்கு எதிரான பிரச்சார இயக்கத்தின் பிரதிநிதி வில் மக்கோன் பேசுகையில், பிரித்தானிய அரசு சிறீலங்காவுக்கு ஆயுத ஏற்றுமதிகளை கையாண்ட விபரங்களை எடுத்துக்கூறி, வர்த்தக சுயநலனுக்காக இவ்வாறு செய்வது வழமையாகிவிட்டது எனக் கண்டித்தார். அத்துடன் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் மீண்டும் ஆயுதவிற்பனையை சிறீலங்காவுக்கு தொடங்கவேண்டும் என்ற தீர்மானம் கண்டிப்புக்குரியதுடன் நிலைமையை மோசமாக்கும் என்றும் கூறினார்.

சசெக்ஸ் பல்கலைக்கழக அபிவிருத்திக் கல்விநிறுவன பேராசிரியர் ஜேம்ஸ் மனர் தமது உரையில், சிறீலங்காவின் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட்டால் மட்டுமே அங்கு ஜனநாயகம் நிலைபெறும் எனக் கூறினார்.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த வோல்தம் பொரஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர் நீல் ஜெராட், தான் தொடர்ந்தும் தமிழ்மக்களின் துயர்துடைப்பதற்கான பணிகளில் தம்மால் இயன்றவற்றைச் செய்ய ஆவலாக உள்ளதாக உறுதியளித்தார்.

இக்கூட்டத்தில் சிறீலங்கா மனித உரிமைகள் இயக்கம், சிறீலங்காவின் ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்குமான பிரச்சார இயக்கம், சிறீலங்காவின் ஜனநாயகத்திற்கான இடம்பெயர்ந்த வழக்கறிஞர்கள் அமைப்பு, சிறீலங்காவின் நீதிக்கும் ஜனநாயத்துக்குமான கமிட்டி, சர்வதேச தமிழர் நிறுவனம் ஆகியோர் கூட்டாக சிறீலங்கா அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றினர்.

தீர்மானங்கள்

"இன்று பிரித்தானிய பாராளுமன்றத்தில் கூடியுள்ள எம். பிக்களும், அக்கறையுள்ள பிரித்தானிய பிரசைகளும், சிறீலங்காவை சேர்ந்தவர்களும், அகதிகளுமாகிய நாங்களும் சிறீலங்கா அரசாங்கத்தை பின்வருமாறு நடந்துகொள்ளுமாறு அழைக்கிறோம்.

1. தமிழ் மக்கள் மீதான குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்களை நிறுத்துங்கள். வடக்கு கிழக்கு மாகாணத்துக்குரிய போதிய உணவு, மருந்து வகைகளை வழங்குங்கள். இனப்பிரச்சினைக்கு அரசியல் வழியில் அமைதித்தீர்வு காண்பதற்கான ஏற்புடைய நடவடிக்கைகளை எடுங்கள்.
2. 1989 முதல் விசாரணைகள் எதுவுமின்றி கைதிகளாக உள்ள ஆயிரக்கணக்கான மக்களை விடுவியுங்கள். தினமும் சட்ட அங்கீகாரத்துடன் திட்டமிட்ட முறையில் நடைபெறும் கண்மூடித்தனமான கைதுகளையும், சித்திரவதைகளையும் நிறுத்துங்கள்.
3. ஆயிரக்கணக்கில் காணாமல் போயுள்ள மக்கள் பற்றியும், சமீபத்தில் கண்டறியப்பட்ட எலும்புக்கூட்டுச் சவக்குழிகள் பற்றியும் அர்த்தமுள்ள விளக்கத்தை வெளிப்படுத்துங்கள். தினமும் நடைபெறும் காணாமல் போகும் செயற்பாடுகளை நிறுத்துங்கள்.

அத்துடன் நாங்கள் சர்வதேச சமூகத்திடமும், நிதி உதவி புரியும் நாடுகளிடமும் பின்வருவனவற்றை உறுதிசெய்யும்படி வேண்டுகிறோம்.

1. சிறீலங்கா அரசாங்கம் நாம் மேலே கேட்டவற்றை அமுல்படுத்துவதை உறுதி செய்யுங்கள். அத்துடன் குறிப்பாக ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளரை நாம் மேலே கூறப்பட்டவைகள் நடைமுறைக்கு வரும் வரை, அவருக்கு இருக்கும் பொறுப்பையும், கடமைப்பாட்டையும் உணர்ந்து அகதிகள் திருப்பியனுப்பப்படுவதை அனுமதிக்காது தடுக்க வேண்டுமெனக் கேட்கிறோம்.
2. ஆயுதங்களைளோ, சித்திரவதைகளுக்கு உதவும் உபகரணங்களையோ சிறீலங்காவுக்கு விற்காது தடை செய்யுங்கள்.
3. நீங்கள் வழங்கும் உதவிகள் கட்சி அரசியலுக்கும், இராணுவ நோக்குகளுக்கும் பயன்படுத்தப்படாமல் உண்மையில் தேவையுள்ளவர்களுக்கு சென்றடைவதை உறுதிசெய்யுங்கள். . ■

## யுத்த சூழலுக்கு.....

போட்டி ஒன்றை மாவட்ட ரீதியாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடத்தியது. வயல்களில் இருந்து ஒரு ஏக்கரில் சராசரி நூற்றுக்கு மேற்பட்ட புசல் நெல்லை அறுவடை செய்த ஆறுபேர் வேளாண்மை மன்னர் விருது பெற்றனர். கதிரவேலு சற்குணராசா (சங்கானை -யாழ்), சண்முகம் பாலேந்திரன் (கண்டாவளை, பண்டிசுட்டான் - கிளிநொச்சி), சி. சிவஞானம் (இராமநாதபுரம் -கிளிநொச்சி), கந்தையா முத்துக்குமாரு (இறம்பைக்குளம், நெடுங்கேணி -முல்லைமாவட்டம்), வேலுப்பிள்ளை சிவபாதம் (புதுக்குடியிருப்பு - முல்லை மாவட்டம்), யோசப் சகாயராசா பெரேரா (மன்னார் மாவட்டம்) ஆகிய ஆறு சாதனையாளர்களுக்கும் தங்கப்பதக்கமும் வேளாண்மை மன்னர் விருதும் வழங்கப்பட்டன.

இவ்வாறு யுத்தசூழலுக்கு மத்தியிலும் தேசநிர்மாணப் பணிகள் தமிழீழ மக்களாலும் தமிழீழ அரசு நோக்கிய அரசாலும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேவேளை சிறீலங்காவின் எத்தகைய கொடிய யுத்தத்தையும் எதிர்கொள்ளக்கூடிய முறையில், தமிழீழ மக்களும் தமிழீழ விடுதலை புலிகளும் தேச பாதுகாப்புக்கான எல்லா முயற்சிகளிலும் துரிதமாக ஈடுபட்டுவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# அகதிகளின் வீட்டில் சிங்களவரை குடியேற்றிய பௌத்த பிக்குகள்

திருகோணமலையில் சிறீலங்கா அரசாங்கத்தின் அரச பயங்கரவாதத்தினாலும், சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் ஆக்கிரமிப்பாலும் பல நூற்றுக்கணக்கான தமிழ், முஸ்லீம் மக்கள் வேறு மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து வாழ்வது அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு இடம்பெயர்ந்து வாழும் அகதிகளின் திருகோணமலை வீடுகளில், பௌத்த பிக்குகள் சிங்களவர்களைக் குடியமர்த்தியுள்ள உண்மை இப்பொழுது வெளியாகியுள்ளது.

பௌத்த பிக்குகளால் குடியமர்த்தப்படும் இந்தச் சிங்களவர்களை சிறீலங்காப் படைகள் ஆயுதமயப்படுத்துவதுடன் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பும் வழங்கி வருகின்றன. ■

## ஐரோப்பிய நாடுகளில்

# ஈழத்தமிழர் நடாத்திய மே தின ஊர்வலங்கள்





## பிரான்சில்..






## ஜேர்மனியில்..





## சுவிற்சலாந்தில்..

**U.T.O**
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

**L.T.T.E**
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

**W.T.C.C**
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

**T.C.G**
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

**T.C.C**
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

**T.C.C**
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

**T.C.C**
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

**T.C.C**
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

**T.C.C**
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

**T.C.C**
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers,